
கல்கி

KALKI 2.3.1969

40 காசு





பிரவுன் & போல்ஸன் மற்றும்

ரெக்ஸ்

தயாரிப்புக்கள்

உங்கள் சமையலுக்குப் பல்வேறு சுவை கூட்டுகின்றன.






ரெக்ஸ் ஜெல்லி க்ரிஸ்டல்

ஆறு இனிய பழச் சுவைகள். விரைவிலே எளிதாகத் தயாரிக்கலாம். குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை யாவரும் விரும்பக் கூடியது.





ரெக்ஸ் பேகிங் பவுடர்

தின்பண்டங்களை மென்மையாக்க சிறிதே சேர்த்தால் போதும். கேக், பிஸ்கோத்து, பக்கோடா, பூரி, குலாப்ஜாமூன் தயாரிக்க உபயோகியுங்கள்.



பி & பி கஸ்டர்டு பவுடர்

மென்மையான செழுமையுடன் இனிமையானது. முட்டை கலவாதது. ஃபிரினி, ஐஸ் க்ரீம், கீர், ட்ரைஃபிள் தயாரிக்க ஏற்றது. ஜெல்லி மற்றும் பழச் சாலெட்டுடன் பரிமாறும் போது சுவை கூட்டுகிறது.







பி & பி வெரைட்டி கஸ்டர்டு பவுடர்


ஆறு சுவைகள், புட்டிங்குகள், பழ உணவுகள் தயாரிக்க உகந்தது.






பி & பி ஃப்ளேவர்டு கார்ன் ஃப்ளவர்

ஐந்து சுவைகள், இனிமையான ஹல்வாக்கள் தயாரிக்க பாலோடு மென்மையாகக் கலக்கலாம்.





பி & பி பேடென்ட் கார்ன் ஃப்ளவர்

குழம்புகளையும், இறைச்சிக் குழம்பையும் இறுக்கமாக்குகிறது. காரமான கபாப், சமோசா, பட்டீஸ் தயாரிப்பதில் மாவுடன் சேர்க்கச் சிறந்தது. குழந்தைகளுக்கும் நோயாளிகளுக்கும் மிகவும் நல்லது.

உங்கள் சமையல் உன்னதமாக இருக்க , உயர்ந்த சாமானையே உபயோகியுங்கள்

கார்ன் பிராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிட்.,
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு, பம்பாய் 1. BR.

ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்:
பாரி & கம்பெனி, டேர் ஹவுஸ், மதராஸ் 1. மற்றும் அவர்களது கிளைகள்

கல்கி


கீலக வருஷம் மாசி மாதம் 19௳ — 1969 மார்ச் 2௳


பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



சென்னை தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ் காரியாலயத்தின் ஜெனரல் மானேஜர் திரு டி. கே. தியாகராஜன் அவர்கள் குமாரத்தி சௌபாக்கியவதி ஜயந்திக்கும், புது தில்லி திரு கே. வி. ரமணி அவர்கள் குமாரர் சிரஞ்சீவி **வி. ஸ்ரீனிவாசன்** அவர்களுக்கும் சென்னை எக்ஸ்பிரஸ் எஸ்டேட்டில் 7-2-69ல் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்துக்கும், அன்று மாலை நடைபெற்ற வரவேற்புக்கும், ஏராளமான உறவினர்களும், நண்பர்களும், நகரப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திச் சென்றனர்.


காங்கிரஸையே மக்கள் ஆதரிக்கின்றனர்
சவானுக்குக் காது கேட்கவில்லை!
வெளியேறு
வெளியேறு
வெளியேறு
வெளியேறு
வெளியேறு
வெளியேறு
வெளியேறு
பஞ்சாப்
வங்காளம்
ஒரிஸ்ஸா
தமிழ்நாடு
கேரளம்


கூட்டு மந்திரிசபைகள்
காங்கிரஸ்
PK
பசித்த புலி புல் தின்னும் போலிருக்கே!



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 28 □ இதழ் 31

நாட்டைப் பற்றியுள்ள புற்றுநோய்

சுதந்திரம் பெற்றவுடன் இந்தியாவை மொழிவாரி ராஜ்யங்களாகப் பிரித்து, அவற்றுக்கு ஓரளவு சுயாதீனம் தந்து, தில்லியின் கீழ் சமஷ்டி நிர்வாகம் புரிய வேண்டும் என்று கருதப்பட்டது. இவ்வாறே மொழிவாரி ராஜ்யங்கள் வகுக்கப்பட்டன. பின்னர் ராஜ்யங்களுக்கிடையே நிலவிய எல்லைச் சர்ச்சைகளும் பெருமளவுக்குத் தீர்த்து வைக்கப்பட்டன. முன்னாள் மன்னர்களின் சமஸ்தானங்களும் மொழிவாரியாக அமைந்த மாகாணங்களில் பிரிவினை செய்யப்பட்டன.

இவ்வாறு பல பெரிய பகுதிகள் தனித் தனி ராஜ்யங்களாக உருவெடுத்தன. ராஜ்யங்கள் பெரிதாக இருப்பதே ராஜ்யவாசிகளுக்கு ஒரு திருப்தியைத் தந்தது. புதிய அமைப்பின் கீழ், மைசூர் ராஜ்யம் அதன் வட பகுதியிலுள்ள கன்னடம் வழங்குகின்ற மங்களூர், கர்நாடகம் முதலியவற்றைப் பெற்றது: ஆந்திரம் தெலிங்கானாவைப் பெற்று, 'விசால ஆந்திரா' வாயிற்று; கொச்சி, திருவிதாங்கூர், மலபார் யாவும் சேர்ந்து கேரளமாயிற்று; குஜராத்துக்குக் கத்தியவார் கிடைத்தது; மத்திய பிரதேசம் என்ற பெரியதொரு ராஜ்யமும் உண்டாகி வளர்ந்தது. இவற்றோடு ஏற்கனவே பெரிய பரப்பளவு கொண்ட பீஹாரும் உத்தரப் பிரதேசமும் இருந்தன.

அந்தந்த மொழிக்காரர்கள் தங்களுக்குப் பெரிய ராஜ்யம் கிடைத்ததில் மகிழ்ந்திருக்கும்போது, ஹிந்தியர்களுக்கு ராஜ்ய அமைப்புக்கு மேம்பட்ட வேறொரு ஆசை உண்டாயிற்று. அகில பாரதத்திலுமே தாங்கள் பெரும்பான்மை கொண்டாடி, அந்த பலத்தினால் ஆளுகை செலுத்தலாம் என ஹிந்தியர் ஆசை கொண்டனர். சர்க்கார் உத்தரவின் கீழ், செயற்கையான முறையில் தங்கள் மொழியை அகில இந்திய ஆட்சி மொழியாகவும் தொடர்பு மொழியாகவும் செய்ய வேண்டும் என்ற பேராசை ஹிந்தி மொழித் தலைவர்களைப் பற்றிக் கொண்டது.

இதைத் தொடர்ந்து தேசத்தில் பிரிவினைப் போக்குகள் ஏற்பட்டன. அகில இந்திய ரீதியில் ஹிந்தியர் மேற்கொண்ட அதிகாரப் போக்கு, ஒவ்வொரு ராஜ்யத்திலும் பெரும்பான்மையாக உள்ள பகுதியினருக்கும் உண்டாகக் கூடும் என்ற அச்சம் புதிதாக அந்த ராஜ்யங்களில் சேர்ந்த சிறிய பகுதியினரிடம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு பெரிய ராஜ்யத்தில் சேர்ந்து விட்டோம் என்பதில் முன்பு அவர்கள் கொண்ட பெருமை போய் விட்டது. ஆங்காங்கு கிளர்ச்சிகள் தலைதூக்கியுள்ளன. ஆங்காங்கு சிறு சிறு தனி ராஜ்யங்கள் அமைய வேண்டும் என்ற ஆசை பரவி வருகிறது.

ராஜ்யங்களில் பூரணமாக ஒன்றிவிடாத பகுதியினர் தமக்கென, சிறிய தனி ராஜ்யம் கேட்பதைத் தில்லியும் வரவேற்பதாகத் தோன்றுகிறது. ராஜ்யங்களின் அளவு சிறிதாக இருந்து அவை ஓரளவு சுயாட்சி பெற்றிருந்தால் பல வர்க்கத்தினருக்கும் நீதி கிடைக்க அதிக வாய்ப்பு உண்டு என்ற கருத்து தோன்றி வருகிறது. சிறு ராஜ்யங்களாக இருந்தால் தில்லிக்குத் தனது மேலதிகாரத்தை வலியுறுத்திக் கொள்ள மிகவும் சௌகரியமாக இருக்கும்.

பாரத சமஷ்டிக்குள் சிறு சமஷ்டிகள் ஏதோ ஒரு விதத்தில் தோன்றக்கூடும். பெரிய ராஜ்யங்களான உத்தரப்பிரதேசமும், பீஹாரும் கூட நிர்வாகக் காரணங்களுக்காக இரண்டாகப் பகுக்கப்படலாம்.

இதையெல்லாம் செய்தான பின்பும் சட்டம், ஒழுங்குப்பாடு இவற்றுக்கான பொறுப்பைத் தில்லிதான் ஏற்கவேண்டும். அன்றாட போலீஸ் நடவடிக்கைகளுக்கு உகந்த முறையில் மட்டுமே ராஜ்யங்களுக்குச் சட்டத்திலும், ஒழுங்குப்பாட்டிலும் பொறுப்பு உண்டு. மற்றபடி நாட்டில் சட்டத்தின் ஆட்சி நிலவுமாறும், மக்கள் ஒழுங்குப்பாட்டுடன்

நடக்குமாறும் செய்கிற மகத்தான பணி மத்திய சர்க்காருக்கே உரியது.

பாரத ஜனநாயகத்தை இப்படிச் சிறு சிறு துண்டாக்கிய பின்பும் ஜனநாயகம் மாறுமல் இயங்க முடியும். ஆயினும் இதற்கு நம் நாட்டின் ஆட்சியில் புரையோடியுள்ள ஒரு நிலைமைக்குப் பரிகாரம் காண வேண்டியது அவசியம்.

கொள்கைகளை வகுப்பது, அக்கொள்கைகளுக்குச் செயலுருவம் தருவது ஆகிய இரண்டுக்கும் இடையே ஏற்பட்டுள்ள குழப்பம், சுதந்திரம் பெற்றதிலிருந்து கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளாக நாட்டு நிர்வாகத்தைப் புற்று நோயாகப் பற்றி இருக்கிறது. 'மந்திரிகளும், சட்டசபையாளரும் கொள்கைகளை வகுக்க மட்டுமே வேண்டும்; அரசாங்கம் மாறினாலும் நிரந்தரமாக இருக்கும் அதிகாரிகளே அவற்றைச் செயல்படுத்த வேண்டும்' என்கிற சீரிய முறை சுதந்திர இந்தியாவில் பாதிக்கப்பட்டிருக்கிறது. மந்திரிகளும் சட்டசபையாளரும், கொள்கைகளை அமுல் செய்ய வேண்டியவர்களும் தாங்களே என்ற ரீதியில் தவறான வழக்கத்தை ஏற்படுத்தி வருகிறார்கள். இதனால் நிர்வாக அதிகாரிகள், தாங்களாகச் செயல் எடுக்கின்ற ஊக்கத்தை இழந்து, எதைச் செய்ய வேண்டுமாயினும் மந்திரிமார்களின் உத்தரவை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. அதிகாரிகளின் பணியில் செல்வாக்குள்ள சட்டசபையாளர்கள் தலையிட்டு அவர்களை ஆட்டி வைக்கின்றனர். அதிகாரிகளின் தொழில் வாழ்க்கை மந்திரிகளின் தயவில் இருப்பதால் அவர்களும் இந்தத் தலையீட்டுக்கு அடிபணிகின்றனர். இந்தியாவில் நல்லாட்சி ஏற்பட வேண்டுமானால் இந்தப் புற்று நோயைக் குணப்படுத்தியாக வேண்டும். இல்லாவிடில் லஞ்சமும், சலுகையும், அநீதியும் அதிவேகமாகப் பரவும்.

சோஷலிஸம் என்பது சர்க்கார் சர்வாதிபத்தியமாகி விட்டதால், சர்க்காரின் பொருளாதார அதிகாரம் காரணமாக லஞ்சம், பரவி, மேற்சொன்ன புற்றுநோயும் உக்கிரமாகிறது.

இந்த நிலையில் ராஜ்யங்களும் சிறியவையாகிவிட்டால், கொள்கை வகுப்பவர்களும் அமுல் செய்பவர்களும் மிகவும் நெருக்கமாகி விடுவார்களாதலால் நிர்வாகத்தில் அரசியல்வாதிகளின் தலையீடு மேன்மேலும் வலுக்கும். சர்க்காரின் நடத்தையும், அதைத் தொடர்ந்து மக்களின் நடத்தையும் கீழே கீழே செல்லும்.

எனவே, சர்க்காரும் 'நீதிமன்றமும்' தனித் தனி அங்கங்களாக இருப்பது போல் அரசியல் இயந்திரமும் நிர்வாக அதிகாரிகளின் இயந்திரமும் தனித் தனியாக இயங்க வழி செய்வது அவசியமாகும். நல்ல முறையில் இவ்வாறு சுதந்திரமான நிர்வாக பீடத்தை அமைத்தால்தான், பாரதத்தின் ராஜ்யங்கள் சிறிய விஸ்தீரணத்தில் அமைந்தாலும், இங்கு ஜனநாயகம் வாழக் கூடும். அதோடு தேச மக்களின் சீலமும் காக்கப்படும். நோயுற்றிருக்கும் தேசிய சீலத்தை இனியேனும் குணப்படுத்தினால், நமது அருமைத் தாய்நாடு நல்ல நிலை அடையும் என்பதில் சந்தேகமில்லை.

ஆயினும் இந்த நம்பிக்கை நிறைவேற வேண்டுமானால் அதிகாரத்தில் நாட்டம் காட்டாமல், தேச நலனில் மட்டுமே நாட்டம் காட்டுகிற மத்திய சர்க்கார் இருந்தாக வேண்டும். இடைத் தேர்தல்களுக்குப் பிறகேனும் காங்கிரஸ் தனது பலவீனத்தை உணர்ந்து, கட்சிப் பற்றற்ற அறிஞர்களின் மந்திரி சபைக்கு இடமளித்தால்தான், நமது எதிர்காலம் குறித்த பொற்கனவு நனவாக முடியும். தேச பிதாவின் ஆன்மா பார்லிமென்டில் உள்ள காங்கிரஸ் ஜமீன்தார்களிடம் இந்தச் சிந்தனையைத் தூண்டுமாக!

(அடிப்படை: ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது.)





இவ்வருடம் ஸ்ரீ காஞ்சி ஆசாரியர்கள் ஏலூருவில் சிவராத்திரி பூஜை செய்து, சிவப்பழமாகவே கனிந்து காட்சி அளித்தார்கள். விஜயவாடா பக்தர்களும், ஏலூரு பக்தர்களும் சமர்ப்பித்திருந்த இரு கிரீடங்களையும் அணிந்து, ஸ்ரீ காமாக்ஷியின் பாதாரவிந்தத் துதி பொறித்த வஸ்திரத்தைச் சாத்திக் கொண்டு தரிசனம் தந்தார்.

ராஜாஜியின் கருத்துக்கள்



மக்கள் ஆட்சி என்பது நல்லதுதான். ஆனால் ஒரு பெரிய தேசத்தில், கலந்தாங் கட்டியாகப் பலதரப்பட்டவர் வாழும் தேசத்தில், மக்கள் ஆட்சி என்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாலேயே நடத்தப்படுகிறது. தேர்வு பெற்ற சிலருக்கு அதிகார சக்தி கிடைக்கிறது. மக்களைக் கவர்ந்து அவர்களால் தேர்ந்தெடுக்கப்படுவது சுலபம். ஆனால் தேர்வு பெற்றபின் தீர்க்க தரிசனம் வாய்ந்த கொள்கைகளை வகுத்துக் கொண்டு, அவற்றைப் பின்பற்றுவது கஷ்டம்.

பொதுவாக எல்லாத் தேசங்களின் பிரதிநிதிகளும் ஓர் இனத்தில் கொள்கைத் தவறு செய்வதைப் பார்க்கிறோம். அண்டை நாடுகளுடன் அன்பில் இணையாமல், அவற்றிடம் அவநம்பிக்கையும், வெறுப்பும் பாராட்டுவதே இக்கொள்கை. தமக்கு அண்டை நாடு பாதகம் செய்யக்கூடும் என்ற கருத்தில் இரு தரப்பினரும் பரஸ்பரம் விரோதம் கொள்கின்றனர். பக்கத்திலுள்ள நாட்டைத் தாண்டி, தொலைவில் உள்ள நாடுகளிடம் நட்புக்கொள்ளத் தோன்றுகிறது. இதனால் உலகெங்கிலும் உரசல்களும், போர்க் குமுறல்களும் உள்ளன. அண்டை நாட்டினருக்கு உதவி புரிந்து முன்னேற்றமல், வெறுப்புச் சித்தாந்தமே பரப்பப்படுகிறது.

அண்டை நாட்டிடம் வெறுப்பும் அவநம்பிக்கையும் கொள்வதே இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் தேச பக்தியாகத் தோன்றுகிறது; பாதுகாப்பு உணர்ச்சியாகத் தோன்றுகிறது. மக்களிடம் வெறுப்பைத் தூண்டி விட்டுப் பிராபல்யம் அடைவது எளிதாக உள்ளது. இப்படிப்பட்ட அரசியல்வாதிகளின் வர்க்கம் நன்கு கொழுத்து வருகிறது.

ஆனால் நீண்ட கால அடிப்படையில் பார்த்தால் இது எவ்வளவு நாசகரமானது எனத் தெரியும்.

உலக சர்க்காரைப் பற்றியும், உலக சமாதானம் பற்றியும் பெரிதாகப் பேசப்படுகிறது. முதலில் அண்டை நாட்டிடம் நட்பு செலுத்துவதில் முழு மூச்சுடன் முயலுவோம். இதில் நாம் வெற்றி பெற்றால் பிறகு பெருமிதத்துடன் மற்ற நாடுகளுக்கும் நல்லுரை கூறலாம்.

நாம் மேற்கொண்டுள்ள காரியத்தில் வெற்றி பெற வேண்டுமாயின், அதற்கு முதல் தேவை, நாமே அந்தக் காரியத்தின் முக்கியத்துவத்தைப் பூரணமாக உணர்ந்திருப்பதுதான். நமது ரிஷிகள் மகத்தான தவம் புரிந்தபோது, தமது வாழ்க்கையை விட இலட்சியத்தை முக்கியமாகக் கொண்டதாலேயே நோக்கத்தை எய்தினர். எவ்வளவு சித்திரவதைப் பட்டாலும் நமது ரிஷிகளும், கிறிஸ்து சமய பிராணத் தியாகிகளும், தங்கள் இலட்சியத்தில் சந்தேகம் இன்றி, பாதையைத் தொடர்ந்தனர். இன்று நாம் அதே போல் அண்டை நாட்டுடன் நட்பு பூணுவதன் அதிமுக்கியத்வத்தை உணர்ந்தாக வேண்டும். மற்ற எல்லாப் பிரச்னைகளும் இரண்டாம் பட்சமே என்ற உணர்வைப் பெற வேண்டும். பாகிஸ்தானுடன் நாம் நட்புப் பெற்று, நமது ராணுவச் செலவைக் குறைத்துக் கொண்டால்தான் நம் நாட்டின் நிதி நெருக்கடி தீர்ந்து, நாம் அந்நியரைச் சாராமல் வாழ முடியும். இந்த உணர்வை ஒரு தவமாக நாம் இயற்றி நிறைவு பெறுவதற்குக் காந்தி நூற்றாண்டு உகந்த சமயமாகும்.

❀❀❀

தவற்றோடு போட்டி போடுவதால் அதை வெல்ல முடியாது. தவற்றை எதிர்ப்பதே அதை வெற்றி கொள்ள வழி. கம்யூனிஸ அடிப்படையான சர்க்கார் சர்வாதினத்தைத் தானும் பின்பற்றினால் கம்யூனிஸ்ட்களை வென்றுவிடலாம் எனக் காங்கிரஸ் எண்ணியது. இது எவ்வளவு தவறு என்பது மேற்கு வங்காளத்தைப் பார்த்தால் தெரியும். மார்க்ஸிஸ்டுகள் அங்கு வெற்றி பெற்றதற்குக் காங்கிரஸே பெருமளவுக்குக் காரணம். சர்க்கார் சர்வாதினக் கொள்கையில் அது கம்யூனிஸ்ட்களுடன் போட்டியிட்டதால், கம்யூனிஸக் கொள்கையை மேலும் ஊக்கியதாகவே ஆயிற்று. வங்காளம் என்றோ ஒரு நாள் மாவ் சே துங்கின் சாம்ராஜ்யத்தில் அடக்கமானால் அதற்குப் பெரும்பாலும் காங்கிரஸே பொறுப்பாளியாகக் கருதப்படும்.

இத்தனை ஆண்டுகளாகத் தனது சர்க்கார் சர்வாதினக் கொள்கை மூலம் காங்கிரஸானது கம்யூனிஸ்ட் கட்சியை வளர்த்து வந்திருக்கிறது, — வெளிப் பார்வைக்கு எதிர்ப்பதாகத் தோன்றினும்.

❀❀❀

இந்தியாவில் நகரங்கள் பெருகி வருவது பற்றி ஒருவரது கருத்து யாதாயினும், இது ஒரு பிரத்யட்ச உண்மையாகிவிட்டது. இதனால் ஏற்பட்டுள்ள பிரச்னைகளுக்கு நாம் முகம் கொடுத்தாக வேண்டும். நகரங்கள் இன்றி இன்று நாட்டுப்புறம் வாழ முடியாது.

இந்தியாவின் பெரிய நகரங்களை ஒரு பகுதிக்கு மட்டும் உரியனவாகக் கருதக்கூடாது. அவை அகில இந்தியப் பொதுச் சொத்துக்களாகும். எனவே, இந்த நகரவாசிகளின் குடிநீர்ப் பிரச்னை அகில இந்தியாவின் பொறுப்பாகும். நீர்ப் பங்கீட்டில் பிரதேச பாத்தியதை கோரச் சர்ச்சை கிளப்பி, மத்தியஸ்தம் எதிர்பார்ப்பது பொருளற்ற செயல். எல்லாப் பெரிய நகரங்களையும் குடிப்பதற்கு உகந்த எல்லா நீர் நிலைகளையும் அகில தேசிய விஷயங்களாக்குவதற்கு யூனியன் சர்க்கார் சட்டம் இயற்ற வேண்டும். குடிநீர் நிலைகள் அனைத்தையும் எல்லா நகரங்களுக்கும் பயன்படுத்துவதற்கு ஓர் அதிகார

பூர்வமான அமைப்பை ஏற்படுத்த வேண்டும். அரசியல்வாதிகளின் பிரதேச உரிமைகளுக்கு இடம் தராமல், எஞ்ஜினியர்களே எந்த நீர்நிலையை எப்படி உபயோகிக்கலாம் என்று முடிவு எடுக்க வேண்டும்.

* * *

காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் சர்க்காரைப் பகிரங்கமாகக் கண்டித்துப் பேசக்கூடாது என்று பிரதமர் கேட்டுக்கொள்ளத் தேவை ஏற்பட்டிருக்கிறது. இதிலிருந்து அக்கட்சிக்குள் நிலவும் கருத்துக்களை அறியலாம். தேசத்தின் கருத்தை ஆளும் கட்சியின் அங்கத்தினர்களும் நீண்ட காலம் புறக்கணிக்க முடியாது எனத் தெளிவாகி விட்டது.

கண்டிக்கப்படும் விஷயங்களில் திருந்துவது சர்க்காரின் உத்தேசமாயின், பகிரங்கக் கண்டனத்தைத் தடை செய்வதற்கு அர்த்தம் உண்டு. ஆனால் முன்போலவே இனியும் செய்வதற்காகவே, கருத்தைத் தடை செய்தால் அது அரசியல் அறிவீனமாகும். தேசத்துக்கு ஊறு விளைவிப்பதுமாகும்.

* * *

புனாவில் உள்ள தமது அரண்மனையை ஆகாகான் அவர்கள் காந்தி ஸ்மாரக் நிதிக்கு வழங்கியிருப்பது பெரும் பாராட்டுக்குரியது. இங்குதான் காந்தியடிகள், தகாத சமயத்தில் சிறை வைக்கப்பட்டதாலும், கஸ்தூரி பா, மகாதேவ தேசாய் ஆகியோரின் மரணத்தாலும் மகத்தான மன வேதனைக்கு ஆளாகி இருந்தார்.

* * *

பார்லிமெண்டில் திரு அண்ணாதுரைக்குச் சூட்டப்பட்ட புகழ் மாலைகளுக்கு அவர் முற்றிலும் தகுந்த பாத்திரமாவார். இந்தப் புகழுரைகள் தமிழ்ப் பண்புக்கே சூட்டப்பட்டவை எனத் தமிழ் மக்கள் அனைவரும் கொள்ளலாம். அண்ணாதுரையின் அரசியல் நடத்தையில் தமிழ்ப் பண்பு பூரணமாகப் பிரதிபலித்தது. இதைக் கட்சி வித்தியாசமின்றி எல்லாரும் பாராட்டியுள்ளனர்.

* * *

உணவு தானிய வியாபாரத்தில் மண்டலத் தடைகளை ஆட்சேபித்து சுதந்திரக் கட்சியின் நிர்வாகக் குழு தீர்மானம் செய்திருப்பது குறித்து மகிழ்கிறேன். பஞ்ச நிலையில் உள்ள பகுதிகளுக்குத் தானியத்தைச் செல்ல விடாத இத்தடைகள் பிரதேசச் சுயநலன்களை வளர்த்து, இந்தியாவை ஒன்றோடொன்று போரிடும் பல பகுதிகளாக்கியுள்ளன. விவசாயிகளுக்கு அகில இந்தியச் சந்தை இல்லாதபடி செய்வது அடிப்படையிலேயே தவறாகும்.

விவசாயத்தின் மீது விதித்துள்ள புது வரிகளை — குறிப்பாக வருமான வரியை — சுதந்திரக் கட்சி வன்மையாகக் கண்டித்திருப்பது ஒரு நற்செய்தி. விவசாயிகளின் விவகாரங்களுக்கு வருமான வரியின் காரியக் கிரமங்கள் பொருந்தா. இதனால் சகிக்க வொண்ணாத லஞ்சமும், கொடுமைப்படுத்தலும் விளையும்.

* * *

பார்லிமெண்டில் நடந்த நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தில் ஒன்று தெளிவாயிற்று. அமைதியாக வாழும் சில வர்க்கத்தினரிடம் வெறுப்புக் கொண்டு, ராணுவ மோஸ்தரில் பிரதேசத் தலைவர்கள் சேனைகள் நடத்துவதைச் சக்திவாய்ந்த முறையில் அடக்க வேண்டும்; இதுவரை சர்க்கார் செய்தது போதாது என்பது தெளிவாயிற்று: 'சேனை'களுக்கு ஊக்கம் தருவதில் உள்ள அரசியல் நோக்கம் அனைவரும் அறிந்ததே. ஆனால் இவற்றால், நம்மில் ஒவ்வொருவரும் விரும்புகிற தேச ஒற்றுமை பயங்கரமாகப் பாதிக்கப்படுகிறது. சமீபத்தில் பம்பாயில் சட்டமும் ஒழுங்குப்பாடும் ஸ்தம்பித்ததிலிருந்து படிப்பினை பெறலாம்.

யூனியன் சர்க்கார் ஆழ்ந்து சிந்தித்து, இனிமேலாயினும் உறுதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்ட ரீதியில் எழுகிற சிரமங்களைப் பார்த்து ஸ்ரீ சவான் எளிதில் குழம்பி விடுவதாகத் தோன்றுகிறது. சுதந்திரத்துக்கு முற்பட்ட ஆட்சிக் காலத்துத் தஸ்தாவேஜிகளை அவர் படித்துப் பார்க்க வேண்டும். காந்திஜியின் தலைமையில் பெற்ற சுதந்திரம், குற்றத்துக்கு லைசென்ஸ் தந்து எங்கும் ஒழுங்கின்மை ஏற்படுகிற இழிநிலையை அடைய விடக் கூடாது.

யார் ஆண்டாலும், ஆட்சி முறை யாதாயினும் — மக்களின் வாழ்க்கையில் சட்டத்துக்கு உட்பட்ட ஒழுங்கு வேண்டும். ஒழுங்கை ஏற்படுத்தவே சட்டம். ஒழுங்கீனம் செய்பவர்களுக்குச் சாதகமாகச் சட்டத்தைக் காட்டலாகாது. சட்டம் என்கிற கத்தியை ஒழுங்குமுறையின் விரோதிகளிடம் கொடுக்கலாகாது.

பம்பாயில் நடைபெற்ற துக்க சம்பவத்தை —கொள்ளி வைப்பு, சூறையாடல், பயப் பிராந்தி ஆகியவற்றை — பல கோணங்களில் அலசிப் பார்க்கலாம். அப்படிப் பார்த்தும் இருக்கின்றனர். ஆனால் இவற்றில் சர்க்

ஆஸ்திக மகாஜனங்களுக்கு வேண்டுகோள்

தஞ்சாவூர் மாவட்டம் உமையாள்புரத்திலுள்ள ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமியின் ஆலயம் ஜீர்ணமாகியிருப்பதால் ஆலயத்தைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்யப் பெருமக்கள் முயற்சி மேற்கொண்டுள்ளனர். ஆஸ்திகர்கள் யாவரும் மனமுவந்து தங்களால் ஆன உதவியைப் புரிந்து ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமியின் கிருபைக்குப் பாத்திரமாகும்படி கேட்டுக் கொள்கிறோம். நிதி அனுப்ப வேண்டிய முகவரி: எஸ். வெங்கடராமன், காரியதரிசி, ராஜகோபாலஸ்வாமி திருப்பணிக் குழு, உமையாள்புரம், கபிஸ்தலம் வழி, தஞ்சை மாவட்டம்.

காரின் சார்பாகக் கூறப்பட்ட எதுவுமே, மத்திய உள்துறை மந்திரியும், மகாராஷ்டிர சர்க்காரும் சந்தர்ப்பத்துக்கு உகந்த திறமையுடன் செயலாற்றவில்லை என்ற குற்றச்சாட்டை நீக்கப் போதுமானதாக இல்லை.

ஃஃஃ

முன்னாள் மன்னர்களின் மானிய விஷயமாக முன்னாள் கவர்னர்-ஜெனரல் மவுண்ட் பேட்டன் எழுதிய கடிதம், தனிப்பட்ட முறையில் எழுதப்பட்டது என்றும், இதன் கருத்துக்களை வெளியிடுவதற்கில்லை என்றும் பிரதமர் கூறுகிறார்.

மானியத்தை ரத்து செய்வது என்று கொள்கை அளவில் முடிவெடுத்தாகிவிட்டது என்றும் அவர் சொல்லியிருக்கிறார். 'கொள்கை' என்ற வார்த்தை இங்கு சிறிது கூடப் பொருந்தவில்லை. சத்தியப் பிரமாணமான வாக்கை முறிப்பது கொள்கையே அல்ல. மனிதனுக்குள் இருக்கும் தெய்வீகத்தை மறுத்து நடப்பது நற்கொள்கைகளுக்கு முற்றிலும் மாறானது.

பிரதியாக மானியம் தருகிறோம் என்று கூறி, மன்னர்களை அவர்களது ராஜ்யாதிகாரத்தை உடனடியாக விடுமாறு செய்துவிட்டு, பிறகு வாக்கை மறுப்பது அப்பட்டமான அதருமம். இது ஐக்கிய இந்தியாவின் சுதந்திரப் பாதையை நேர் செய்வதற்காக வாக்குறுதி தந்த வல்லபபாய் பட்டேலையும் ஜவாஹர்லால் நேருவையும் அவமதித்ததாகும். அப்போது கவர்னர் ஜெனரல்களாக இருந்தவர்களையும் அவமதிப்பதாகும். கௌரவம் என்பது தொட்டாற் சுருங்கி போல் நுண்ணியது.

இத்திசையில் சிந்தனையின்றிக் காரியம் செய்தால் உலகில் மதிப்பிழப்போம். இதன் விளைவாக நாகரிக நாடுகளை நம்பியுள்ள நம்முடைய பொருளாதாரத்துக்குப் பிராணாபத்து ஏற்படலாம். நேர்மை என்பது நல்ல தத்துவம் மட்டுமல்ல; அரசாங்கக் கொள்கையும் ஆகும்.

நண்பர் ராமலிங்கம் மறைவு!

நமது அருமை நண்பரும் கல்கி ஏஜன்ஸி இன்ஸ்பெக்டருமான திரு ஏ. ராமலிங்கம் அவர்கள் சென்ற 16–2–69 அன்று தமது ஐம்பத்து ஓராவது வயதில் காலமானார் என்ற செய்தியை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். திரு ராமலிங்கம் அவர்களுக்கு 16ந் தேதி காலை திடீரென்று மூளையில் ரத்த நாளம் வெடித்ததால் அன்று முழுவதும் மயக்க நிலையிலிருந்து அன்றிரவு 9 மணிக்கு இறைவன் திருவடி சேர்ந்தார்.



திரு ராமலிங்கம் அன்பின் உருவமாகவும் பண்பின் உறைவிடமாகவும் விளங்கினார். எப்பொழுதும் சிரித்த முகத்துடன் நண்பர்களை வரவேற்று உபசரிப்பதில் பெயர் எடுத்தவர்.

அவர் பிரபல வியாபார வைசிய குடும்பத்தைச் சேர்ந்தவர். வந்தவாசியில் இரும்பு, எஸ்ஸோ பெட்ரோல், மண்ணெண்ணெய், சிமெண்டு, பாரி உரம் ஆகியவற்றில் ஏஜன்ஸி எடுத்து வியாபாரம் செய்து வந்தார். நல்ல தேசிய உணர்ச்சியிருந்ததன் காரணமாக எப்போதுமே கதராடை உடுத்துவார். கல்கி பத்திரிகையின் முதல் இதழிலிருந்தே ஏஜன்ஸி எடுத்து நடத்தி வந்தவர். கடந்த இருபத்தைந்து வருடங்களாக நமது ஏஜன்ஸி இன்ஸ்பெக்டராகவும் சளியாமல் உழைத்திருக்கிறார். அமரர் கல்கி அவர்களிடமும் கல்கி அதிபர் சதாசிவம் அவர்களிடமும் பெரு மதிப்புக் கொண்டிருந்தார். அவர்கள் அன்புடன் இட்ட எப்பணியையும் முகமலர்ச்சியுடன் செய்து முடிப்பதில் அளவிலாப் பெருமையுற்று வந்தார். கல்கி ஏஜென்ஸி இன்ஸ்பெக்டராகத் தமிழகம் முழுவதும், ஏன், ஆந்திரப் பிரதேசத்திலும் கூடப் பன்முறை சுற்றிப் பலப்பல அன்பர்களையும் நண்பர்களையும் பெற்றுப் பெருமையுற்றவர். அவருடைய திடீர் மறைவைக் கேட்டுத் துயரம் உறுவோர் எத்தனை எத்தனையோ பேர்.

திரு ராமலிங்கத்தின் உற்றார் உறவினர் நண்பர்கள் ஆகியோரது துயரத்தில் நாமும் பங்கு கொள்ளுகிறோம். முக்கியமாக அவரது மனைவியாருக்கும் வயது முதிர்ந்த தாயாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இருபத்தியோராம் நூற்றாண்டில்..

இருபத்தியோராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியா எப்படி இருக்கும்? இன்னும் முப்பது அல்லது முப்பத்திரண்டு ஆண்டுகளில் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைவோம் என்பது நமது அரசியல் தலைவர்களைப் பொறுத்திருக்கிறது. ஆகவே, அது பற்றி ஏதும் சொல்லாமல் இருப்பதே நல்லது!

ஆனால் ஏற்கனவே விஞ்ஞான, தொழில் நுணுக்கங்களிலும் வாழ்க்கைத் தரத்திலும் வெகுவாக முன்னேறியுள்ள மேனாடுகள் 2001 ஆம் ஆண்டில் எப்படி இருக்கும் என்று துணிந்து ஊகித்துச் சொல்கிறார் விஞ்ஞானக் கதைகள் எழுதுவதில் மன்னரான ஆர்தர் ஸி. கிளார்க்கி.

எம். ஜி. எம். கம்பெனியாரின் தயாரிப்பான "2001" என்ற திரைப் படத்தை டைரக்ட் செய்யும் பொறுப்பேற்ற குப்ரிக் திரைக் கதை வசனம் தீட்ட ஆர்தர் ஸி. கிளார்க்கியைத்தான் அழைத்தார். காமிராக்கள் இயங்க ஆரம்பிப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பாகவே திட்டங்கள் தீட்டத் தொடங்கினார்கள். இவ்விருவருடன் பன்னிரண்டு நாடுகளைச் சேர்ந்த முப்பத்தியாறு விஞ்ஞான — பொறி இயல் துறை நிபுணர்கள் கலந்தாலோசித்தார்கள். 21ஆம் நூற்றாண்டில் நாடு எப்படி இருக்கும் என்பதைக் கற்பனை செய்து அதற்கான காட்சி ஜோடனைகளைத் தயாரித்தார்கள். ஸ்டூடியோவில் ஓர் அங்குலம் பாக்கி இல்லாமல் எங்கு பார்த்தாலும் விண்வெளிக் கப்பல்களும், செயற்கைச் சந்திரன்களும், விண்வெளியில் சுற்றி வரக்கூடிய சோதனைச் சாலைகளும் நிரம்பி விட்டன.


டைரக்டர் குப்ரிக் எதிர்காலம் பற்றிப் படத்தில் என்ன சொல்கிறார் பார்ப்போம்:


நிலத்தில் விவசாயம் செய்வதால் லாபமில்லை என்று மனிதன் அம்முயற்சியை விட்டு விடுவான். அலைகடல்களில்தான் அவன் விவசாயம் நடக்கும்! பல விவசாயிகள் ஆடு மாடுகளுக்குப் பதில் திமிங்கில மந்தைகளைப் பேணி வளர்ப்பார்கள்! ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளப் பல ரக வசதிகள் ஏராளமாக இருக்கும். ஆதலால் நெருக்கடி மிகுந்த நகரங்கள் மறைந்து போகும். மக்கள் பரவலாக வசிப்பார்கள். அவர்கள் வீட்டிலிருந்தபடியே டெலிவிஷனின் உதவியுடன் வேலையை முடித்து விடுவார்கள்! ஆபீஸுக்குப் போக மாட்டார்கள். நகரங்களில் மோட்டார் கார்களை அனுமதிக்கமாட்டார்கள். நகரத்துக்குள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குப் போக பஸ் வசதி இருக்கும். இவ்வசதி இலவசமாகக் கிடைக்கும். பஸ்கள் சாலையில் ஓடாது. அதற்குப் பதில் பாதை மேல் இந்த பஸ்கள் வரிசையாக நிற்க, பாதையே நகரும்! 'கன்வேயர் பெல்ட்' போன்ற இந்த ஏற்பாட்டின் மூலம் நகரின் எந்தப் பகுதிக்கும் துரிதமாகப் போய்ச் சேரலாம்.

எல்லாரும் மிகவும் உயர்ந்த அளவுக்குக் கல்வி அறிவு பெற்றிருப்பார்கள். மக்களின் அறிவு அதிகமாவதாலும், வேலைகளைச் செய்ய இயந்திரங்கள், கம்ப்யூட்டர்கள் ஆகியவற்றின் உதவி மிகுதியாவதாலும் காரியங்கள் துரிதமாக முடிந்துவிடும். யாருக்குமே வாரத்துக்கு ஒரு நாளைக்கு மேல் வேலை இராது. பாக்கி ஆறு நாட்களும் விடுமுறைதான்!

இன்றைய சாப்பாட்டு முறைகள் மாறி விடும். முக்கிய உணவு திமிங்கில இறைச்சியும் கடல் பாசியுமாகத்தான் இருக்கும்.

உலகில் உள்ள அனைவருமே அநேகமாக ஒரே மாதிரியான உடைகளைத்தான் அணிவார்கள். இந்தியர்களின் வேஷ்டி, புடவையும் சீனர்கள், ஜப்பானியர்கள் போன்றோரின் தனித்தன்மை வாய்ந்த தேசிய உடைகளும் மறைந்து போகும். அவற்றைப் பொருட்காட்சிச் சாலையில் மட்டுமே காணலாம்!





எதிர்காலத்தைப் பற்றிய படம் எடுத்த குப்ரிக் பார்ப்பவரின் திகைப்பு மிகுதியாக வேண்டும் என்பதற்காகத் திரைப்படத்தின் தொடக்கத்தில் இன்றைக்கு நாற்பது லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தைச் சித்திரிக்கிறார். இங்கு வெகு நேரம் தாமதியாமல் சட்டென்று ரசிகர்களை எதிர்காலத்துக்கு அழைத்துச் செல்கிறார். இந்தத் திரைப்படத்தின் முக்கிய அம்சம் விண்வெளி வீரர்கள் பத்து மாதங்கள் பயணம் செய்து நூறு கோடி மைல்களைக் கடந்து சனிக் கிரகத்தை அடைவதாகும்!

— நாக்பென்


ஆட்சி பீடத்தில் அண்ணா



ஸி. ஏ. ராமகிருஷ்ணன் ஐ. ஸி. எஸ்

(தலைமைச் செயலாளர், தமிழக அரசு)

காலஞ்சென்ற டாக்டர் அண்ணாதுரை, ஒரு நிர்வாகி என்றமுறையில் எப்படித் திகழ்ந்தார் என்பதனைக் கூறி எனது புகழுரையைச் சமர்ப்பிக்கக் கிடைத்த இந்த வாய்ப்பினை வரவேற்கிறேன். டாக்டர் ஸி. என். அண்ணாதுரை முதல் மந்திரியாக இருந்த காலம் முழுவதிலும் தமிழக அரசின் தலைமைச் செயலாளராக விளங்கும் பேரதிர்ஷ்டம் எனக்குக் கிடைத்தது. இது காரணமாக அவரை அடிக்கடி சந்திக்கவும், அரசாங்க விஷயங்கள் பற்றிப் பேசி விவாதிக்கவும் வாய்ப்புக்கள் எனக்குக் கிட்டின. ஒவ்வொரு முறை அவரைச் சந்திக்கும்போதும் அவரது மற்ற எல்லாக் குணங்களையும் விட இரு விஷயங்கள் என்னை வெகுவாகக் கவர்ந்தன. அவை அவருடைய பொறுமையும் பிறர் நலனில் அவர் காட்டிய அக்கறையுமாகும். இவையே அவரது பிரதான குண இயல்புகளாகவும் அமைந்திருந்தன. எந்த ஒரு 'ஃபைலி'லும் அல்லது எந்த ஒரு பிரச்னையிலும் பொதிந்துள்ள அடிப்படையான, முக்கியமான அம்சத்தை வெகு துரிதமாகப் புரிந்து கொண்டு விடுவார் அவர். நகைச்சுவை உணர்ச்சி மிக்கவர். என் கருத்திலிருந்து மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டிருந்தாரானால் அதை நகைச்சுவை உணர்வோடு கலந்து வெளியிடுவாரேயன்றி முதல் மந்திரிக்கு உள்ள உரிமை காரணமாக அதிகாரமாகப் பேச மாட்டார். அவர் முதல் மந்திரியாக இருந்தபோது கணிசமான அளவுக்கு அரசாங்க ஊழியர்களின் க்ஷேம நலன் பெருகும் விதத்தில் பல முக்கிய நடவடிக்கைகள் தீர்மானிக்கப்பட்டன. இவற்றில் பெரும்பாலான காரியங்களில் அவர் ஒரு கால கட்டத்தை நிர்ணயிப்பார். அந்தக் கால கட்டத்துக்குள் காரியம் நிறைவேறிவிட்டால் மட்டில்லா மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார். தாமதமானாலோ க்ஷேமநலனுக்கான காரியங்கள் தாமதமாகின்றனவே என்ற எண்ணத்தில் அவர் முகத்தில் வேதனையின் அறிகுறிகள் படர்வதைக் காணலாம்.



திரு ராமகிருஷ்ணன், ஐ. ஸி. எஸ்.

புதிய அமைச்சரவை பதவிப் பிரமாணம் எடுத்த பிறகு, நான் விசேஷமாகக் கேட்டுக் கொண்டதன்பேரில், அன்று மாலையே டாக்டர் அண்ணாதுரை தலைமைச் செயலக ஊழியர்கள் அனைவரும் குழுமியிருந்த கூட்டத்தில் பேசினார். தலைமைச் செயலகத்தில் உள்ள 'பரேட் கிரௌண்ட்' மைதானம் நிரம்பி வழிந்தது. அந்தக் கூட்டத்தில் டாக்டர் அண்ணாதுரை தாமே குமாஸ்தாவாகவும், உபாத்தியாயராகவும் வாழ்க்கையைத் தொடங்கியவர்தாம் என்பதை ஞாபகப்படுத்தினார். குறைந்த வருமானமுடைய சர்க்கார் ஊழியர்களின் பிரச்னைகளைத் தாம் நன்கு உணர்ந்திருப்பதாகச் சொன்னார். இந்த முதல் கூட்டத்திலேயே அண்ணாதுரை சர்க்கார் ஊழியர்களின் அபிமானத்தைப் பெற்றுவிட்டார். பிறிதொரு முறை நான் மீண்டும் விசேஷ வேண்டுகோள் விடுத்ததின் பேரில் 'இந்திய பொது நிர்வாகக் 'கழ'கத்தின் (Indian Institute of Public Administration) சென்னைக் கிளை நடத்திய கருத்தரங்கில் சொற்பொழிவாற்றினார். ''மக்களின் குறைகளைத் தீர்ப்பது'' என்ற தலைப்புக் கொண்ட இக் கருத்தரங்கில் அவர் மறக்க முடியாததான ஓர் அரிய கருத்தை வெளியிட்டார். ''தம் மனத்தில் தோன்றிய உண்மையான எண்ணத்தை — அது எனக்கு ருசிக்காத யோசனையானாலும் — வெளியிட்டு ஆலோசனை கூறும் சர்க்கார் ஊழியரையே நான் நண்பனாகக் கருதுவேன்'' என்றார். மேலும், ''எனது கட்சியைச் சேர்ந்த எந்த உறுப்பினரேனும் ஒரு சர்க்கார் ஊழியரை அவரது கடமை காட்டும் பாதையிலிருந்து வழுவுமாறு வற்புறுத்தினரேயானால், அந்த





☐ முதல் மந்திரியாகப் பதவிப் பிரமாணம் ஏற்ற பிறகு ராஜாஜி மன்றத்தைவிட்டு வெளியே வருகிறார் அண்ணா. ☐ முதல் மந்திரியாகப் பதவிப்பிரமாணம் ஏற்றுக் கையெழுத்திடுகிறார்.

வற்புறுத்தலுக்குப் பணியாமல் இருக்கும் சர்க்கார் ஊழியருக்கு நான் முழுப் பாதுகாப்பும் அளிப்பேன்'' என்றார்.

டாக்டர் அண்ணாதுரை முதல் மந்திரியாக இருந்த காலத்தில் அவர், சக்திக்கு மீறிய அளவு வேலை செய்தார் என்பதே என் எண்ணம். முதல் மந்திரி என்ற முறையில் ஆற்ற வேண்டிய பணிகளைத் தவிர வேறு பல பொறுப்புக்களையும் அவர் ஏற்று முடித்து வைக்க வேண்டியதாயிருந்தது. ஏதோ ஒரு கால அளவை நிர்ணயித்து அதன்படி அன்றாடம் அரசாங்க அலுவல்களை முடித்துக் கொண்டு வரலாம் என்று அவர் எவ்வளவோ மனப்பூர்வமாகப் பிரயத்தனப்பட்டும் கூட வேறு பல காரியங்களின் சுமை அபரிமிதமாக இருந்ததால், அவரால் தினப்படி ஒரு திட்டவட்டமான காலகட்டத்தில் இயங்க முடியவில்லை. உடல்நிலை சரியாக இல்லாதபோது கூட அவர் தமது பல்வேறு கடமைகளைக் கவனிக்கத் தம்மை மிகவும் வருத்திக் கொண்டார்.

அரசாங்கக் காரியங்களில் நேரில் உத்தரவிடுவதானாலும் சரி, எழுத்து மூலமாக உத்தரவிடுவதானாலும் சரி, டாக்டர் அண்ணாதுரை கண்ணியமே உருவெடுத்தவராகத் திகழ்ந்தார். கடுமையானதாக ஒரு வார்த்தை கூட அவர் பேசியதில்லை; எழுதியதும் இல்லை. அதிகாரிகளுக்குச் சொந்த முறையில் இருக்கக் கூடிய சில தாபங்களை அனுதாபத்துடன் அணுகுவார். அரசாங்க ஊழியர்களைச் சந்தோஷப் படுத்த மிகுந்த பிரயாசை எடுத்துக் கொள்வார். தவறிழைத்த சர்க்கார் ஊழியர்களைத் தண்டிக்கும் நிலை ஏற்பட்டால் அப்போது நீதியின் கடுமையை இரக்கத்தினால் தணித்து விடுவார்.

ஒரு நிர்வாகி என்ற முறையில் டாக்டர் அண்ணாதுரை தனித்தன்மை வாய்ந்தவர் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அவரது மறைவு பொதுமக்களுக்குப் பெரிய நஷ்டம் என்றாலும் குறிப்பாக சர்க்கார் ஊழியர்களுக்குப் பேரிழப்பாகும்.

மகாத்மாவின் மணிமொழி


நம் வாழ்வின் சில கட்டங்களில் சோதனைகள் நிகழ்கின்றன. அப்போது விஷயங்கள் குறித்து நமக்கு வெளியிலிருந்து எந்த நிரூபணமும் தேவைப்படுவதில்லை. நமக்குள்ளிருந்தே ஒரு சிறிய குரல் இச்சமயங்களில் பேசும். 'நீ சரியான பாதையில் இருக்கிறாய். அதற்கு இடமோ வலமோ போகாமல் நேரே தொடர்ந்துபோ' என்று அக்குரல் கூறும்.



வஸந்த
காலத்திற்கான
பாதக் குறிப்புகள்!

கவலைக் கிடமின்மையும் சௌகரியமாயுமுள்ள ஒரு காலணியில் நீங்கள்
விரும்பும் இலேசுத்தன்மை, குளுமை, சுகம் ஆகியவற்றையெல்லாம்
பாட்டாவினுல் திறமையுடன் தயாரிக்கப்பட்ட கீழ்க்காணும் சப்பல்கள்
ஸாண்டல்களிலே எந்த ஒன்றிலும் பெறலாம். மகிழ்ச்சிமிகுந்த வாழ்க்கைக்கு
அணிசெய்யும் கலைமான நூதனமான முறைகளுக்குரிய பல்பல ஸ்டைல்களிலும்
நிறங்களிலுமாக இன்னும் அநேகம் உங்கள் பிரியமுள்ள பாடா ஸ்டோரில்
இருக்கின்றன. புதிய முறைகள், புதிய இலேசுத்தன்மை, தோற்றத்திலும்
புதியது. மற்றெல்லா பாடா ஷூக்களையும்போல் சிறந்த பொருள்,
சிறப்பான பொருத்தம், சிறந்தவேலைப்பாடு, நீடித்த உழைப்பு ஆகியவை
கூடிய அமைப்பை பிரத்தியேகமாகப் பார்க்கலாம்!

Bata





◀ பாலக்காடு சேகரிபுரத்தில் ஸ்ரீவெங்கடேசுவரானந்த சுவாமிகளின் மேற்பார்வையில் சமீபத்தில் குத்து விளக்குகளில் வேங்கடேசப் பெருமானை ஆவாகனம் செய்து கோடி அர்ச்சனை தொடங்கப்பட்டது.

கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்க ஆதரவில் நடைபெற்ற பாரதி ஜயந்தி விழாவைப் பாரதத் துணைத் தலைவர் திரு வி. வி. கிரி குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார். ▼





▲ ஹௌரா திருவள்ளுவர் கலை மன்றத்தின் சார்பில் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டு விழாவும் தமிழ்நாடு பெயர் மாற்ற மகிழ்ச்சி விழாவும் கொண்டாடப்பட்டன. அறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்தைத் திரு வெ. கிருஷ்ணசாமி திறந்து வைத்தார்.

மதுரை திருவள்ளுவர் கழகத்தில் நடைபெற்ற வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டு விழாவை 'முன்னிட்டு ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் பொற்றாமரைக் குளத்திலிருந்து திருவள்ளுவர் திருவுருவப்படமும் திருக்குறள் ஏடுகளும் யானைமீது வைக்கப் பெற்று நான்கு சித்திரை வீதிகள் வழியாக ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டன.

◀

கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கம் நடத்திய தெய்வப் [புலவர் திருவள்ளுவர் விழாவில் பேராசிரியர் கந்தப்பன் சிறப்புச் சொற்பொழிவாற்றுகிறார்.

▼





அண்ணலின் வாழ்விலே

தெய்விகச் சட்டம்

சிறுவன் ரவிக்கு வயது நான்குதான் இருக்கும். அவன் தந்தைக்கு ஓர் ஆபீஸில் வேலை. ஒரு நாள் ஒரு நண்பர் அவர்களுடைய வீட்டுக்கு வந்திருந்தார். அவர் ரவியைப் பார்த்து, "நீ படித்துப் பெரியவனான பிறகு என்ன செய்வாய் ?" என்று கேட்டார்.

" ஆபீசுக்குப் போவேன் " என்றான் பையன்.

"அங்கு போய் என்ன செய்வாய் ?" என்று கேட்டார் வந்தவர்.

"நாற்காலி போட்டிருக்கும்; மேஜை போட்டிருக்கும்; உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பேன்."

"அப்புறம் ?" என்று கேட்டார் நண்பர்.

"ஒரு மணிக்கு வீட்டி லிருந்து சாப்பாடு வரும். சாப்பிட்டு விட்டு அங்கேயே இருப்பேன். ஐந்து மணி யானதும் வீட்டுக்கு வந்து விடுவேன்."

எல்லாரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

குழந்தைகள் வாயிலிருந்து உண்மை பிறக்கும் என்று பொதுவாய்ச் சொல்வதுண்டு. ஆபீஸ் வேலையைப் பற்றிச் சிறுவன் ரவி சொன்னதிலும் அடிப்படையான ஓர் உண்மை இருக்கிறது. இன்று படித்தவர்கள் செய்யும் வேலை யெல்லாம், ஏதோ ஒரு வகை வேலையே யொழிய, உழைப்பாகாது.

பின் எது உழைப்பு ?

"மெய் வருத்திப் பாடுபட வேண்டும். அதுவே உழைப்பு" என்கிறார் காந்தி. மண்ணைத் திருத்தி வெய்யிலில் உழலும் உழவனுடைய உழைப்பை மிக்க மேலான உழைப்பாய்க் கருதினார் அவர். தச்சன், கொல்லன், சேணியன், வாணியன், நாவிதன், தோட்டி, வண்ணான் முதலியோருடைய வேலைகளையும் அவர் உழைப்பாய் மதித்தார். இதனால் கவிகள், விஞ்ஞானிகள், ஓவியர்கள், இசை வல்லுநர்கள் முதலியோரை அவர் பொருட்படுத்தவில்லை என்று நாம் நினைத்துவிடலாகாது. நம்மைப் போலவே அவரும் அவர்களை மதித்தார். " நீங்களும் உங்கள் கலைகளும் மேலானவைதாம். ஆனால், உணவு வேண்டுமானால் நீங்களும் உடம்பால் உழைத்தேயாக வேண்டும் " என்கிறார்.

என்ன இது, காவியம் புனையும் கைகள் மண்வெட்டியைப் பிடிப்பதா ? அதிசயமாய் இருக்கிறதல்லவா ?

ஆனால், காந்தி இதற்குத் தக்க பதில் அளிக்கிறார்.


"உடம்பின் தேவைகளை உடம்பே நிறைவு செய்ய வேண்டும்" என்கிறார் அவர்.

அவருடைய தமக்கை ஒரு கைம்பெண். மாவு அரைத்துப் பிழைத்து வந்தார். அன்பர்கள் சிலர் இதைக் காந்தியிடம் கூறி, "அவருக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும்" என்றார்கள். "அப்படியா? மாவு அரைப்பது உடம்புக்கு நல்லதாயிற்றே; நாம் ஏன் உதவி செய்ய வேண்டும் ?" என்று சொல்லி விட்டார் காந்தி.

உழைத்துச் சாப்பிட வேண்டும் என்பதில் அவர் இவ்வளவு கண்டிப்பாயிருந்த போதிலும், இரு வகை மக்களுக்கு மட்டும் அவர் இதிலிருந்து விதிவிலக்கு அளிக்கிறார். அவர்கள் யார் ?

1. நோயாளிகள்.
2. வேலை செய்யச் சக்தியற்றவர்கள்.

மற்றவர்கள் யாவராயிருந்த போதிலும் அவர்களுக்கு இதிலிருந்து விதிவிலக்குக் கிடையாது. "அன்றாட உணவுக்கு மனிதன் அன்றாடம் உழைக்க வேண்டும்" என்கிறார்.





சிந்தனைக்கு விருந்தாய் விளங்கும் இந்தக் கருத்து உலகத்துக்குப் புதிதல்ல.

உழைத்து அதன் மூலம் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டே வாழ வேண்டுமென்று இஸ்லாம் மதம் கூறுகிறது. பிற சமயங்களும் அவ்விதமே கூறுகின்றன.

இப்படி அறநூல்களும் சமயங்களும் உழைப்பை வலியுறுத்திய போதிலும், நாளடைவில் மக்கள் அதை மறந்துவிட்டார்கள். மறந்துவிட்ட அக்கருத்தை இக்காலத்தில் எல்லோர் நினைவுக்கும் கொண்டு வர அரும் பாடுபட்டவர்களுள் ருஷ்ய ஞானி டால்ஸ்டாய் முதல்வராவார்.

மாபெரும் செல்வச் சீமானாய் விளங்கிய அவர், உழவர்களுடன் உழவராய் வயலில், சேற்றில் வேலை செய்தார். கோடரி கொண்டு விறகு வெட்டினார். ஏழையைப் போல் உடை யுடுத்தினார். எளிய உணவை உண்டார்.

டால்ஸ்டாய்க்குப் பின் இக்கருத்தை நம் நாட்டில் பரப்பியவர் காந்தியாவார். அவர் இதற்கு அழுத்தமும் சிறப்பும் விளக்கமும் கொடுத்தார். முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகவே அவர் இதைப் பற்றி எழுதியும் பேசியும் வந்தார். தம்முடைய ஆசிரமத்துக்கு அவர் 'உத்யோக மந்திரம்' அதாவது, தொழிற் கோவில் என்று பெயர் வைத்தார். அந்தப் பெயருக்கேற்ப அங்கு பலவிதமான தொழில்கள் நடந்து வந்தன.

பயிற்சி பெறுவதற்காக அவரிடம் பெரிய பெரிய அறிஞர்கள்செல்வார்கள். காந்தி அவர்களுக்கு உடல் உழைப்பு சம்பந்தமான வேலை ஏதாவது கொடுத்து, ''இதுதான் பெரிய படிப்பு'' என்பார். ஒரு முறை பொருளாதார வல்லுநராகிய ஸ்ரீமந் நாராயண அகர்வால் அவரைக் காணச் சென்றபோது, காந்தி அவர் கையில் துடைப்பத்தைக் கொடுத்துத் தோட்டி வேலை செய்யச் சொன்னார். பேராசிரியராயிருந்த கிருபளானியை அடுப்பங்கரையில் காய்கறி நறுக்க வைத்தார். இன்னும் பலரை அவர் இவ்விதம் வேலை வாங்கினார். அவருடைய ஆசிரமத்தில் உணவு வேண்டுமானால் வேலைசெய்தேயாகவேண்டும்.

உணவு இருக்கட்டும்; தண்ணீராவது அங்கு கிடைக்குமா — ஒரு சொட்டு ?

கிடைக்காது!

ஆசிரமத்துக் கிணற்றில் ஒரு வாளியும் கயிறும் தொங்க விடப்பட்டிருக்கும். வழிப்போக்கர்களுக்கோ ஆசிரமத்தைப் பார்க்க வந்தவர்களுக்கோ தாகம் எடுத்தால், அவர்கள் கிணற்றிலிருந்து நீர் இறைத்துத்தான் சாப்பிட வேண்டும். ஆசிரமத்திலிருந்து யாரும் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்க மாட்டார்கள்; கொடுக்கவும் கூடாது. இது அங்கு ஒரு விதி. இது சம்பந்தமாய் காந்தி ஓர் அன்பரிடம் கூறியதாவது: ''உடலுரம் வாய்ந்தவர்களுக்கு உணவோ நீரோ அளிப்பது சோம்பலை வளர்ப்பதாகும். தண்ணீர் வேண்டுமானால் இறைத்துச் சாப்பிடட்டும். உணவு வேண்டுமானால் வேலை செய்யட்டும்.''

உடலுழைப்பை ஒரு தெய்வீக நியதியாக, மனித குலத்துக்கு ஆண்டவன் வகுத்த சட்டமாக அவர் கருதினார்.

''எல்லோரும் அன்றாட உணவுக்காக அன்றாடம் சற்று உழைத்தால் வறுமை, துன்பம், கவலை, நோய் இவை மறைவதுடன் ஏற்றத்தாழ்வும் இராது'' என்கிறார் அவர். ஆனால் எல்லோரும் உடனே இதை ஏற்றுக் கொண்டு விடுவார்களா? மாட்டார்கள். காந்திக்கும் இது தெரியும். குறிக்கோளைக் கண்டு மலைத்துப் போய் எதுவுமே செய்யாமலிருப்பதற்குப் பதிலாக, ஏதாவது செய்து கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறலாம் அல்லவா ? இதற்காக, நம் எல்லோரையும் அவர் நூற்கச் சொன்னார். (உடை, நம் இன்றியமையாத் தேவைகளுள் ஒன்று என்பதை இங்கு நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.) அரைமணி நேரம் நூற்றாலும்கூடப் போதும் என்றார். நூல் நூற்பை உடல் உழைப்பின் ஒப்பற்ற சின்னமாய் அவர் மதித்தார். இருந்த இடத்தில் இருந்து கொண்டே எல்லோரும் செய்யக்கூடிய உழைப்பு அது. காந்தி இதை 'சூத்திர யக்ஞம்' என்று அழைத்தார். 'சூத்திரம்' என்றால் நூல்; 'யக்ஞம்' என்றால் வேள்வி. நூல் நூற்பை வேள்விக்கு நிகராய்க் கருதினார் அவர்.


ஒரு முறை அவர் உண்ணாவிரதம் இருந்தார். அது முடிந்ததும் இராட்டினத்தைக் கொண்டு வரச் சொன்னார். நூற்கத் தொடங்கினார். அப்போது அவருக்கு உடம்பில் தெம்பேயில்லை. முகத்தில் அளவுகடந்த களைப்பு ததும்பி யிருந்தது. மூச்சுத் திணறிற்று. ஆயினும் நூற்பதை விடவில்லை. அப்போது அருகில் பலர் இருந்தார்கள். இதைப் பார்த்துக் கொண்டிருக்க அவர்களால் முடியவில்லை. ''பாபு! தயவுசெய்து இன்று நூற்க வேண்டாம். நிறுத்தி விடுங்கள். இளைப்பாறுங்கள்'' என்றார்கள்.

இதைக்கேட்டதும் காந்தியின் முகம் மலர்ந்தது. ''மாட்டேன். இன்று சாப்பிடத் தொடங்கி விட்டேன் அல்லவா? ஆகவே, இன்றே நான் வேலையும் செய்தாக வேண்டும்'' என்றார் அவர் ! **- மீ. வி. சபரிராஜன்**

உலகிலேயே பணக்கார நாடான அமெரிக்காவில் ஜனாதிபதி பெறும் சம்பளத்தைவிட மற்றும் சில நாட்டு ஆட்சியாளர்கள் அதிக சம்பளம் வாங்குகின்றனர். சமீபத்தில்தான் அமெரிக்க ஜனாதிபதியின் சம்பளம் இரட்டிப்பாக்கப்பட்டது. தற்போது நிக்சனின் வருட சம்பளம் 80 ஆயிரம் பவுன்கள் ! ஆனால் அமெரிக்காவைவிட பரப்பளவில் 3500 பங்கு சிறியதான லக்சம்பர்க் நாட்டின் ஆட்சித் தலைவரான டியூக்,நிக்சனைவிட இருபத்தியேழாயிரம் பவுன்கள் அதிகம் வாங்குகிறார்! உலகிலேயே அதிகம் பெறுவது நெதர்லாந்து அரசி ஜூலியானாதான். இவருக்கு வருடத்திற்கு 5 லட்சம் பவுன்கள் தரப்படுகிறது ! இங்கிலாந்து அரசிக்கே நாலே முக்கால் லட்சம் பவுன்கள்தான் சம்பளம்! பெல்ஜியம் அரசர் மூன்றரை லட்சம் பவுன்களும், நார்வே, டென்மார்க் அரசர்கள் தலா இரண்டரை லட்சம் பவுன்களும் பெறுகின்றனர். ஜப்பான் அரசருக்கு ஒரு லட்சம் பவுன்கள்தான். ஆனால் உலகிலேயே அதிக சம்பளம் பெறுபவர் ஒரு ஜப்பானிய ரசாயன நிபுணர்தான். இவரது வருட சம்பளம் ஏழு லட்சத்து 90 ஆயிரம் பவுன்கள் ! ஆனால் இவர்களில் யாருமே சிகாகோவைச் சேர்ந்த ஆல் காப்போன் கிட்டத்தில்கூட வர முடியாது. குற்றவாளிகளின் முடிசூடா மன்னன் என்று பெயர் பெற்ற ஆல் காப்போன் 1927-ம் வருடத்தில் மட்டும் நாலுகோடியே முப்பது லட்சம் பவுன்கள் சம்பாதித்தானாம் ! போட்டி போட முடியுமா இவனோடு?



ஆதாரம் : ஹிந்துஸ்தான் டைம்ஸ் தகவல் : ச ஸ்ரீதரன்


cali—tut special
காலி-கட ஸபெஷல
காலி-கட புடவை
காலி-களாத் சிலலறை விறபனைக
கடைகளில் கிடைககிறது

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

ஆறும் அத்தியாயம்

மறைந்த மண்டபம்

மறு நாள் காலையில் உதயசூரிய னுடைய செங்கிரணங்கள் வந்தியத் தேவனைத் தட்டி எழுப்பின. உறக்கம் நீங்கிய பிறகும் சுய உணர்வு வருவ தற்குச் சிறிது நேரம் பிடித்தது. அவன் மேல் விழுந்தது சூரியனுடைய வெளிச் சமா அல்லது கலங்கரை விளக்கின் ஒளியா என்று தெளிவதற்குச் சிறிது நேரம் பிடித்தது. முதல் நாள் இரவு அநுபவங்களில் எது உண்மை, எது கனவு என்று எண்ணிப் பார்த்த போது அவனுக்கு ஒரே குழப்பமாயிருந்தது. வீட்டிலே பெரியவரின் மனைவியும் அவருடைய மருமகளும் மட்டுமே இருந்தார்கள். பெரிய வர் குழகர் கோயிலுக் குப் புஷ்ப கைங்கரியம்





செய்வதற்காகப் போயிருப்பதாக அவர்கள் சொன்னார்கள். பூங்குழலியைப் பற்றி அவர்களிடம் விசாரிக்க அவனுக்குத் தைரியம் வரவில்லை. அவர்கள் அளித்த காலை உணவை அருந்திவிட்டுச் சுற்றுமுற்றும் கண்களைச் செலுத்தித் தேடிப் பார்த்தான். பூங்குழலி எங்கும் அகப்படவில்லை. ஆலயத்துக்குப் போய்ப் பார்க்கலாம் என்று போனான். அங்கே அவன் தந்தை இருந்தார். கோயிலைச் சுற்றியிருந்த மரங்களிலிருந்து பூஜைக்குரிய புஷ்பங்களைக் கொய்து கொண்டிருந்தார். மலர்களைத் தொடுத்து மாலையாக்குவதற்குச் சில நாள் பூங்குழலி வருவதுண்டு என்றும், ஆனால் இன்றைக்கு வரவில்லையென்றும் கூறினார். ''எங்கேயாவது காட்டில் மான்களைத் துரத்திக் கொண்டிருப்பாள். அல்லது கடற்கரையோடு திரிந்து கொண்டிருப்பாள். அவளைத் தேடிப் பிடித்துக் கேட்டுப் பார்!'' என்றார். ''தம்பி! ஒரு விஷயத்தில் ஜாக்கிரதையாக இரு. அவள் பொல்லாதவள். தப்பர்த்தம் செய்து கொள்ளும்படியாக அவளிடம் ஏதாவது சொல்லி விடாதே. காவியங்களில் படித்திருப்பதை நினைத்துக் கொண்டு சிருங்கார ரஸத்தில் இறங்கி விடாதே! உடனே பத்திரகாளியாக மாறி விடுவாள். அப்புறம் உன் உயிர் உன்னுடையது அல்ல!'' என்று எச்சரிக்கை செய்தார் பெரியவர். முதல் நாள் கனவை நினைத்துக் கொண்டு வந்தியத்தேவன் உடல் சிலிர்த்தான். பிறகு காட்டுக்குள் பூங்குழலியைத் தேடிக்கொண்டு போனான். காட்டிலே எங்கே என்று தேடுவது? சிறிது நேரத்துக்கெல்லாம் அவனுக்கு அலுத்துப் போய் விட்டது. காட்டிலிருந்து வெளியேறினால் போதும் என்று ஆகி விட்டது. வெளியேறிய பின்னர்

கடற்கரையை நோக்கிச் சென்றான். கடற்கரையோடு நீண்ட தூரம் அலைந்தும் பலன் ஒன்றும் இல்லை. பூங்குழலியைக் காணவில்லை. "எப்படியும் மத்தியானச் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வருவாள் அல்லவா? அங்கு பார்த்துக் கொள்ளலாம்!" என்று திரும்பினான். திடீரென்று ஓர் எண்ணம் தோன்றியது. அலையும் ஆட்டமும் அதிகமில்லாமல் அமைதியாக இருந்த அந்தக் கடலில் இறங்கிக் குளிக்க வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. இந்தப் பக்கத்தில் கடலில் ஆழம் அதிகம் இல்லையென்று முன்னமே கேள்விப்பட்டதுண்டு. முதல் நாள் மாலையில் பூங்குழலியும் சொல்லியிருக்கிறாள். பின்னே, இறங்கிக் குளிப்பதற்கு என்ன தடை? கடல் விஷயத்தில் அவனுக்கிருந்த பயத்தைப் போக்கிக் கொள்வதும் அவசியம். படகிலும் கப்பலிலும் ஏறிப் பிரயாணம் செய்ய வேண்டிய அவசியம் நேர்ந்திருக்கிறது. கடலைக் கண்டு பயப்பட்டால் முடியுமா? அந்தப் பயத்தைப் போக்கிக் கொண்டே ஆகவேண்டும்.

இடுப்பைச் சுற்றிக் கட்டியிருந்த சுருள் துணியையும் கத்தியையும் எடுத்துக் கடற்கரையில் வைத்துவிட்டுக் கடலில் இறங்கினான். மெள்ள மெள்ள ஜாக்கிரதையாகக் காலை எடுத்து வைத்து நடந்தான். போகப் போக முழங்கால் அளவு ஜலத்துக்கு மேல் இல்லை. சிறிய அலைகள் வந்து மோதியபோது ஜலம் இடுப்பளவுக்கு வந்தது. அதற்கு மேலே இல்லை. "அழகான சமுத்திரம் இது! அமிழ்ந்து குளிப்பதற்குக்கூடத் தண்ணீர் இல்லையே?" என்று சொல்லிக் கொண்டே இன்னும் மேலே சென்றான்.

அடடே! ஆழம் இல்லை என்று எண்ணிக் கொண்டே கரையிலிருந்து வெகு தூரம் வந்துவிட்டோமே? திடீரென்று கடல் பொங்கினால்? அலைகள் பெரிதாகி மோதினால்?—இந்த எண்ணம் தோன்றிக் கரைப் பக்கம் திரும்பிப் பார்த்தான். அதிக தூரம் கரையிலிருந்து வந்து விட்டது என்னமோ உண்மைதான்! ஆனால் அப்படியொன்றும் கடல் திடீரென்று பொங்கிவிடாது!... ஓகோ! அதோ பூங்குழலி வருகிறாளே! கரையேறி அவளைப் பிடித்துக் கொள்ள வேண்டும். பிடித்துக் கொண்டு நயமான வார்த்தைகளினால் மறுபடியும் கேட்க வேண்டும். அவளும் நம்மைப் பார்த்து விட்டுத்தான் வருகிறாள் போலிருக்கிறது! நாம் இருக்கும் திசையை நோக்கியே வருகிறாள்! ஏதோ நம்மைப் பார்த்துச் சமிக்ஞை கூடச் செய்கிறாளே!....

ஓ! ஓ! இது என்ன? கரையில் குனிந்து அவள் என்ன பார்க்கிறாள்? என்னத்தை எடுக்கிறாள்? நம்முடைய இடுப்பில் சுற்றும் சுருள் துணியை அல்லவா எடுக்கிறாள்? பெண்ணே! அதை எடுக்காதே! அது என்னுடையது!.... நாம் சொல்வது அவள் காதில் விழவேயில்லை! இந்தக் கடல் அலைகளின் இரைச்சல்!

இதோ நம் குரல் அவளுக்குக் கேட்டுவிட்டது! நம்மைப் பார்த்து அவளும் ஏதோ சொல்கிறாள்! பூங்குழலி! அது என்னுடையது! எடுக்காதே!....

இந்தா! சொன்னால் கேட்க மாட்டாயா? உன் உடைமை போல் கையில் எடுத்துக் கொண்டு நீபாட்டுக்குப் போகிறாயே! நில்! நில்!....

வந்தியத்தேவன் கரையை நோக்கி ஓட ஆரம்பித்தான்! ஒரு தடவை பூங்குழலி அவனைத் திரும்பிப் பார்த்தாள். பிறகு அவளும் ஓடத் தொடங்கினாள். வீடும் கலங்கரை விளக்கமும் இருந்த பக்கத்துக்கு எதிர்ப் பக்கமாகக் காட்டை நோக்கி ஓடினாள்!

ஆகா! இவள் துஷ்டப் பெண்! துஷ்டப் பெண்ணா? அல்லது வெறும் பைத்தியமா? இந்தப் பைத்தியத்தினிடமிருந்து நமது அரைச் சுருளை எப்படியும் வாங்கியாக வேண்டுமே?...

இரண்டு தடவை கடலில் இடறி விழுந்து ஒரு வாய் உப்புத் தண்ணீரும் குடித்துவிட்டு வந்தியத்தேவன் மெதுவாகக் கரையேறினான். பிறகு அந்தப் பெண்ணைத் தொடர்ந்து ஓடினான். ஓட ஓட, அவனுடைய ஓட்டத்தின் வேகம் அதிகமாயிற்று. சற்றுத் தூரத்தில் ஐம்பது அறுபது மான்களின் கூட்டம் ஒன்று ஓடியது. மான்கள் மிரண்டு பாய்ந்து ஓடுவது, தாவித் தாவிக் குதித்து ஓடுவது, — என்ன அழகான காட்சி! ஏன்? இதோ இந்தப் பெண் குதித்துக் குதித்து ஓடுகிறாளே? இதுவும் அந்த மான்களின் ஓட்டத்தைவிட அழகில் குறைவாயில்லை! இம்மாதிரி இயற்கையாகவும் யதேச்சையாகவும் வாழும் பெண்களின் அழகே அழகு தான்!... ஆனால் இதையெல்லாம் அவளிடம் சொல்லக் கூடாது. சொன்னால் காரியம் கெட்டுப் போய் விடும்! பெரியவர்தான் எச்சரித்திருக்கிறாரே?....இருந்தாலும், இவள் எதற்காக இப்படி வீம்பு பிடித்துக் கொண்டு ஓடுகிறாள்! காட்டில் புகுந்து விட்டால் அப்புறம் அவளைக் கண்டுபிடிப்பது எப்படி?.... இதோ காட்டுக்குள் புகுந்தேவிட்டாள்! காரியம் கெட்டுக் குட்டிச்

கவராகி விட்டது. நம்மைப் போன்ற மௌடீகன் உலகிலேயே வேறு யாரும் இருக்க முடியாது!... குரங்கின் கையில் அகப்பட்ட பூமாலை திரும்பி வருமா?

வந்தியத்தேவனும் சிறிது நேரத்தில் காட்டுக்குள் புகுந்தான். அங்குமிங்கும் அலைந்தான். அவசரத்தினாலும் பரபரப்பினாலும் செடிகளைச் சரியாக விலக்கி விட்டுக் கொண்டு நடக்காமல் உடம்பெல்லாம் முட்களால் கீறிக் கொண்டான். ''பூங்குழலி! பூங்குழலி!'' என்று கூச்சலிட்டான். பிறகு, ''மரமே! பூங்குழலியைக் கண்டாயோ?'' ''காக்காய்! பூங்குழலியைக் கண்டாயோ?'' என்றெல்லாம் கேட்க ஆரம்பித்தான். 'இது ஏது? நமக்கே பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறதே!' என்று அவன் நினைக்கத் தொடங்கிய சமயத்தில், திடீரென்று மரத்தின் மேலிருந்து ஏதோ விழுந்தது! ஆ! அவனுடைய அரைத் துணிச் சுருள்தான்! மிக்க ஆவலுடன் அதை எடுத்துச் சுருளைப் பிரித்துப் பார்த்தான். ஓலை, பொற்காசுகள் எல்லாம் பத்திரமாயிருந்தன!

''பணம் பத்திரமாயிருக்கிறதா?'' என்று ஒரு குரல் மேலேயிருந்து வந்தது. வந்தியத்தேவன் அண்ணாந்து பார்த்தான். பூங்குழலி மரக் கிளையில் உட்கார்ந்திருந்தாள்.

வியர்த்து விருவிருத்துப் போயிருந்த வந்தியத்தேவன் தன்னை மீறிய கோபத்தினால், ''உன்னைப் போன்ற மந்தியை நான் பார்த்ததேயில்லை!'' என்றான்.

''உன்னைப் போன்ற ஆந்தையை நான் பார்த்ததில்லை. அம்மம்மா! என்ன முழி முழிக்காய்?'' என்றாள் பூங்குழலி.

''எதற்காக இப்படி என்னை அலைக்கழித்தாய்? உனக்குப் பணம் வேண்டுமென்றால்....''

''சீச்சீ! உன் பணம் இங்கே யாருக்கு வேண்டும்?''

''அப்படியானால் எதற்காக இதைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்தாய்?''

''அவ்விதம் நான் செய்திராவிட்டால் நீ காட்டுக்குள் வந்திருக்க மாட்டாய். எங்கள் வீட்டுக்குத் திரும்பிப் போயிருப்பாய்?....''

''போயிருந்தால் என்ன?''

''இந்த மரத்தின் மேல் ஏறிப் பார், தெரியும்!''

''என்ன தெரியும்?''

''பத்துப் பதினைந்து குதிரைகள் தெரியும்! வாள்களும் வேல்களும் மின்னுவது தெரியும்!''

அவனுடைய முகத் தோற்றத்திலிருந்து அவள் கூறுவது உண்மையாயிருக்கலாம் என்று தோன்றியது. ஆயினும் நிச்சயமாகத் தெரிந்து கொள்ள விரும்பி வந்தியத்தேவன் மரத்தின் மேல் ஏறினான். ஏறுவதற்கு முன் அரைச் சுற்றுச் சுருளைக் கெட்டியாகக் கட்டிக் கொண்டான். ஒருவேளை இவள் மரத்தின் மேலிருந்து அதைத் தவறிப் போட்டிருக்கலாம். இப்போது மறுபடியும் அதை அபகரிப்பதற்குச் சூழ்ச்சி செய்கிறாளோ, என்னமோ, யார் கண்டது?

மரத்தின் மேலேறிக் கலங்கரை விளக்கின் பக்கம் நோக்கினான். ஆம்; பூங்குழலி கூறியது உண்மைதான். அங்கே பத்துப் பதினைந்து குதிரைகள் நின்றன. குதிரைகளின் மீது வாள்களும் வேல்களும் பிடித்த வீரர்கள் இருந்தார்கள். அவர்கள் யாராக இருக்கும்?.... நம்மைப் பிடிப்பதற்கு வந்த பழுவேட்டரையரின் ஆட்கள்தான்! வேறு யாராயிருக்க முடியும்?

பூங்குழலி தன்னைப் பெரும் அபாயத்திலிருந்து காப்பாற்றினாள். எதற்காக? என்ன நோக்கம் பற்றி? — இன்னும் சில விஷயங்களும் தெளிவாகவில்லை!

இருவரும் மரத்திலிருந்து கீழே இறங்கினார்கள். ''பூங்குழலி! என்னைப் பேரபாயத்திலிருந்து காப்பாற்றினாய். உனக்கு மிக மிக நன்றி!'' என்றான் வந்தியத்தேவன்.

''வெறும் பொய்! ஆண் பிள்ளைகளுக்கு நன்றிகூட உண்டா?'' என்றாள் பூங்குழலி.

''எல்லா ஆண் பிள்ளைகளையும் போல் என்னையும் எண்ணிவிடாதே!''

''நீ எல்லாரையும் போல் இல்லை; ஒரு தனி மாதிரிதான்.''

''பெண்ணே! உன்னை ஒரு கேள்வி கேட்கலாமா?''

''தாராளமாகக் கேட்கலாம்; மறுமொழி கூறுவது என் இஷ்டம்.''

''என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று ஏன் எண்ணினாய்? என் பேரில் திடீரென்று தயவு பிறக்கக் காரணம் என்ன?''

பூங்குழலி சும்மா இருந்தாள். அவள் சிறிது திகைத்துப் போனாள் என்பது முகத்திலிருந்து தெரிந்தது.

அப்புறம் யோசித்துப் பார்த்து, ''அசடுகளைக் கண்டால் எனக்கு எப்போதும் கொஞ்சம் பரிதாபம் உண்டு'' என்றாள்.

''சந்தோஷம்; இந்த வீரர்கள் என்னைத் தேடி வந்திருக்கிறார்கள் என்பதை எப்படி அறிந்தாய்?''

''உன்னைப் பார்த்தால் தெரியவில்லையா? — நீ தப்பி ஓடி ஒளிந்து கொள்ள வந்திருக்கிறவன் என்று.

நேற்றைக்கே ஊகித்தேன். இன்றைக்குக் காலையில் உன் சிநேகிதன் — வைத்தியர் மகன் — மூலமாக அது ஊர்ஜிதமாயிற்று.''

''அவன் என்ன உளறினான்?''

''காலையில் எழுந்ததும் காட்டிலே மூலிகை தேட வேண்டும் என்றான். நான் அழைத்துப் போவதாகச் சொல்லி இங்கே அழைத்துக் கொண்டு வந்தேன். என்னிடத்தில் காதல் புரிய ஆரம்பித்தான். 'உன்னுடைய சிநேகிதன் உன்னை முந்திக் கொண்டு விட்டானே?' என்று சொன்னேன்....''

''என்ன சொன்னாய்?''

''கொஞ்சம் பொறு; கேட்டுக் கொண்டு வா! நீ என்னிடம் காதல் புரியத் தொடங்கி விட்டதாகச் சொன்னேன். அப்போதுதான் உன் பேரில் அவனுடைய சந்தேகத்தை வெளியிட்டான். ஏதோ இராஜ தண்டனைக்குப் பயந்து நீ ஓடித் தப்பி வந்திருக்கிறாய் என்று அவனுக்கு வழியில் பல காரணங்களால் சந்தேகம் தோன்றியதாம்! 'அப்படிப்பட்டவனை நம்பி அநியாயமாய்க் கெட்டுப் போகாதே! என்னைக் கலியாணம் செய்து கொள்!' என்றான். 'ரொம்ப அவசரப்படுகிறாயே? பெரியவர்களைக் கேட்க வேண்டாமா?' என்றேன். 'பழந்தமிழ் மரபையொட்டிக் களவு மணம் புரிந்து கொள்வோம்!' என்று உன் அழகான சிநேகிதன் சொன்னான். எப்படியிருக்கிறது கதை?''

''அட சண்டாளப் பாவி!'' என்று கத்தினான் வந்தியத்தேவன்.

''இதற்குள்ளே குதிரைகள் வரும் சத்தம் கேட்டது. நான் மரத்தின் மேல் ஏறிப் பார்த்து விட்டு இறங்கி வந்து அவனை ஏறிப் பார்க்கச் சொன்னேன். மரத்தின் மேலே நின்று பார்த்தபோது அவனுடைய கால்கள் வெட வெட வென்று நடுங்கியதை நினைத்தால் இப்போதும் எனக்குச் சிரிப்பு வருகிறது...'' என்று சொல்லி விட்டுப் பூங்குழலி சிரித்தாள்.

''விளையாட்டு இருக்கட்டும்; அப்புறம் என்ன நடந்தது?''

''அவன் மரத்தின் மேலேயிருந்து இறங்கி வந்தான். 'பார்த்தாயா? நான் சொன்னது சரியாகப் போயிற்று. அவனைப் பிடிப்பதற்குத்தான் இராஜ சேவகர்கள் வந்திருக்கிறார்கள்!' என்றான். 'அப்படியானால் அவனுடன் வந்த உன்னையும் பிடிப்பார்கள் அல்லவா? நீ ஓடி எங்கேயாவது ஒளிந்து கொள்!' என்றேன். 'அப்படித்தான் செய்ய வேண்டும்' என்றான். என்னை விட்டுப் பிரிந்து சென்றான். நான் எதிர்பார்த்தபடியே நடந்தது....''

''என்ன? என்ன நடந்தது?''

''ஓடி ஒளிந்து கொள்வதாக என்னிடம் சொல்லிவிட்டு நேரே அந்தக் குதிரைக்காரர்கள் இருந்த திசையை நோக்கிப் போய் அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டான்....''

''ஐயோ! பாவம்!''

''அதிகமாகப் பரிதாபப்பட்டு விடாதே! கொஞ்சம் மிச்சம் வைத்துக் கொள்!''

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?''

''குறையும் கேள்! நீயே தெரிந்து கொள்வாய்! அவர்களிடம் நேரே







போனான். அவர்கள் இவனை அதிசயத்துடன் பார்த்தார்கள். உற்று உற்றுப் பார்த்து ஒருவரோடொருவர் இரகசியமாகப் பேசிக் கொண்டார்கள். 'நீங்கள் யார்?' என்று இவன் கேட்டான். 'நாங்கள் வேட்டைக்காரர்கள்; மான் வேட்டையாட வந்திருக்கிறோம்' என்று அவர்களில் ஒருவன் சொன்னான். 'இல்லை; நீங்கள் என்னை வேட்டையாட வந்திருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும்' என்றான் இவன். அவர்கள் இன்னும் வியப்படைந்து இவனைத் தூண்டி விட்டார்கள். 'வந்தியத்தேவனைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அவன் இருக்குமிடத்தைக் காட்டுகிறேன். என்னைச் சும்மா விட்டு விடுவீர்களா?' என்று கேட்டான். அவர்களும் அதற்குச் சம்மதித்தார்கள். இவன் அவர்களை அழைத்துக் கொண்டு எங்கள் வீட்டுப் பக்கம் போனான்....''


"துரோகி! சண்டாளன்!...."

"அவர்கள் போன பிறகு நான் உன்னைத் தேடிக் கொண்டு வந்தேன். நீ கடலில் இறங்கிக் குளித்துக் கொண்டிருந்தாய்...."

"என்னிடம் அங்கேயே இதையெல்லாம் ஏன் சொல்லவில்லை? இந்தத் துணிச் சுருளை எடுத்துக் கொண்டு ஏன் ஓடி வந்தாய்?"

"இல்லாவிட்டால், நீ அவ்வளவு வேகமாக ஓடி வந்திருப்பாயா? அந்த வேட்டைக்காரர்களை ஒரு கை பார்க்கிறேன் என்று அவர்களைத் தேடிப் போயிருந்தாலும் போயிருப்பாய்! என் பேச்சையே ஒருவேளை நம்பியிருக்க மாட்டாய். இவ்வளவையும் சொல்லி உன்னை என்னுடன் வரும்படி செய்வதற்குள் அவர்கள் உன்னை ஒரு வேளை பார்த்திருப்பார்கள்...."

'ஆகா! இந்தப் பெண்ணையா நாம் பைத்தியக்காரி என்று எண்ணினோம்' என்று வந்தியத்தேவன் நினைத்து வெட்கம் அடைந்தான். இவளிடம் பூரண நம்பிக்கை வைத்தேயாக



வேண்டும். இவளுடைய உதவியில்லாவிட்டால் நாம் கடலைக் கடந்து இலங்கை செல்ல முடியாது. இவ்வளவு தூரம் வந்ததும் வீணாகும். பழுவேட்டரையர்களிடம் திரும்ப அகப்பட்டுக் கொள்ளவும் நேரலாம்.

"பெண்ணே! நீ எனக்கு எவ்வளவு பெரிய உதவி செய்திருக்கிறாய் என்பதைச் சொல்லி முடியாது. மிச்ச உதவியையும் நீதான் செய்ய வேண்டும்...."

"என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?" என்று கேட்டாள்.

"என் சிநேகிதனுடைய இலட்சணத்தைப் பார்த்து விட்டாய் அல்லவா? அவனை நம்பிப் பயனில்லையென்று தெரிந்து கொண்டாயல்லவா? நீதான் படகு வலித்து வந்து என்னை இலங்கையில் சேர்ப்பிக்க வேண்டும்!"

பூங்குழலி மௌனமாயிருந்தாள்.

"நான் தப்புக் காரியம் எதுவும் செய்யக் கூடியவன் அல்ல என்று உனக்கு நம்பிக்கை ஏற்படுகிறதா? பெண்ணே! இலங்கைக்கு மிக முக்கியமான காரியமாக நான் உடனே போய்த் தீர வேண்டும். இந்த உதவி எனக்கு நீ அவசியம் செய்தேயாக வேண்டும்...."

"செய்தால் எனக்கு என்ன தருவாய்?" என்று பூங்குழலி கேட்டாள்.

அவளுடைய முகத்தில் முதன் முதலாக நாணத்தின் அறிகுறி தென்பட்டது. கன்னங்கள் குழிந்தன. அவளுடைய முகத்தின் அழகு பன்மடங்கு அதிகமாகிச் சுடர்விட்டு ஒளிர்ந்தது.

முதல் நாள் இரவு கண்ட கனவில் இதே மாதிரி அவள் கேட்டது வந்தியத்தேவனுக்கு நினைவு வந்தது. தான் அதற்குக் கூறத் தொடங்கிய மறுமொழியும் நினைவு வந்தது. அதே வார்த்தைகள் மறுபடியும் அவன் நாவில் வருவதற்குத் துடித்தன. பல்லினால் நாவைக் கடித்துக் கொண்டு அந்த வார்த்தை வராமல் நிறுத்தினான்.

"பெண்ணே! இந்த உதவி நீ எனக்குச் செய்தால் உயிர் உள்ள அளவும் மறக்க மாட்டேன். என்றென்றும் நன்றி செலுத்துவேன். உனக்கு நான் இதற்குப் பிரதியாகச் செய்யக்கூடியது எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. நீ ஏதாவது செய்யும்படி சொன்னால், கட்டாயம் செய்வேன்!"

பூங்குழலி சிந்தனையில் ஆழ்ந்தாள். சொல்ல எண்ணியதைச் சொல்லலாமா, வேண்டாமா என்று தயங்கியதைப் போல் காணப்பட்டது.

"என்னால் உனக்கு ஆகக்கூடிய பிரதி உதவி ஏதேனும் இருந்தால், சொல்! நிச்சயம் செய்கிறேன்...."

"இது சத்தியமான வார்த்தைதானா?"

"சத்தியம்! சத்தியம்!"

"அப்படியானால் சமயம் வரும்போது சொல்லுகிறேன். அப்போது மறந்துவிட மாட்டாயே?"

"ஒருநாளும் மறக்க மாட்டேன். நீ எப்போது பிரதி உதவி கேட்பாய் என்று காத்திருப்பேன். அதுவரையில் உனக்குக் கடன்பட்டிருப்பதாகவே எண்ணியிருப்பேன்."

பூங்குழலி மீண்டும் சிறிது நேரம் சிந்தனை வயப்பட்டிருந்தாள்.

"சரி; என்னுடன் வா! இந்தக் காட்டில் ஓரிடத்துக்கு உன்னை நான் அழைத்துப் போகிறேன். அங்கே இன்று பொழுது சாயும் வரையில் நீ இருக்க வேண்டும். பட்டினியாகத்தான் இருக்க வேண்டும்...."

"அதைப் பற்றிக் கவலை இல்லை! காலையில் உன் அண்ணி பழைய சோறு போட்டாள். அவளுடைய

வயிற்றெரிச்சலைக் கிளப்புவதற்காகவே அதிகமாகச் சாப்பிட்டேன். இனி இராத்திரி வரையில் சாப்பாடு தேவையில்லை....''

''இராத்திரி கூடச் சாப்பாடு கிடைக்கிறதோ, என்னமோ? கையில் கொஞ்சம் எடுத்து வரப் பார்க்கிறேன். நான் சொல்லும் இடத்தில் இருட்டும் வரை நீ இருக்க வேண்டும். இருட்டிய பிறகு, நான் திரும்ப வந்து ஒரு சத்தம் செய்வேன். குயில் 'குக்கூ' என்று கூவுவதைக் கேட்டிருக்கிறாயா?''

''நன்றாய்க் கேட்டிருக்கிறேன். அப்படிக் கேட்டிராவிட்டாலும், உன் குரலைத் தெரிந்து கொள்வேன்.''

''நான் குரல் கொடுத்ததும் நீ இவ்விடத்திலிருந்து வெளி வரவேண்டும். இருட்டி ஒரு ஜாமத்துக்குள் படகில் ஏறி நாம் புறப்பட்டுவிட வேண்டும்.''

''குயிலின் குரல் எப்போது வரும் என்று காத்திருப்பேன்.''

காட்டின் மத்தியில் மணல் மேடு இட்டிருந்த ஓரிடத்துக்குப் பூங்குழலி வந்தியத் தேவனை அழைத்துப் போனாள். மேட்டின் மறு பக்கத்தில் மரஞ் செடி கொடிகள் மற்ற இடத்தை விட அதிக நெருக்கமாயிருந்தன. அவற்றை லாகவமாகக் கையினால் விலக்கிக் கொண்டு ஒரு மரத்தின் வழியாகப் பள்ளத்தில் இறங்கினாள். வந்தியத்தேவனும் அவளைப் பின்பற்றி இறங்கினான். அங்கே ஒரு பழைய மண்டபத்தின் மேல் விளிம்பு காணப்பட்டது. இன்னும் உற்றுப் பார்க்கையில் இருளடைந்த மண்டபத்தின் இரு தூண்கள் தெரிந்தன. இவை எல்லாவற்றையும் மரங்களும் செடி கொடிகளும் மறைத்திருந்தன. எந்தப் பக்கமிருந்து பார்த்தாலும் அந்த மண்டபம் அங்கே இருப்பது தெரியவே தெரியாது.

''இந்த மண்டபத்தில் ஒரு சிறுத்தை குடியிருந்தது. அது போன பிறகு நான் இதில் இருக்கிறேன். என்னுடைய சொந்தத் தனி வீடாக வைத்துக் கொண்டிருக்கிறேன். மனிதர்களைக் காணப் பிடிக்காத போது இவ்விடத்துக்கு நான் வந்து விடுவது வழக்கம். சட்டியில் தண்ணீர் இருக்கிறது. இன்று பகலெல்லாம் இங்கேயே இரு! நாலாபுறமும் மனிதர்கள் குரல் கேட்டாலும் குதிரைகள் ஓடும் சத்தம் கேட்டாலும் வேறு என்ன தடபுடல் நடந்தாலும் நீ வெளியில் தலை காட்ட வேண்டாம். மேட்டின் மேல் ஏறிப் பார்க்க வேண்டாம்!'' என்று பூங்குழலி கூறினாள்.

''இருட்டிய பிறகும் இங்கேயே இருக்கச் சொல்கிறாயா? காட்டு மிருகம், — புலி, சிறுத்தை ஏதாவது வந்தால்?....'' என்று வந்தியத்தேவன் கேட்டான்.

''புலி, சிறுத்தை இங்கே ஒன்றும் இப்போது இல்லை. வந்தால் நரியும் காட்டுப் பன்றியும் வரும். நரிக்கும் பன்றிக்கும் பயப்பட மாட்டாயே!''

''பயம் ஒன்றுமில்லை. இருட்டில் வந்து மேலே விழுந்தால் என்ன செய்வது? கையில் வேல்கூட இல்லை. வீட்டில் வைத்து விட்டேன்.''

''இந்தா! இந்த ஆயுதத்தை வைத்துக் கொள்!'' என்று பூங்குழலி மண்டபத்தில் கிடந்த ஓர் ஆயுதத்தை எடுத்துக் கொடுத்தாள். அது ஒரு விசித்திரமான ஆயுதம். இருபுறமும் வாள் போல் கூர் கூரான முட்கள் இருந்தன. முட்கள் இரும்பைவிடக் கெட்டியாயிருந்தன. இந்திரனுடைய வஜ்ராயுதம் இப்படித்தான் இருக்கும் போலும்!

''இது என்ன ஆயுதம்? எதனால் செய்தது?'' என்று வந்தியத்தேவன் கேட்டான்.

''இது ஒரு மீனின் வால்! இந்த மண்டபத்தில் குடியிருந்த சிறுத்தை என் மீது பாய வந்தபோது இதனால் அடித்துத்தான் அதைக் கொன்றேன்!'' என்றாள் பூங்குழலி.


(தொடரும்)

மூர்த்தி சிறியது... கீர்த்தி...?



லால்பஹாதூர் சாஸ்திரி அப்போது உத்தரப் பிரதேச மாநில போலீஸ் மந்திரியாய் இருந்தார். ஒரு முறை இவர் உ. பி.யிலுள்ள மற்றொரு நகருக்கு ரயில் மூலம் சென்றார். இவரது ரயில் பெட்டி, இவருக்காக ஸ்டேஷனில் காத்திருந்த தலைவர்களைத் தாண்டிச் சென்று நிற்கவே, லால்பஹாதூர் வண்டி நின்றதும் இறங்கி நேராக வெளியேறும் 'கேட்' பக்கம் சென்றார். அங்கு காவலுக்காக நின்றிருந்த போலீஸ்காரர் இவரிடம், ''போலீஸ் மந்திரி போகும் வரை யாரும் இவ்வழியாகச் செல்லக்கூடாது'' என்று தடுத்தார். அப்போது பக்கத்திலிருந்த ஒருவர் போலீஸ்காரரின் காதோடு, லால்பஹாதூர்தான் அந்த போலீஸ் மந்திரி என்று முணுமுணுத்தார். உடனே அந்தப் போலீஸ்காரர், ''என்ன? இந்தக் குட்டையான மனிதனா போலீஸ் மந்திரி?'' என்று ஏளனம் செய்தாராம்! தம் காதாலேயே இதைக் கேட்ட சாஸ்திரி அந்தப் போலீஸ்காரர் மீது எவ்வித மான நடவடிக்கையும் எடுக்காமல் விட்டு விட்டார்!

ஆதாரம்: பவன்ஸ் ஜர்னல் — தகவல்: கவி. சம்பத்குமார்


G
E F
G E F PUMPSETS
DESIGNED
TO ENSURE SMOOTH FLOW
HYDRAULICALLY TESTED
BEFORE FINAL ASSEMBLY.
GOVERNMENT ELECTRIC FACTORY
MYSORE ROAD, BANGALORE-26



தயாரிப்பு: வாண்டுமாமா

31

இது என்ன ?

தென்மேற்கு ஆப்பிரிக்காவில் வளரும் ஒரு வகைத் தாவரம். பெயர் 'வெல்விட்ஸ்–சா' (Welwitscha) இதன் உயரம் ஓர் அடி. சுற்றளவு பதினைந்து அடிகள். வாழ்நாளில் மூன்றே இலைகள்தான் முளைக்கின்றன. ஆனால் இதன் வாழ்நாளோ 100 வருடம்.

விந்தையல்லவா ?

ஒரு நாடோடி—ஊர் சுற்றி. அது மட்டுமா? அவன் ஒரு விகடராமன். இவனுக்கு ஒரு நாட்டின் மணி முடி கிடைத்தது. எப்படி? அதுதான் விந்தையிலும் விந்தை.

பஞ்சாப் மாநிலத்தில் சுகட் என்று ஒரு சமஸ்தானம். 1416ம் ஆண்டில் இதை ஆண்டு வந்த ராஜாவை மக்கள் அரியாசனத்திலிருந்து அகற்றி விட்டார்கள், நாட்டை ஆளத் தகுதியற்றவர் என்பதினால். இதன் பரப்பளவு 350 சதுர மைல்கள். ஜனத் தொகை 60,000. அரியணைக்கு ஏற்ற அரசரைத் தேர்ந்தெடுக்க அந்நாட்டு மக்கள் ஒரு விந்தையான வழியை மேற்கொண்டார்கள். பாரதத்தின் பல்வேறு மாகாணங்களிலுமுள்ள நாடக நடிகர்களையெல்லாம் வரவழைக்க வேண்டும். சுகட்டின் அரண்மனைத் தோட்டத்தில் மாபெரும் அரங்கமொன்று அமைக்க வேண்டும். அதில் அங்கு வந்துள்ள நடிகர்களெல்லாம் இதற்கெனத் தயாரிக்கப்பட்டுள்ள மகத்தான சரித்திர நாடகமொன்றில் நடிக்க வேண்டும். அந்த சமஸ்தானத்தின் வயது வந்த ஆண் பெண் அனைவரும் அந்த நிகழ்ச்சியைக் காணக் குழுமியிருப்பார்கள். எந்த ஒரு நடிகர் மக்களின் ஒருமுகமான பாராட்டுதலை — கைத்தட்டலைப் பெறுகிறாரோ அவரையே மன்னராக அங்கீகரிக்க வேண்டியது.

அப்படிப்பட்டதொரு நிகழ்ச்சியில் வெற்றி வாகை சூடியவன் மியான் மதன் என்ற ஒரு நாடோடிக் கோமாளி. சக நடிகர்களேகூடச் சிரித்து மகிழ்ந்து கைதட்டி ஆர்ப்பரித்துத் தங்கள் பாராட்டுதல்களையும் அவனது வெற்றியையும் உறுதிப்படுத்தினார்களென்றால் மியான் மதனின் திறமை எப்படி இருந்திருக்கும்! நாடக மேடையிலிருந்து அப்படியே நேராக அரண்மனைச் சிங்காதனத்துக்கு மதனைத் தூக்கிச் சென்று விட்டார்கள். மதன் இருபத்தாறு வருடங்கள் சுகட்டின் மன்னனாக அரசாண்டான். அதன்பின் அவனது சந்ததியார்கள் அந்த சமஸ்தானத்து மன்னர்களாக விளங்கி வந்தார்கள் — 1949ல் பாரதம் குடியரசாகும்வரை.

விதூஷகன் மன்னனானது விந்தையல்லவோ ?





தகப்பனார்: என் பையன் அடிக்கடி காசு கேட்டுத் தொந்தரவு செய்துகொண்டிருக்கிறான். போன வாரம் ரெண்டுரூபாய் கேட்டான். நேத்திக்கு ஒரு ரூபாய் வேணும்னான். இன்னிக்குக் காலையில் அரை ரூபாய் கொடுத்தால்தான் போச்சுன்னு அடம் பிடிக்கிறான்.

நண்பர்: பணத்தை வாங்கிக் கொண்டு போய் என்ன செய்கிறான்?

தகப்பனார்: எனக்கு எப்படித் தெரியும்? நான்தான் அவனுக்குப் பணம் கொடுப்பதில்லையே !

அறிவாளிக்கும் அபராதம்!

ரொம்ப ரொம்ப வருஷங்களுக்கு முன்னாலே பாரசீக நாட்டில் சாதிக் என்ற ஒருவர் இருந்தார். அவர் ரொம்ப அறிவாளி. மிருகங்கள், பறவைகள், தாவரம் இவைகளைப் பற்றி ஆராய்வதிலேயே தம் வாழ்நாளையெல்லாம் செலவிட்டவர் அவர். அவருக்குத் தெரியாததே கிடையாது. ஆனால் அவர் ரொம்ப அடக்கமானவர். தம் திறமைக்கு விளம்பரம் தேட விரும்பாதவர் சாதிக். ஆகவே ரொம்பப் பேருக்குச் சாதிக்கின் அருமை தெரியாது.

ஒரு நாள் சில அரண்மனை வீரர்கள் சாதிக்கின் வீட்டு வழியாக எதையோ தேடிக் கொண்டு வந்தார்கள். அவர்கள் சாதிக்கிடம், ''அரசியாரின் அன்புக்குப் பாத்திரமான நாய் இந்தப் பக்கமாகப் போயிற்று?'' என்று கேட்டார்கள்.

''சின்னக் குட்டி நாய். நொண்டி நொண்டிக் கூட நடக்கும். ரொம்பப் பெரிய காதுகள் அதுக்கு. இல்லையா?'' என்று கேட்டார் சாதிக். ''ஆமாம், அதுவேதான்'' என்றார்கள் வீரர்கள் ஆவலுடன். ஆனால் சாதிக், ''நான் அதைப் பார்க்கவில்லை'' என்று கூறினார். அவர்களுக்கு ஏமாற்றம். சாதிக்கை ஒரு மாதிரியாகப் பார்த்துக் கொண்டு போய் விட்டார்கள்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் வேறு சில வீரர்கள் வந்தார்கள். ''பெரியவரே! இந்தப் பக்கமாகப் பட்டத்துப் பரி ஓடியதைப் பார்த்தீர்களா?''

''அதாவது வேட்டைக் குதிரைதானே? பதினைந்து சாண் உயரம், மூன்றரை அடி நீளமுள்ள வால் அதற்கு. தங்கக் கடிவாளமும் சேணமும் பூட்டப்பட்டிருக்குமே, அதைத்தானே கேட்கிறீர்கள்?'' என்றார்.

''அதுவேதான்; அதுவேதான்'' என்றார்கள் வீரர்கள் ஆசையுடன். ஆனால் சாதிக் தாம் அதைப் பார்க்கவில்லை என்று கூறிவிட்டார். வீரர்களுக்கு ஏமாற்றத்தோடு சந்தேகமும் உண்டாயிற்று. இரண்டு மிருகங்களைப் பற்றியும் கொஞ்சமும் தவறில்லாமல் அவைகளின் அங்க அடையாளங்களை வருணித்தவருக்கு அவை எங்கே போயிற்று என்று எப்படித் தெரியாமல் போகும்? ஆகவே, அவைகளை அவர்தான் ஒளித்து வைத்திருக்க வேண்டும் என்று முடிவு கட்டி அரச சபைக்கு இழுத்துப் போனார்கள். விசாரணை நடந்தது. சாதிக் தாம் முதலில் கூறியதையே சாதித்தார். நீதிபதி நம்பவில்லை. நானூறு பவுன்கள் அபராதம் விதித்து விட்டார். அப்போது இரண்டு சேவகர்கள் ஓடி வந்து குதிரையும் நாயும் திரும்பி விட்டதாக அறிவித்தனர். நீதிபதியின் முகம் தொங்கி விட்டது. ''பார்க்காத மிருகங்களைப் பற்றி அத்தனை கச்சிதமாக எப்படி அவரால் கூற முடிந்தது?'' என்று கேட்டார். அதற்கு அறிவாளி சாதிக் அளித்த பதில் இதுதான்.

''மணல்வெளியில் நாயின் சின்னப் பாத அடையாளங்களைக் கண்டேன். அதில் ஒரு பாத அடையாளம் இலேசாகப் பதிந்திருந்ததால் அந்த நாய் ஒரு காலை விந்தி நடந்திருக்கிறது என்று உணர்ந்தேன். முன்னங்கால் பதிந்திருந்த அடையாளங்களின் அருகே மணலைக் கிளறியது போலிருந்ததால் அந்த நாய்க்குத் தொங்கும் நீண்ட காதுகள் இருக்கும் என்று தீர்மானித்தேன். குதிரையின் குளம்படிகள் ஒரே சீராகப் பதிந்திருந்ததால் அது வேட்டைக்குப் பயன்படும் குதிரை என்பதை உணர்ந்தேன். வீதியின் அகலம் ஏழடி. அதன் இரு பக்கத்து மரஞ்செடிகளின் மீதிருந்த புழுதிகள் துடைக்கப்பட்டது போலிருந்தன. குதிரை தன் வாலை இருபுறமும் சுழற்றி வீசும் போதே அது நிகழ்ந்திருக்க வேண்டும். ஆகவே அதன் வாலின் நீளம் மூன்றரை அடி என்று முடிவு கட்டினேன். பூமியிலிருந்து பத்து அடிக்கு மேலாக மரங்களின் மீதிருந்த இலைகள் தாறுமாறாகக் கிழிக்கப்பட்டிருந்ததால் குதிரையின் உயரம் பதினைந்து சாண்கள் என்றறிந்தேன். ஒரு மரத்தில் தங்கக் கீற்றுக்கள் கண்ணில் பட்டன. குதிரை உராய்ந்ததால் ஏற்பட்ட வடு அது. ஆகவே, குதிரைக்குத் தங்கச் சேணமிட்டிருக்க வேண்டும் என்பது என் ஊகம்.''

சாதிக்கின் அநுமானங்கள் எல்லாரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தின. அவரது மதிநுட்பத்தைப் புகழ்ந்தார்கள். ஆனாலும் கொடுத்த தண்டனையை மாற்றுவதற்கில்லை என்று கூறி விட்டார் நீதிபதி. புத்திசாலியாக இருந்தால் வாழ முடியாது என்று உணர்ந்தார் சாதிக். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு ஒரு பக்காத் திருடன் சிறைச்சாலையிலிருந்து தப்பி விட்டான். சாதிக்கிடம் வந்தவர்கள் அவனைப் பற்றி அவருக்கு ஏதாவது தெரியுமா என்று கேட்டார்கள். சாதிக் மௌனமாக இருந்தார். ஆனால் விசாரணைக்குப் பின் அவர் திருடன் தப்பிச் செல்வதைத் தம் வீட்டு ஜன்னல் வழியே கண்டிருக்கிறார் என்பது ருசுவாகியது. ஆகவே, இன்னுமொரு நானூறு பவுன்கள் அபராதம் விதிக்கப்பட்டார் சாதிக்.

'இந்த உலகில் வாழுவது எவ்வளவு கஷ்டமானது? புத்திசாலியாக இருந்தாலும் அபராதம். முட்டாளாக இருந்தாலும் அபராதம்' என்று நீண்ட பெருமூச்சு விட்டார் அறிஞர் சாதிக்.




பரபரப்பூட்டும் அரிய சாதனை!

நேஷனல் எக்கோ

ஸிலிகோன் 321

திடநிலைக் கலை நுட்பத்தின் நவீன விளைவான 2-பாண்டு செட்



தனிப்பட்ட நலன்கள்;

- நேஷனல்-எக்கோ ஸிலிகோன் 321 மிக நவீனமான லாக்-ஃபிட் எபோக்ஸி, ஸிலிகோன் ப்ளானர் டிரான்ஸிஸ்டர்களை உபயோகிக்கிறது.
- குறைந்த பாட்டரி செலவு காரணமாக, அதன் வகையிலேயேமிகவும் சிக்கனமான, செட்.
- 500 mWக்கும் மேலான அவுட்புட் உடையது—குறைவான பாட்டரி செலவோடு சேரும்போது இது ஒரு விசேஷ அம்சம்,
- தெளிவான ரிஸப்ஷன், குறைவான சத்தம், மேம்பட்ட அலை. இயக்கம்,
- கம்பகமானது—நீடித்து, நன்கு உழைப்பதற்கென்றே உருவாக்கப் பட்டது.

விலை ரூ. 235
எக்சைஸ் தீர்வை உள்ளிட்ட வரிகள் தனி.

GRA ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ்

ஈ டிவிஷன் ஆப் தி நேஷனல் எக்கோ ரேடியோ & இன்ஜினியரிங் கோ. லிட்.
பம்பாய். கல்கத்தா – மதராஸ். டெல்லி. பெங்களூர். செகந்திராபாத். பாட்னா. கௌஹாத்தி.

ஈடிணையற்ற இயக்கத்திற்கு நேஷனல் எக்கோ ஸிலிகோன் 321



மகாபாரதம்

ராஜாஜி

91. அதருமம்

பீமனுடைய அசுர மனைவியினுடைய குமாரன் கடோத்கஜன் என்று பாரதம் கேட்ட யாவரும் அறிவார்கள். மகா பாரதக் கதா பாத்திரங்களுள் வீரமும் தீரமும் பலமும் குணமும் புகழும் எல்லாம் சேர்ந்து ஜொலிக்கும் வாலிபர்கள் இரண்டு பேர்கள்: அருச்சுனன் மகன் அபிமன்யுவும், பீமன் மகன் கடோத்கஜனும். இருவரும் யுத்தத்தில் பாண்டவர்களுக்காகப் பெரும் போர் செய்து உயிரைக் கொடுத்து மறைந்தார்கள்.

இரண்டு பக்கத்திலும் வளர்ந்தெழுந்த துவேஷ வேகத்திற்குப் பகலில் மட்டும் நடத்தப்பட்ட யுத்தம் திருப்தி தராமல் போயிற்று. பதினாலாம் நாளில் சூரியன் மறைந்த பின்னும் போர் செய்ய வேண்டும் என்று தீவட்டிகள் ஏற்றினார்கள். இருட்டே சௌகரியமாகக் கொண்டு கடோத்கஜனும் அவன் மாயக் கூட்டமும் துரியோதனன் படையை இரவில் பலமாகத் தாக்கினார்கள். அந்த இராத்திரி யுத்தம் மகா அற்புதமாக இருந்தது. அதுவரையில் பாரத தேசத்தில் நடைபெறாத நிகழ்ச்சியாக இருந்தது. ஆயிரக் கணக்கான தீவட்டிகளை ஏற்றி வைத்துக் கொண்டு பலவிதச் சமிக்ஞைகளை நியமித்துக் கொண்டு இரண்டு பக்கத்திலும் வீரர்கள் யுத்தம் செய்தார்கள்.

கர்ணனுக்கும் கடோத்கஜனுக்கும் அன்றிரவு போர் நடந்தது. கடோத்கஜனும் அவன் பூத கணங்களும் பொழிந்த அம்பு மாரியில் திரள் திரளாகத் தன் வீரர்கள் மாய்ந்து வீழ்ந்ததைக் கண்டு துரியோதனனுடைய உள்ளம் பதைத்தது. "கர்ணனே! இவனை உடனே கொல்வாயாக. இல்லாவிடில் நம்முடைய சேனை முழுவதும் அழிந்து போகும். இவனைச் சீக்கிரம் ஒழிப்பாயாக" என்று கௌரவர்கள் எல்லோரும் கர்ணனை வேண்டினார்கள்.

கர்ணனுக்கும் அந்தச் சமயத்தில் கடோத்கஜன் மேல் ஆத்திரமாகத்தான் இருந்தது. அவனால் அடிபட்டுக் கோபம் பொங்கியிருந்த சமயம், இந்திரன் தனக்குத் தந்திருந்த சக்தியாயுதத்தை வீசி அவனைத் தொலைக்கவே தீர்மானித்து விட்டான்.


அருச்சுனனுக்காகவே என்று அது வரையில் மந்திர பூர்வமாகக் காப்பாற்றி வைத்திருந்த அந்தச் சக்தியைக் கர்ணன் எடுத்துக் கடோத்கஜன் மேல் எறிந்து விட்டான். இதனால் அருச்சுனன் பிழைத்தான். ஆனால் அதற்குப் பதிலாகப் பீமனுடைய அருமைப் புத்திரன் மாய்ந்தான். அந்தரத்திலிருந்து கடோத்கஜனுடைய பிரேதம் நிலத்தில் வீழ்ந்தது. பாண்டவர்கள் துக்கத்தில் மூழ்கினார்கள்.

ஃ ஃ ஃ

யுத்தம் அப்போதும் நிற்கவில்லை. துரோணருடைய வில் இடைவிடாமல் பாண்டவ சேனையாட்களை வீழ்த்திப் பாண்டவப் படையில் பயத்தைப் பரப்பிக் கொண்டிருந்ததைப் பார்த்த கிருஷ்ணன், "அருச்சுனா! இந்தத்

துரோணரை யுத்தத்தில் வெல்லக் கூடியவர்கள் யாரும் இல்லை. இவர் ஆயுதத்தைப் பிடித்து நிற்கும் வரையில் யாரும் அவரை யுத்த முறையில் தாக்கி வெற்றி பெற முடியாது. தருமத்தைப் புறக்கணித்து விட்டு ஏதேனும் செய்துதான் தீர வேண்டும். வேறு வழியில்லை. அசுவத்தாமன் இறந்ததாகக் கேள்விப்பட்டால் துரோணர் போர் புரிய மாட்டார். துயரத்தினால் ஆயுதத்தைக் கீழே போட்டு விடுவார். யாராகிலும் துரோணரிடம் சென்று 'அசுவத்தாமன் இறந்தான்' என்று சொல்ல வேண்டும்'' என்று சொன்னான்.

இதைக் கேட்ட அருச்சுனன் திகைத்தான். அசத்திய வழியை ஒப்புக்



கொள்ள அவன் விரும்பவில்லை. கூட இருந்த மற்றவர்களும் 'மாட்டோம்' என்றார்கள். அதருமச் செயலைச் செய்ய மனம் ஒவ்வாதவர்களாக இருந்தார்கள்.

யுதிஷ்டிரன் யோசித்தான். முடிவில் ''இந்தப் பாவத்தை நான் சுமக்கிறேன்'' என்று சொல்லி நெருக்கடியைத் தீர்த்தான்.

கடலைக் கடைந்தபோது தேவர்களுக்காகப் பரமேசுவரன் விஷத்தைக் குடிக்க முன் வந்தான். நம்பிய சிநே

இதனைக் காப்பாற்ற வேறு வழியில்லாமல் ஸ்ரீ ராமனும் பாபத்தைச் சுமந்து வாலியை அதரும முறையில் கொல்லத் தீர்மானித்தான். அவ்வாறே யுதிஷ்டிரனும் தன் புகழைத் தியாகம் செய்ய உறுதி கொண்டான்.

பீமன் தன் இரும்புக் கதையைத் தூக்கி அசுவத்தாமன் என்ற ஒரு பெரிய போர் யானையைக் கொன்ருன். கொன்று விட்டுத் துரோணருடைய படைப் பகுதியண்டை சென்று அவர் காதில் விழும்படி உரத்த குரலில், ''அசுவத்தாமனைக் கொன்றேன்'' என்ருன். சொல்லிவிட்டு, வெட்கத்தில் மூழ்கினுன். இழிவான செயலைக் கனவிலும் எண்ணுத வீரனுகிய பீமசேனன் இவ்வாறு சொல்லும்போது வெட்கப்பட்டான் என்று வியாசர் அழகாகச் சொல்லுகிருர்.

துரோணர் அச்சமயம பிரம்மாஸ்திரத்தை எடுத்துப் பிரயோகிக்கும் தறுவாயில் இருந்தார். குமாரன் இறந்து விட்டான் என்கிற பேச்சைக் கேட்டதும் தயங்கினுர். இது உண்மையாக இருக்காது என்று சந்தேகமும் பட்டார். அதன்மேல் துரோணர் யுதிஷ்டிரனை நோக்கி, ''என் மகன் இறந்தானு? உண்மையா?'' என்று கேட்டார். மூன்று உலகங்களின் ஆதிபத்தியத்துக்காகவும் கூட யுதிஷ்டிரன் பொய் சொல்ல மாட்டான் என்று நம்பியே யுதிஷ்டிரனைக் கேட்டார்.

அச்சமயம் கிருஷ்ணன் பெருத்த மனவேதனை யடைந்தான். ''யுதிஷ்டிரர் தருமத்தைப் புறக்கணிக்கப் பயப்பட்டாராஞல், பாண்டவர்களுடைய நாசம் நிச்சயம். துரோணருடைய பிரம்மாஸ்திரம் வீணுகாது'' என்று எண்ணினுன். யுதிஷ்டிரனே அசத்தியத்தைக் கண்டு அச்சத்தில் மூழ்கி நின்ருன். ஆனுல் வெற்றி பெற வேண்டும் என்கிற ஆசையும் உள்ளவனுக இருந்தான்.

என்னுடைய பாபமாக இருக்கட்டும் என்று மனத்தை ஸ்திரப்படுத்திக் கொண்டு, ''அசுவத்தாமன் இறந்தது உண்மை'' என்று உரக்கச் சொன்னுன். சொல்லும்போது மறுபடியும் அதருமத்திற்குப் பயந்து, ''அசுவத்தாமன் என்கிற யானை'' என்று தாழ்ந்த குரலில் சேர்த்துச் சொன்னுன். இதுவெல்லாம் ஒரு விநாடியில் நடந்து விட்டது.

சஞ்சயன் திருதராஷ்டிரனிடம் நிகழ்ச்சிகளைச் சொல்லும் போது, ''அரசனே! இவ்வாறு அதர்மம் நடந்து விட்டது'' என்ருன்.

யுதிஷ்டிரன் வாயினின்று இவ்வாறு பொய்ச் சொற்கள் வெளியானவுடனே தரும புத்திரனுடைய ரதம், அதுவரையில் பூமியைத் தீண்டாமல் எப்போதும் நான்கு அங்குல உயரத்தில் சென்று கொண்டிருந்ததானது, திடீரென்று கீழே இறங்கி மண்ணைத் தொட்டதாம்.

அதருமமே வழக்கமாகிப் போன பூமியைத் தருமபுத்திரனுடைய சத்தியமானது அதுவரையில் தொடாமலிருந்தது. வெற்றிக்கு ஆசைப்பட்டு அசத்தியத்தில் இறங்கிவிட்டபடியால் தருமபுத்திரனுடைய தேரும் பாபம் நிறைந்த பூமியின் மட்டத்திற்கு வந்து விட்டது என்கிருர் வியாசர்.

ஃ ஃ ஃ

அசுவத்தாமன் இறந்தான் என்ற மொழியைக் கேட்டதும், துரோணருக்கு உயிரில் உள்ள பற்று திடீர் என்று அறவே நீங்கி விட்டது. அந்த நிலையில் அவர் இருக்கையில் பீமசேனன் அவரை மிகவும் கடுமையான மொழிகளால் நிந்திக்கலானுன்.

''கெட்டுப்போன பிராமணர்கள், தமக்குரிய தொழிலை விட்டு க்ஷத்திரியர்களுடைய தொழிலில் புகுந்தபடியாலல்லவோ அரசர்களுக்கு ஆபத்து வந்தது? அதரும வழியில் பிராமண குலத்தவர்கள் பிரவேசிக்காவிடில், அரசர்கள் மாண்டு போகாமல் தப்பியிருப்பார்கள். கொல்லா விரதமே மேலான அறம் என்றும், அந்த அறத்திற்கும் பிராமண குலமே வேர் என்றும் அறிந்த நீர், அந்தணர் குலத்தில் பிறந்திருந்தும், வெட்கமில்லாமல் கொலைத் தொழிலைச் செய்து வருகிறீர், ஏன் இவ்வாறு பாபத்தில் இறங்கினீர்?'' என்ருன்.

மகன் இறந்துவிட்டான் என்று ஏற்கனவே உயிரில் வெறுப்புக் கொண்ட துரோணரை, இந்த நிந்தனை மிகவும் துன்புறுத்தியது. உடனே அஸ்திரங்களை எறிந்து விட்டுத் தேர்த் தட்டின் மத்தியில் உட்கார்ந்து யோக நிஷ்டையில் அமர்ந்து விட்டார்.

இந்தச் சமயத்தில் திருஷ்டத்யும்னன் கத்தியெடுத்து வந்து துரோணருடைய ரதத்தில் ஏறி, ''ஆ! ஆ!'' என்று சேனையின் நான்கு பக்கமும் சப்தம் எழுந்து கொண்டிருந்தபோதே ஒரே வெட்டாக வெட்டி ஆசார்யருடைய தலையை வேறுபடுத்தி விட்டான். பரத்வாஜ புத்திரருடைய ஆத்மா மக்கள் கண்ணுக்குத் தெரியும்படியாக ஜோதி மயமாய் மேலுலகம் சென்றது.

மனித வாழ்க்கையில் உள்ள துயரங்களை யெல்லாம் பிழிந்தெடுத்துக் காட்டும் அற்புதமான கற்பனையாகும் மகாபாரதக் கதை. துயரங்களைக் காட்டிப் பேருண்மையான பரம்பொருளை நாடச் செய்யும் தரும நூல். சாதாரணக் கட்டுக் கதைகளின் போக்கே வேறு. மகாபாரதத்தின் துறையே வேறு. படிப்போருக்கு மயிர்க் கூச்சலுண்டாக்கும் ஆபத்துக்களும், கஷ்டங்களும் பலவற்றைத் தாண்டிக் கதாநாயகன் முடிவில் வெற்றிகரமாக ஒரு பெண்ணை விவாகம் செய்து முடித்துக் கொண்டு வாசகர்களுக்கு மகிழ்ச்சி உண்டாக்குவது, அல்லது இதற்கு மாருக எல்லாம் சுகமாகவே நிகழ்வது போல் காட்டிப் பெரும் ஏமாற்றம் தரும்படியான கோர சம்பவத்தோடு திரை மூடுவது — இது சாதாரணக் கதைகளில் காணப்படும் முறை. ராமாயணம், பாரதம் முதலிய தரும நூல்களின் போக்கு படிப்பவனுடைய உள்ளத்தைக் கரைத்து மகிழ்ச்சியிலும் துயரத்திலும் உணர்ச்சிகளை அலசி ஆட்டி முடிவில் மெய்ப் பொருளில் கொண்டு போய்ச் சேர்க்கும்.

92. கர்ணனும் மாண்டான்

துரோணர் இறந்தபின் கௌரவப் பட்சத்து அரசர்கள் கர்ணனைச் சேனுதிபதியாக அமைத்து அபிஷேகம் செய்தார்கள். சல்லியன் நடத்திய திவ்வியமான தேரின் மீது கர்ணன் ஏறி நின்ருன். அவனுடைய தேஜசு மிகவும் பிரகாசித்தது. அவன் தலைமையில் மறுபடியும் யுத்தம் வெகு உக்கிரமாக நடந்தது.

கோர யுத்தத்துக்குத் தருந்ததாக ஜோதிஷ நிபுணர்கள் பார்த்துச் சொன்ன முகூர்த்தத்தை நிச்சயித்து அருச்சுனனும் அவனுக்குக் காப்பாகப் பீமசேனன் தன் தேரின் மேல் அடுத்தாற்போல் பின்புறம் தொடர, இருவரும் சேர்ந்து கர்ணனைத் தாக்கிஞர்கள்.

துச்சாதனன் இதைக் கண்டதும் பீமனை எதிர்த்து அம்புமாரி பொழிந்தான். ''சிக்கினுய் துச்சாதனு!'' என்ருன் பீமன். ''செலுத்திய கடனை முதலும் வட்டியுமாக இப்போது தீர்க்கப் போகிறேன். திரௌபதியை நீ தீண்டிய போது நான் எடுத்த சபதம் இப்போது நிறைவேறப் போகிறது'' என்று பீமன் அவன் மேல் பாய்ந்தான்.

திரௌபதியை அவமதித்த பாபிஷ்டனைப் பூமியில் தள்ளி, அவன் அங்கங்களைப் படபட வென்று ஒடித்தான். ''துன்மார்க்கனே! இந்தக் கையல்லவோ திரௌபதியின் தலைக் கூந்தலைப் பிடித்தது. அந்தக் கையை உடலிலிருந்து பிய்த்து எறியப் போகிறேன். உனக்கு உதவியாக யாரேனும் இப்போது வரட்டும்! உன்னைக் காப்பாற்றும் திறமை வாய்ந்தவர் யாரேனும் இப்போது வரலாம்'' என்று துரியோதனனுக்குக் கேட்கு மாறு சொல்லிக் கோப பரவசமாய்த் துச்சாதனனுடைய கையைப் பிடித்துப் பிய்த்து இழுத்து எறிந்தான். பிறகு அவனுடைய ரத்தத்தை உறிஞ்சிக் குடித்துப் பீமசேனன் காட்டு மிருகத்தைப் போல் மிகக் கோரமாகக் காட்சி தந்தான்.

''முடித்தேன்! இந்தப் பாபியைக் குறித்துச் செய்யப்பட்ட சபதம் நிறைவேறிற்று. இனி இந்தத் துரியோதனனைப் பற்றியது எஞ்சி நிற்கிறது. அந்த யாகப் பசுவும் தயாராகட்டும்'' என்று சொல்லிப் பீமசேனன் யுத்தத்தில் யம சொரூபமாகத் தாண்டவம் ஆடினுன். இந்தக் கோரக் காட்சியைப் பார்த்து, அனைவரும் நடுங்கிஞர்கள். கர்ணனுடைய உடலும் நடுங்கிற்று.

சல்லியன் கர்ணனைத் தேற்றிஞன்: ''இது தீரனுன உனக்குத் தகாது. துரியோதனன் மனமுடைந்து நிற்கும் போது நீயும் தைரியத்தை இழக்கலாகாது. துச்சாதனன் இறந்தபின் உன்னைத்தான் அனைவரும் நம்பியிருக்கிருர்கள். முழுப் பொறுப்பும் பாரமும் இப்போது நீ தாங்க வேண்டும். க்ஷத்திரிய தருமத்தை நடத்து. அருச்சுனனைத் தாக்கி வெற்றியோ சுவர்க்கமோ பெறுவாயாக'' என்ருன்.

தேரை ஓட்டிய சல்லியன் சொன்னதைக் கேட்ட கர்ணன், கண்கள் சிவக்கக் கோபாவேசமாய் அருச்சுனனைத் தாக்கச் சென்ருன்.

''இந்த யுத்தம் போதும். இனி விரோதத்தை நிறுத்துங்கள். துரியோதனு! என் அப்பனே, பாண்டவர்களிடம் சமாதானம் செய்து கொள். யுத்தத்தை நிறுத்து'' என்ருன் அசுவத்தாமன்.

''அந்த மூர்க்கனுன பீமன் காட்டு மிருகம் போல் தம்பியின் ரத்தம் குடித்துக் கொண்டு பேசியது உன் காதில் விழவில்லையா? பக்கத்திலே இருந்தாயே? சமாதானம் ஏது? வீண் பேச்சு ஏன் பேசுகிருய்?'' என்று துரியோதனன் அசுவத்தாமனுக்குச் சொல்லிவிட்டுச் சேனையை மறுபடியும் வியூகப்படுத்திப் பாண்டவர்சனைத் தாக்கக் கட்டளையிட்டான். **(தொடரும்)**



சிந்திப்பதற்கு ஓர் இடைவேளை





கொறிப்பதற்குக் கொஞ்சம்



பிரிட்டிஷ் மனோதத்துவ நிபுணர் ஒருவர் சமீபத்தில் ஓர் அரிய யோசனையை வெளியிட்டிருக்கிறார். சாதாரணமாக அலுவலகங்களிலும், தொழிற்சாலைகளிலும் வேலை பார்க்கும் ஊழியர்கள் எதையும் முறைப்படி சிந்தித்துப் பார்ப்பதில்லையென்றும், யாராவது எதையாவது சொன்னால் அதை அப்படியே கண்மூடித்தனமாகப் பின்பற்றுகிறார்கள் என்றும் குறைப்பட்டுக் கொள்ளும் இந்த நிபுணர், ஊழியர்கள் சுயமாகச் சிந்திப்பதற்கு அலுவலக நேரத்தில் பத்து அல்லது பதினைந்து நிமிடம் 'சிந்தனை இடைவேளை' விடவேண்டும் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

பிரிட்டிஷ்காரருக்கு இப்போது தோன்றியிருக்கும் யோசனை நம் ஊர்க்காரர்களுக்கு எப்போதோ தோன்றி விட்டிருக்கிறது என்று நாம் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அவர் வேண்டுமானால் 'சிந்தனை இடைவேளை' என்று பெரிய பெயராகச் சொல்லி நம்மைப் பயமுறுத்தலாம். நாம்தான் இந்த முறையை வெகு நாட்களாகக் கடைப்பிடித்து வருகிறோமே!....

என்னுடன் வேலை பார்ப்பவர்களில் பாதிப் பேருக்கு வெற்றிலை பாக்குப் போடும் பழக்கம் உண்டு. மீதிப் பேர் சிகரெட் தாசர்கள். வெற்றிலை — சீவல்காரருக்கு ஒரு தடவை வெற்றிலை போட்டுக் கொள்ள ஐந்து நிமிடங்கள் ஆகிறதென்றால், சிகரெட் பிரியருக்கும் அதே நேரம்தான் ஆகிறது. சீவலைப் பொறுக்கி யெடுப்பது (அல்லது பாக்குவெட்டியால் தாமே வெட்டுவது) வெற்றிலைக்குப் 'பாலிஷ்'

ஏறும்படி வேட்டியில் துடைப்பது, சுண்ணாம்பைப் பக்குவமாகத் தடவுவது, புகையிலையை வாத்ஸல்யத்துடன் வருடிக் கொடுப்பது — இத்தனைக்கும்தான் ஐந்து நிமிடங்கள். வெற்றிலை போட்டுக் கொண்ட பிறகு புகையிலைக் காரம் 'ஜில்' லென்று மண்டையில் ஏற, அந்தப் பேரானந்தத்தில் கண் மூடித் திளைத்திருக்கப் பிடிப்பது, பத்து நிமிடங்கள். ஆக, ஒரு தடவை வெற்றிலை போட்டுக் கொண்டால் அடுத்த பதினைந்து நிமிடங்களுக்கு, அவர் 'சிந்தனை இடைவேளை' எடுத்துக் கொள்வதாகவே அர்த்தம்.

சிகரெட்தாசர்கள் விஷயமும் இப்படித்தான். சிகரெட்டைப் பெட்டியின் மேல் பதமாகத் தட்டுவது; உதட்டில் நாசூக்காகப் பொருத்திக் கொள்வது; பற்ற வைத்துக் கொண்ட பிறகு புகை வளையங்களை உருவாக்குவது; வளையத்துக்குள் வளையம் போட்டுப் பழகுவது; மோட்டுவளையைப் பார்ப்பது; தீக்குச்சியால் காதைக் குடைவது; அல்லது பல் — ஆராய்ச்சியில் மூழ்குவது; சாம்பல் கிண்ணத்தை மேஜை மீது வைத்துச் சுழற்றுவது; இத்தனைக்கும் பத்து நிமிடங்கள் பிடிக்காதா என்ன?.... இது 'சிந்தனை இடைவேளை' இல்லாமல் வேறென்னவாம் ?....

எந்த ஆபீசை எடுத்துக் கொண்டாலும் அதிலே குறைந்தபட்சம் பொடிப் பிரியர் ஒருவராவது இருப்பார். நானும் பார்த்திருக்கிறேன்; பொடி மட்டையிலிருந்தோ டப்பியைத் தட்டியோ பொடியை எடுக்கும் வரையில் — சுமார் ஐந்து முதல் பத்து நிமிஷங்கள் வரை — மௌனச் சாமியாராகவே நிறையப் பேர் இருப்பார்கள். காரணம் சிந்தனை ! பொடியைக் கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் இடையில் இடுக்கிக்கொண்ட பிறகு, அத்தனை நேரம் சிந்தித்ததை மணிக்கணக்கில் பேசித் தீர்ப்பார்கள் ! அவர் பொடியை உறிஞ்சித் தும்மல் போடும் வரையில் 'சிந்தனை இடைவேளை' தானே ?

இவர்களைத் தவிர, ஆபீசில் வந்து ரேஸ் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்து எந்தக் குதிரை ஜெயிக்கும் என்று சிந்திக்கிறவர்கள் எத்தனை பேர் ! அரை மணி நேரம் பென்சிலைச் சீவியபடி உட்கார்ந்து, பெண்டாட்டி போட்ட சண்டையின் நியாய அநியாயங்களைப் பற்றிச் சிந்தித்துத் தமக்குத் தாமே சாதகமான தீர்ப்பு வழங்கிக் கொள்கிறவரும் உண்டு. ஜன்னல் வழியே தெருவில் போகிற — வருகிற கார்களைப் பார்த்தபடி நாளைக்கு என்ன காரணத்தைச் சொல்லி லீவு போடலாம் என்று சிந்திப்பவர்களை நமக்குத் தெரியாதா என்ன? ஆக, அத்தனை பேரும் சிந்தனை இடைவேளையின் அருமை பெருமைகளை உணர்ந்தவர்கள்தாம். இருந்தாலும் இந்த இடைவேளையை இன்னும் எப்படிக் கவர்ச்சிகரமாகப் பண்ணலாம் என்று யோசித்துப் பார்த்ததில் சில யோசனைகள் தோன்றின. சிந்தனை இடைவேளை இருந்தால் போதுமா? சிந்தனைக்கு உகந்த சூழ்நிலையையும் காரியாலயத்தில் ஏற்படுத்த வேண்டாமா ?

குளியலறையில் மட்டுமே பாடிப் பழகியவர்களுக்கு நடு ஆபீசில் வாய் விட்டுப் பாடச் சந்தர்ப்பம் அளிக்கலாம்.

சிலர் யோகாசனப் பிரியர்களாக இருக்கலாம். அவர்களை ஆபீஸ் வேளையில் யோகாசனம் பழகவும், மற்றவர்களுக்குக் கற்றுத் தரவும் அநுமதிக்கலாம்.

ஓவியக் கலையில் விருப்பமுள்ளவர்கள் ஆபீஸ் சுவர்களிலேயே ஓவியம் தீட்டிப் பழகலாம். (இதனால் அவர்களுக்கு வெள்ளையடிக்க வேண்டிய செலவும் மிச்சமாகும்.)

ஜப்பானிய 'ஓரிகாமி' முறைப்படி, காகிதத்தில் யானையோ, கழுதைப் புலியோ, கடுவன் பூனையோ செய்து பார்த்து மகிழலாம்.

மேலே சொன்ன எதிலும் விருப்பமில்லாதவர்கள், நன்றாகக் காற்று வரும் இடமாகப் பார்த்து, காகிதங்களைத் தரையில் பரப்பிவிட்டு, பைல் கட்டுக்களைத் தலைக்கு உயரம் வைத்துக் கொண்டு ஹாய்யாகப் படுக்கலாம்.

அப்புறம் பாருங்களேன், சிந்தனை வேகம் என்னமாகச் செயல்படுகிறதென்று !

முக்கிய குறிப்பு: இத்தனை மணி மணியான யோசனைகளும் நான் ஆபீசில் எடுத்துக் கொண்ட 'சிந்தனை இடைவேளை'யின் நேரப் பலன்தான் !

— **எஸ். வி. ஆர்.**



மளிகைக் கடையும் மாளிகைக் கடையும்



திரு பி. வெங்கடேஸ்வர ராவ்
(உரிமையாளர், வெங்கடேஸ்வர ராவ் ஸ்டோர்ஸ்)

ஒன்பது குழந்தைகளில் கடைசியாகப் பிறந்தவன் நான். அப்பா வைதிகம். பூர்விகச் சொத்து இரு நூறு ரூபாய் பெறுமானமுள்ள நிலம். நெல்லூர் ஜில்லா வென்னூரிலிருந்து படிப்பதற்குச் சென்னை வந்தேன். உபகாரச் சம்பளம். சிநேகிதர் வீட்டில் சாப்பாடு. தெரிந்தவர் வீட்டில் இடம். எஸ். எஸ். எல். சி. செலக்ஷன் பரீட்சை எழுத வேண்டிய நேரத்தில் அம்மை சுரம். படிப்பு நின்றது. வயது பதினேழு. ஓர் அண்ணா பட்டணத்தில் நெய் வியாபாரம் பண்ணிக் கொண்டிருந்தார். எனக்கும் அந்த எண்ணம் தோன்றியது. கைக் காப்பை 'அடகு' வைத்துப் பதினைந்து ரூபாய் வாங்கினேன். சாப்பாட்டுக் கடையில் ஐந்து ரூபாய் முன்பணம் கட்டினேன்; ஐந்து ரூபாய்க்குத் தராசு எடைக் கல் வாங்கினேன். மீதி ஐந்து ரூபாய்க்கு இரண்டு வீசை நெய் வாங்கினேன்.

புரசைவாக்கத்தில், தெரிந்த ஒரு ஹோட்டல் வாசலில், ஒரு மூலை வாடகையில்லாமல் கிடைத்தது. கீழே இருந்த பள்ளத்தைப் பலகை போட்டு மூடி, "நெய்க் கடை" ஆரம்பித்தேன். ஒரே நாளில் நாலு முறை கூடக் கொத்தவால்சாவடிக்கு நடந்திருக்கிறேன். ஒரு வாரத்தில் முப்பத்தாறு வீசை கொண்ட மூன்று டின் நெய்யை ஓர் ஆந்திர வியாபாரி என்னிடம் கொடுத்து, விற்ற பிறகு பணம் தரச் சொல்லிவிட்டு ஊருக்குப் போய்விட்டார். அவர் திரும்ப ஆறு மாதம் ஆயிற்று. இதற்குள் என் வியாபாரம் பல மடங்கு பெருகி, நான் புதுக் கடை வாடகைக்கு எடுக்கும் அளவும் எனக்குப் பெண் கொடுக்க ஒருவர் முன் வரும் அளவும் வளர்ந்து விட்டது!

இது நாற்பது வருஷங்களுக்குமுன். முதலில் ஒண்டிய ஹோட்டல் வீட்டையே இப்போது விலைக்கு வாங்கி விட்டேன்.

ஒரு முறை நான் செலுத்திய வரித் தொகையைக் கவனித்து எனக்குச் சர்க்கரைக் 'கோட்டா' வழங்கினார்கள். அப்போது சௌகரியத்துக்காக மளிகைச் சாமான் சுமார் ஐந்நூறு ரூபாய்க்கு வாங்கிப் போட்டேன். முதன் முறை சேகரித்த மளிகைச் சாமான் அத்தனையும் ராதா கல்யாண உற்சவத்துக்குச் செலுத்திவிட்டேன்!

முக்கியமான பிஸினஸ் நெய். தினம் வாகனில் நூறு டின் வரை வரும். செலவாகும். டவுன் எல்லாம் பல ஹோட்டல்களுக்கும் சப்ளை செய்திருக்கிறோம். மாட்டு வண்டி வைத்துக் கொண்டு பேட்டை பேட்டையாக வீடுகளுக்கு வாரம் தவறாமல் கொடுத்து வர ஏற்பாடு செய்தேன். கடை வியாபாரமே அதிகமாகி விட்டதால், நாளடைவில் வண்டி வியாபாரத்தைக் குறைத்து விட்டேன். மயிலாப்பூரிலும் திருவல்லிக்கேணியிலும் கிளை வைத்திருக்கிறேன்.

எத்தனையோ குடும்பங்களுக்கு அவர்கள் குடித்தனம் வைத்த காலம் முதல்—இரண்டு தலைமுறைகளுக்கு மேல்—நான் சப்ளை செய்து வருகிறேன். கடன் உண்டு, ஆனால் மனஸ்தாபம் கிடையாது. பல பிரமுகர்கள் தங்கள் வீட்டில் ஒரு விசேஷம் என்றால் இப்போதும் மஞ்சள் குங்குமம் மட்டுமாவது என்னிடம்தான் வாங்குவார்கள். கைராசியாம்.

நெய்க் கடையாகத்தான் தொடங்கினேன். நாளடைவில் வீட்டுக்கு வேண்டிய சகல சாமான்களும் கிடைக்கும் கடையாகப் பண்ணி விட்டேன். புளி, மிளகாய் என்றெல்லாம் அங்கங்கே கிடைக்கும் ஊருக்குப் போய் வாங்கி வருவேன்.

நெல்லூரிலிருந்து வாகன் வாகனாக அரிசி கொண்டு வந்து, மூட்டை மூட்டையாக வியாபாரம் செய்ததும் உண்டு. அரிசியிலே லாபம் ரொம்பக் கம்மி. மூட்டைக்கு நாலணா எட்டணாதான் வரும். வேகமாக விற்பனை ஆனபடியே இருந்தால், அதன்பயனா ஆதாயம் கிடைத்தால்தான் உண்டு.

ரேஷன் வந்தது. கிடைக்கும் அரிசியைத் தானே சப்ளை செய்ய வேண்டும்? அரிசி நன்றாக இராவிட்டால், 'இவர் கடையிலே எல்லாச் சாமானும் இப்படித்தானா?' என்று கேட்டு விடுகிறார்கள்! ரேஷனை நிறுத்தி விட்டேன்.

பழைய காலத்து நிகழ்ச்சி ஒன்று. தினம் வெண்ணெய் புதிதாக வரும். பெரிய அடுப்பில் காய்ச்சியபடி இருப்போம். நெய் கேட்பவருக்குச் சுடச் சுட ஊற்றுவோம். மிஸ் ஸ்கார்ட்டன் என்னும் கிறிஸ்துவ மிஷனரி அம்மாள் ஒரு சமயம் பெரிய ஜாடி நிறைய நெய் வாங்கினார். நான்தான் ஊற்றினேன். ஜாடி மேலே பட்ட பிசுக்கைத் துடைக்கக் கந்தல் எதுவும் சட்டென அகப்படவில்லை. வெகு சகஜமாக என் சரிகை அங்கவஸ்திரத்தால் துடைத்தேன். அந்த அம்மாள் அப்படியே அசந்து விட்டார்கள். அப்புறம் அவர்கள் பல வருஷ காலம் கிறிஸ்துமஸுக்கு எனக்கு உயர்ந்த பரிசு அனுப்பி வந்தார்கள்.



மளிகைக் கடைக்காரருக்கு நஷ்டம் என்று வராது என்று சொல்லுவேன். கடை வைப்பவருக்குக் கெட்ட பழக்கம் ஒன்றும் இல்லாமல் இருக்க வேண்டும். ஒன்றின் விலை குறைந்தால் மற்றொன்றின் விலை கூடும். இதற்கு மிஞ்சின பிஸினஸ் கிடையாது.

திரு சி. பி. லால்வானி

(மானேஜிங் பார்ட்னர், 'திருப்தி' டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ஸ்)

பல வருஷ காலம் வெளிநாடுகளிலேயே குடும்பத்துடன் இருந்தேன். ஹாங்காங்கிலும் ஜப்பானிலும் எந்தச் சின்ன சாமான் வாங்குவதற்கும் டிபார்ட்மெண்ட் ஸ்டோருக்குப் போவது சகஜம். அத்தகைய ஸ்டோர் நமது நாட்டிலும் சில உண்டு. ஆனால் வெள்ளைக்காரரும் வசதி படைத்தவரும் வாங்குவதற்கு என்றே தொடங்கிய கடைகள். நடுத்தரக் குடும்பத்துப் பெண்கள் சாதாரண குடித்தனச் சாமான்களை வாங்கும்படியான டிபார்ட்மெண்ட் ஸ்டோர் தொடங்கினால் என்ன என்பதை நீண்ட நாள் யோசித்துப் பார்த்தோம்.

''எவ்வளவு பெரிய கடை! விலையும் அதிகம்தான் இருக்கும்'' என்று மயங்குவோர் கூட வந்து பழகிவிட்டால் பின்னால் தாங்களாகவே உண்மையைத் தெரிந்து கொள்வார்கள் என்பது எங்கள் நம்பிக்கை.

இம்மாதிரி கடைகளில் கடன் கிடையாது. அது மட்டுமல்ல விசேஷம். நாங்களும் கடனுக்கு வாங்குவது கிடையாது. அதில் தான் இருக்கிறது எங்கள் அடிப்படைத் தத்துவம். நாங்கள் பொருள்களை விற்பதால் லாபமடைவதில்லை; அவற்றை வாங்குவதிலே லாபம் காண்கிறோம். மொத்தமாக வாங்குவதில் கிடைக்கும் சலுகை; உடனுக்குடன் ரொக்கம் கொடுத்து வாங்குவதில் கிடைக்கும் சிறு சலுகை; தயாரிப்பு நிலையத்திலேயே சென்று வாங்குவதில் கிடைக்கும் ஆதாயம் எல்லாவற்றையும் பயன்படுத்திக் கொள்கிறோம். மார்க்கெட் விலைக்கோ — சில சமயம் அதைவிடச் சற்றுக் குறைத்தோ — எங்களால் விற்க முடிகிறது. அதிகமாக விற்பனையானால் விலையை இன்னும் குறைக்க முடியும்.


இன்னுமொன்று. வெளிநாடுகளில் பார்த்துக் கற்றுக் கொண்டது. கடையில் இருக்கும் எல்லாப் பொருள்களையும் பார்வையாக வைப்பது. சிறு பொருளுக்கும் உரிய விலையை அதன் மீதே எழுதி வைப்பது. சில இடங்களில், இதில் யாரும் விஷமம் செய்யாதிருக்க, மெஷினிலே விலையைப் பொறிப்பதுண்டு.

வெளி நாட்டிலே பார்த்த பழக்கம் என்பதற்காக எதையும் நமது ஊரிலே புதிதாகத் தொடங்கிவிட முடியாது. நமது மக்களின் பழக்க வழக்கங்களுக்குத் தகுந்தபடிதான் சில காரியங்களைச் செய்ய வேண்டும். அதோடு நிர்வாக சம்பிரதாயங்களும் இங்கே வேறு. சில சாமானுக்கு ஐந்து சதவீதம், சிலவற்றுக்கு மூன்று சதவீதம் என்றெல்லாம் வரிக்கு ஏற்றபடி தனித் தனி பில் போட வேண்டும். வெளி நாட்டிலே, பில் போடுவது இல்லை — மொத்த சாமான் விலையைக் கூட்டுவதோடு சரி.


இந்தப் புதிய மூன்றடுக்கு மளிகைக் கடையைத் திறக்க நாங்கள் மந்திரிகளையோ, சினிமாக்காரர்களையோ அழைக்கவில்லை. சில குழந்தைகளைக் கூப்பிட்டே திறக்கச் செய்தோம்!

வீட்டு மளிகையா, சிறு குழந்தைகளின் தேவையா, வரவேற்பு அறை, படுக்கை அறைச் சாமான்களா, எல்லாம் ஒரே இடத்தில் அலைச்சல் இல்லாமல் வாங்க முடிந்தால் வீட்டுப் பெண்டிருக்கு உதவியாக இருக்கிறது. போகப் போக இத்தகைய கடைகள் அதிகம் ஆகலாம். அதனால் இப்போதுள்ள சிறு கடைகளுக்கு ஒன்றும் ஆபத்து இல்லை. அவர்களிடம் கணக்குக்கு வாங்கும் மத்திய தரக் குடும்பத்தினர் என்றும் இருப்பார்கள். விலைதான் கொஞ்சம் வித்தியாசமாக இருக்கும்.


— பேட்டி: **அம்பி ஆசீர்வாதம்**


007 பாலு
கதை: குமரன்
20
படம்: விஜயா
பாலுவையும் சுந்தரையும் ஒழித்துக்கட்ட மேற்கொள்ளப்பட்ட இரு முயற்சிகளும் தோல்வியுற்றன என்பதைக் கேள்விப்பட்டதும் ராஜனின் மீசை துடித்தது. ஜோக்கரை டெலிபோனில் கூப்பிட்டுப் பேசினான்.
திண்டு மெத்தையில் சாய்ந்து தூங்குறியா? கையாலாகாத பசங்ககிட்ட என் பொறுப்பை ஒப்படைச்சேன்! நீயே போறத்துக்கு என்ன கேடு!
எஸ், பாஸ். கோவிச்சுக் காதீங்க...
...இதோ கிளம்பிக்கிட்டே யிருக்கேன். பயல்கள் எலிபெண்டா தீவுக்குப் போகிறதா அவுங்களை ஃபாலோ பண்ணின நம்ம ஆள் செய்தி சொல்லியிருக்கான். கேட் வே ஆஃப் இந்தியா கிட்டே நான் அவங்களுக்காகக் காத்திருப்பேன்!
பாலுவும் சந்திரனும் கேட் வே ஆஃப் இந்தியா அருகில் வந்த போது.....
கம் ஆன் ஸார்! அச்சா போட். சீப் ரேட்!
இந்தப் படகு புதுசா, அழகா இருக்குடா இதிலேயே போவோம்.
நீரைக் கிழித்துக் கொண்டு படகு விரைந்தது. விசைப் படகைச் செலுத்தியவன் ஜோக்கர் என்பதை உணராத நண்பர்கள் உல்லாசமாக இருந்தார்கள். தொலைவில்.....
இன்னொரு விசைப் படகில் இருந்த பார்த்தனும் விக்ரமும் இப்படகைக் கண்காணித்து வந்தார்கள்.
இரண்டு கண்டம் கருத்துத் தப்பிச்சிட்டாங்க, இன்னும் என்னென்ன ஆபத்து வரப் போகிறதோ?
கவலைப் படாதீங்க பார்த்தன்.
கரையை விட்டு வெகு தூரம் வந்து ஆழ் கடலில் சென்று கொண்டிருந்த படகு சட்டென்று நின்றது.
சுந்தர்! ஏன் இஞ்சின் நின்னு போச்சு?
என்ன பாப்? பெட்ரோல் தீர்ந்து போச்சா?


பதில் சொல்லத் திரும்பிய ஜோக்கரின் கரத்தில் துப்பாக்கி சூரிய ஒளிபட்டு மின்னியது.
பெட்ரோல் நிறைய இருக்கு. உங்க ஆயுசுதான் தீர்ந்து போச்சு!
ஜோக்கர் ஹிந்தியில் பேசியது சுரேஷுக்குப் புரிந்தது. பாலுவுக்குப் புரியவில்லை. மரணம் அத்தனை அருகில் என்பதைப் புரிந்து கொண்டு என்ன பயன்? ஆனாலும் பாலு படகுக்காரனுடன் தொடர்ந்து பேச்சுக் கொடுக்குமாறு சுரேஷுக்குச் சொன்னான்.
துப்பாக்கியால் எங்களைச் சுட்டுத் தள்ளிவிட்டுச் சுலபமாகத் தப்பிச்சுக்க முடியும்னு நீ நம்பறியா?
அவசியம் நேர்ந்தால் சுடத் தயங்க மாட்டேன். ஆனால் அதை விட நல்ல உபாயம் உண்டு. சத்தமும் கேட்கக் கூடாது; உடலும் மிதக்கக் கூடாது! ஆகவே....
....இப்போ நீங்க இரண்டு பேரும் கயிறுகளைக் காலில் கட்டிக் கொண்டு கடலில் குதிக்க வேண்டும்! கயிறுகளின் மறுமுனைகளில் பெரிய பாறாங்கற்கள் கட்டப் பட்டுள்ளன. அவற்றைக் கடலில் உருட்டி விட்டு விடுவேன்! இரண்டு பேரும் ஜல ஸமாதி! ஹா... ஹா... ஹா...
எப்படியும் நீ மாட்டிக்குவே!
மாட்டேன்! நாளைக்கு உங்களைத் தேடுவாங்க. ஆனால் ஆழ்கடலில் அடங்கியாச்சு யாருக்குத் தெரியும்? இந்தப் படகு இன்று மாலையே யாருமில்லாத இடத்தில் தீக்கிரையாகிவிடும். நானும் சில நாட்களுக்குத் தலைமறைவாகப் போய் விடுவேன்.
அதோ! அந்தக் கயிறுகளைக் காலில் கட்டிக் கொள்ளுங்கள் உம்... சீக்கிரம்!
துப்பாக்கி முனையில் நின்ற இருவருக்கும் சொன்னபடி கேட்பதைத் தவிர வேறு வழி?
தொடரும்....



அனந்தபூர் ஸாஹிப் - கோட்டை.



அனந்தபூர் ஸாஹிப் - குருத்வாரா.
(கால்ஸா பந்தின் பிறப்பிடம்)

மஞ்சள் கொடியும் மாசில்லா வீரமும்

தி. சா. ராஜு


சநாதன தர்மம், இஸ்லாமியர்களின் சம தர்மம், கட்டுப்பாடு, தொண்டுள்ளம் ஆகியவைகளின் இணைப்பாக ஒரு சமயம் உருவாக வேண்டும் என்று பாபா நானக் விரும்பினார். இவர் பெரும் ஞானி. அவதார புருஷர். கபீர்தாசரின் சம காலத்தவர். சக்கரவர்த்தி பாபரின் காலத்தில் வாழ்ந்தார். அவருக்குப் பின்னர் ஒன்பது குருமார்கள் தோன்றினர். ஜஹாங்கீர் தலைமுறையிலிருந்து ஔரங்கசீபின் ஆட்சி காலம் வரை சீக்கிய குருக்களும், அந்தச் சமயத்தினரும் வேற்று மதத்தினரின் ஆளுகையில் அடைந்த தொல்லைகளுக்கு எல்லையே இல்லை. அவர்கள் தங்கள் சமய ஆசாரத்தின் சுதந்திரத்தின் பொருட்டுப் பல உயிர்களைப் பலி தர வேண்டியிருந்தது. ஆகவே, அவர்களுடைய பத்தாவது குருவான கோவிந்த சிங் சீக்கிய சமயத்துக்கு ஓர் ஒழுங்கான சமுதாய அமைப்பைக் கொடுத்து அவர்களை ஒரு படைத் தொகுப்பாக மாற்றினார். இது கால்ஸாபந்த் என்னும் பெயர் பெற்றது. 1756ம் ஆண்டு வைசாக மாதம் முதல் தேதி 9து பிறந்த நாள் ஆகும். (சித்திரையை வைசாகம் என்று கூறுவது பஞ்சாபியர்களின் வழக்கம்.) தமிழ்ப் புத்தாண்டு தினமும் பைசாகி விழாவும் அநேகமாக ஒரே நாளில் வரும்.

'கால்ஸா' அமைப்புக்கு ஐந்து சின்னங்களை அவர் அளித்தார். அவை அரைக் கச்சை, கைக்கடகம், கேசம், சீப்பு, உடைவாள் ஆகியவை. ஐந்து என்ற எண் சீக்கிய சமயத்தில் புனிதமான எண்ணிக்கையாகக் கருதப்படுகிறது. இந்த ஐந்து சின்னங்களையும் சீக்கிய ஆண் பெண் இருபாலாரும் தரித்தாக வேண்டும். இந்தப் புறச் சின்னங்களில் ஏதாவது ஒன்று குறைந்தாலும் அதை அவர்களுடைய சமயத்தினர் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள்.

சீக்கிய சமய நூல் கிரந்த் ஸாஹிப் என்பதாகும். பாபா நானக்கிலிருந்து அவருடைய சீடர்கள், கடைசிக் குருவான கோவிந்தசிங் ஆகியோர் வரை உதிர்த்த மணி வாக்குகள் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன. இதைக் குருவாணி என்றும் அழைப்பார்கள். இதன் எழுத்துக்கு 'குருமுகி' என்று பெயர். இது நாகரி லிபியுடன் தொடர்பு கொண்டது. சமயக் கொடி மஞ்சள் நிறம். இறைவனின் படைப்பிலுள்ள எல்லையற்ற ரகசியம், உடல், உள்ளம், அறிவு ஆகியவற்றைக் கடந்த பேரானந்த நிலையில் தோன்றும் சிறப்பான காட்சி ஆகியவற்றை விவரித்துக் கூற இயலாத நிலையில், 'வாஹ்குரு' என்ற அதிசயோக்தியை விவரிக்கும் சொல் இவர்களுடைய தாரக மந்திரமாக விளங்குகிறது. 'வாஹே குருஜீகி கால்ஸா, வாஹே குருஜீகீஃபதே' என்ற வாசகத்தைப் பிரார்த்தனையின் இறுதியில் இவர்கள் எழுப்புவார்கள். சீக்கியர்கள் ஒருவரை யொருவர் சந்தித்துக் கொள்ளும் போது கூறும் வாழ்த்து 'ஸத் ஸ்ரீ அகால்' என்பதாகும். அகால் என்ற சீக்கிய சங்கத்தை வாழ்த்தும் சொல்லாகும் அது.

'ஸாஹிப்' என்ற சொல் மிகவும் மரியாதை மிக்க புனிதமான அடைமொழியாகக் கருதப்படுகிறது. 'ஷா' — மன்னன், தலைவன் — என்ற பாரசீகச் சொல்லின் திரிபு இது.

குருத்வாரா - உட்புறத் தோற்றம்.





போரா ஸாஹிப் - வெளிப்புறம்.

சீக்கிய சமய நூலுக்கே ஸாஹிப் என்ற அடைமொழியைத் தந்திருக்கிறார்கள். சீக்கிய குருமார்கள் பிறந்த மண், அவர்கள் பலிதானமான தலங்கள், அவர்களுடைய வரலாற்றில் தொடர்பு கொண்ட ஊர்கள் அனைத்தும் ஸாஹிப் என்ற மரியாதை மொழியுடனேயே அழைக்கப் பெறும். அமிர்தசரஸ் சீக்கியர்களின் காசி. அங்குள்ள குருத்வாராவை இவர்கள் தர்பார் ஸாஹிப் என்று பெயரிட்டுள்ளார்கள்.

குருத்வாராவின் சிறப்பு அம்சம் இவர்களுடைய உணவுச்சாலை. 'லங்கர்' என்று அதை அழைப்பார்கள். அநேகமாகப் பெரிய ஆலயங்களைச் சுற்றி யாத்திரிகர்களுக்கான தர்மசாலா — தங்கும் விடுதி உண்டு. அவர்கள் அனைவருக்கும் எளிய உணவு இலவசமாக அளிக்கப்படும். அதை அவர்கள் பிரசாதமாக ஏற்று மகிழ்வார்கள். ஆலயங்களுக்கு வரும் யாத்திரிகர்களுக்கான குற்றேவல் புரிவது — அவர்களுடைய காலணிகளைப் பாதுகாப்பதிலிருந்து, பிரசாதம் வழங்குவது வரை — ஆலயத் தூய்மை கெடாமல் வைப்பது, பாத்திரங்கள் கழுவுவது ஆகிய பணிகளைச் சிரத்தையுடன் புரிகிறார்கள். ஆலயத்துக்கும் பக்தர்களுக்கும் புரியும் தொண்டு ஆண்டவனுக்கே உரியதாகும் என்பது இவர்கள் நம்பிக்கை. வெளியே பல தான பாத்திரங்கள் இருக்கும். கோதுமை மாவு, காய்கறி, பருப்பு வகைகளை அங்கு பக்தர்கள் காணிக்கையாகச் செலுத்தலாம். அவை மறுபடியும் யாத்திரிகர்களின் உணவுக்கே பயன்படுகிறது. இதைக் காணும்போது காமகோடி பெரியவர்களின் பிடியரிசித் திட்டமும் வினோபாஜியின் சர்வோதய பாத்திரமும் நம் நினைவுக்கு வராமல் இராது. பகட்டான தூய ஆடை அணிந்த பாடகர்கள் உரத்த குரலில் இனிமையாக உள்ளத்தை ஈர்க்கப் பாடுகிறார்கள்.

பாரத தர்மத்தை, கலையை — ஆசாரத்தைப் பாதுகாப்பதற்கு ஒரு படையினமாகவே 'கால்ஸா' பந்தைக் குரு கோவிந்தர் நிறுவினார். வன்முறைச் செயல்களை வாள் கொண்டும் எதிர்ப்பது தனி மனிதனின் கடமை என்று அவர் கீதாசாரியனைப் போல் வலியுறுத்தினார். அவ்வாறு செய்வது மறமாகாது. அருள் மிக்க தொண்டு என்று கூறி வாளுக்கே 'கிருபாண்' — கருணையுள்ளது — என்று பெயர் சூட்டினார். அன்னை துர்க்கை, வைர சம்ஹாரி, காளியை வழிபட்டு அருள் பெற்றார். அழியாப் புகழ் அடைந்தார்.

அவர் சிறந்த போர் வீரர். தளகர்த்தர், மன்னர், பரம பக்தர், ஞானி, ரசிகர், கவிஞர், பேச்சாளர், செயல் வீரர். இத்தனை நற்பண்புகளின் தொகுப்பெண்ணிக்கையாக அவர் அவதரித்ததின் காரணமாக ஹிந்து சமயம் பிழைத்தது.

குடும்ப வாழ்க்கையிலும் குரு அவர்கள் பெரும் தியாகி. அவருக்கு நான்கு புதல்வர்கள் பிறந்தார்கள். மூத்தவரான அஜீத்சிங்கும், ஜுஜூரசிங்கும் 'சம்கோர்' போர்க்களத்தில் உயிர் துறந்தனர். இளையவர்களான ஜொராவர் சிங்கையும் ஃபதே சிங்கையும் உயிருடன் வைத்துச் சுவரெழுப்பினார்கள் மொகலாயர்கள். ஸர்ஹிந்த் என்ற தலத்திலுள்ள அந்தக் குருத்வாராவை எண்ணும்போதெல்லாம் சீக்கியர்களின் கண்களில் நீர் பெருகும்.


கோவிந்தரின் வாழ்க்கையை ஆராய்ந்தவர்கள், அவர் அடிப்படையில் ஒரு பக்தர், அருள் உள்ளம் படைத்தவர் என்று எழுதியிருக்கிறார்கள். 'வன்முறைச் செயல்களினால் எதிரியைத் தாக்க நேர்ந்தபோதும் அவர்களிடம் விரோதம் பாராட்டாதே' என்று அவர் போதித்தார்.

தமிழ் நாட்டு விடுதலை இயக்கத்தில் குரு கோவிந்தரின் நாமம் ஓர் ஆதர்சமாக விளங்கிற்று. மஹரிஷி வ. வே. ஸு. ஐயர் குருவின் வாழ்க்கையில் பெரும் பற்றுதல் கொண்டவர். 'கால்ஸா'வை ஒத்த படை நிறுவனம் ஒன்று இந்தத் தெய்வத் தமிழ் நாட்டில்

'சம்கோர்' போர்க்களம்-கற்பனைத் தோற்றம். வெண்புரவியில் குரு கோவிந்தரின் மகன் அஜீத் சிங்.



பட்டா ஸாஹிப்.



தோன்ற வேண்டும் என்று அவர் ஆவல் கொண்டார். குருகோவிந்த ஸிம்ஹன் என்ற அவரது நூல் இலக்கிய நயம் கொண்டது. அத்துடன் புத்துணர்வு ஊட்டக் கூடியது. மகா கவி பாரதியும் குரு கோவிந்தரிடம் எல்லையற்ற ஈடுபாடு கொண்டார். அவருடைய மின்னல் போன்ற வாழ்க்கை கவிஞருக்கு மிகவும் பிடித்திருந்தது. குருவின் அருள்வாக்கையும் புதிய சமயத்தின் பிறப்பையும் தமது அமர வாக்கினால் தமிழில் நிலைபெறச் செய்தார். சத்ரபதி சிவாஜி, குரு கோவிந்தர் ஆகிய கவிதைகள் தமிழ் மக்களிடையே வீர உணர்ச்சியைத் தூண்டுவதற்காகவே எழுதப்பட்டன.

'ஆயிரத் தெழுநூற் றைம்பத் தாறு
விக்ரம ஆண்டு, வீரருக் கமுதாம்
ஆனந்த புரத்தி லார்ந்தினி திருந்தனன் :
பாஞ்சாலத்துப் படர்தரு சிங்கக்
குலத்தினை வகுத்த குருமணியாவான்...'

என்று பாரதியார் குரு கோவிந்தரின் கதையைத் தொடங்குகிறார்.

எல்லாக் குருத்வாராக்களையுமே சீக்கியர்கள் போற்றி வழிபட்ட போதிலும் அனந்தபூர் ஸாஹிப் குறித்து அவர்கள் எண்ணும்போதே இளகிப் போவார்கள். அதற்குக் காரணம் இங்குதான் கால்ஸா அமைப்பு பிறப்பெடுத்தது.

அனந்தபூர் ஸாஹிப் குருத்வாராவினுள் கர்ப்பக்கிருஹத்தில் குரு அவர்கள் உபயோகித்த ஆயுதங்கள் வைக்கப்பட்டுள்ளன. பெரிய குருத்வாராவை அடுத்து அவர்களுடைய புதல்வர்களின் நினைவாக எழுப்பப்பட்ட சிறிய ஆலயங்களும் உள்ளன.

ரூபட் நகரத்திலிருந்து சண்டிகட் செல்லும் வழியில் இரண்டு மைல் தொலைவில் பட்டா ஸாஹிப் என்ற குருத்வாரா உள்ளது. பட்டா என்றால் காளவாய் என்பது பொருள். இந்த ஆலயம் இருக்கிற இடத்தில் முன்பு உண்மையாகவே ஒரு சுண்ணாம்புக் காளவாய் இருந்தது.

ரூபட்டை அடுத்த பகுதிகள் மொகலாய ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலம் அது. பகைவர்களின் பார்வையிலிருந்து ஒளிய எண்ணிய குரு கோவிந்தர் அங்கு வழியிலிருந்த நியான்கான் என்ற பட்டாணியனைப் புகலிடம் தருமாறு வேண்டினார். குதிரை மேல் வந்திருப்பது யாரோ போக்கற்ற பரதேசி என்று எண்ணிய நியான்கான் அவரைத் தமது சுண்ணாம்புக் காளவாய்க்குப் பக்கத்தில் ஒளிந்து கொள்ளும்படி அலட்சியமாகக் கூறினான். ஐயனும் அவனுடைய சொற்படியே கனல் உமிழும் காளவாயின் பின்னால் சென்று அமர்ந்தார். ஜீவன் முக்தர்களைக் கனலும் புனலும் என்ன செய்யும்? அன்று மாலை வரை அங்கேயே நிர்விகல்பமாய் அமர்ந்திருந்த பக்கிரியைக் கண்டு பரவசம் அடைந்தான் கான். அவரைத் தமது வீட்டுக்கு அழைத்துச் சென்று தக்க முறையில் உபசரித்தான்.

குரு அவர்கள் அந்தப் பிராந்தியத்தில் தங்கியிருப்பதை எவ்விதமோ அறிந்த எதிரிகள் அந்தப் பட்டாணியனது வீட்டை முற்றுகை யிட்டனர். குருவைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் நியான் கான் அவரைத் தமது மகளின் படுக்கை அறையில் சயனிக்கச் செய்தான்.

குமுறிக் கொண்டு வந்த எதிரிகள் குதிரை ஒன்று வெளியில் கட்டப்பட்டிருப்பதைக் கண்டு வீட்டுக்குள் புகுந்து புதிதாக வந்திருப்பது யார் என்று கோஷமிட்டனர். 'அவர் எனது மருமகன்' என்று தயங்காமல் பதிலிறுத்தான் கான். அதைச் சோதிப்பதற்காகக் கானுடைய மகளின் அறையையும் பார்க்க விரும்பினர் எதிரிகள். அவளுடன் ஓர் ஆண்மகன் உறங்குவதைக் கண்டு திரும்பினார்கள்.

மறு நாள் நியான் கானின் மகள் மும்தாஜ் தன் தந்தையின் சொற்களை மெய்ப்பிக்க வேண்டினாள். ஒரு கட்டாயத்தின் பேரில் தம்முடன் இரவைக் கழித்த கோவிந்தரை வாழ்க்கைத் துணையாக ஏற்க விரும்பினாள். குரு அதை மறுத்து உடைவாள் ஒன்றையும் ஒரு கட்டாரியையும் அவளுக்கு அன்பளிப்பாகத் தந்து திரும்பினார். மும்தாஜ் தனது எஞ்சிய வாழ்நாளைக் கன்னியாகவே கழித்தாள். அந்த இரண்டு பொருள்கள் இன்னும் அந்தக் குருத்வாராவில் உள்ளன.

சீக்கிய சமய வரலாற்றைப் பற்றிய பல பெரிய ஓவியங்கள் இந்தக் குருத்வாராவில் இருக்கின்றன. அவைகளில் விளக்கப் பெறும் காட்சிகளிலிருந்து இந்தச் சமயத்தினர் எத்தகைய தியாக வாழ்வை மேற்கொண்டிருந்தனர் என்பது தெரிய வருகிறது. அந்த விவரம் நம்மைப் பிரமிக்க வைக்கிறது.

மூல்தான் கோட்டையைத் தகர்க்கச் சென்ற பீரங்கி வண்டியின் ஒரு பக்கத்து அச்சு இற்று விடுகிறது. அதனால் சக்கரம் விழுந்துவிட்டது. அந்தச் சக்கரத்தின் இடத்தில் ஒருவர் தோள் கொடுத்து நின்றால்தான் பீரங்கியைச் சுட முடியும். ஒவ்வொரு முறை பீரங்கி சுடும்போதும் அதைத் தாங்குபவர் உயிர் இழப்பார். என்றாலும் அந்தப் பணியைச் செய்யும் பொருட்டு வரிசையாக நிற்கும் வீரர்களின் திருவுருவம் நம் உடலைச் சிலிர்க்கச் செய்கிறது.

பாஞ்சாலத்தில் பெண்கள் மூக்குக் குத்திக் கொள்ளும் வழக்கம் எப்படி ஏற்பட்டது என்பதை வர்ணிக்கிறது இன்னொரு சித்திரம். தம்முன் கொண்டுவரப்படும் ஒவ்வொரு சீக்கியனின் தலைக்கும் எண்பது ரூபாய் பரிசளித்தார்கள் மொகலாய கவர்னர்கள். இத்தலை வேட்டைக்குத் தப்புவதற்காகச் சீக்கியர்கள் காடுகளில் வசிக்கத் தொடங்கினர். சீக்கியர்கள் கிடைக்காமற் போகவே அந்தச் சமயப் பெண்களின் தலையைக் கொய்து கொண்டு போய் 'இது தாடி முளைக்காத சீக்கியர்' என்று கொடுத்துக் காசு பெற்றனர் கைக்கூலிகள். இந்தப் பெண் கொலையைத் தவிர்க்கும் பொருட்டு மங்கையர்கள் மூக்கில் நத்து அணியத் தொடங்கினர்.

பாவுன்டா ஸாஹிப் குருத்வாரா செல்வதற்கு அம்பாலாவிலிருந்து நஹன் வந்து டேராடூன் சாலையில் முப்பது மைல் தென் கிழக்கே செல்ல வேண்டும். பெரிய வெள்ளை மாளிகை. மாளிகையையும் மிஞ்சுகிறது

கொடி மரத்தின் உயரம். அதன் உச்சியில் மஞ்சள் கொடியில் 'ஓம்' என்ற குர்முகி எழுத்து.

குருத்வாராவின் வாசலில் உயரமான சீக்கியர் உடைவாளுடன் நிற்கிறார். நீண்ட தாடி, வெண்மையான ஜிப்பா, குடிதார் பைஜாமா, தலையில் உயரமான பாகை, அதன் உச்சியில் பளபளக்கும் இரும்பு வளையம். அவர் பணிவாகத்தான் பேசுகிறார். என்றாலும் அது நம்மைப் பயமுறுத்துவதுபோல் உள்ளது. அவருடைய தோற்றம்தான் அதற்குக் காரணம். புகையிலை, சுருட்டு, தீப்பெட்டி எவற்றையும் ஆலயத்துக்குள் எடுத்துச் செல்லக் கூடாது. காலணிகளை நீக்கிவிட்டுத் தலையில் துணி ஏதாவது அணிந்துதான் சீக்கிய ஆலயத்துக்குள் நுழைய வேண்டும். ஆண், பெண் இருபாலருக்கும் இதுதான் நியதி. அமிர்தசரஸ் ஆலயப் பிராகாரத்தினுள் உள்ள குளத்தில் நீராடும் சீக்கியர்கள் கூடப் பாகையை அணிந்துதான் குளிப்பார்கள்.

அடுத்துள்ள சாளரத்தில் ஒன்றேகால் ரூபாய் கொடுத்து ஒரு சீட்டு வாங்கிக்கொள்ள வேண்டும். அடுத்த சாளரத்தில் சீட்டைக் கொடுத்தால் பளபளக்கும் வெண்கலத் தாலத்தில் சூடான ஹலுவா தரப்படுகிறது. இதன் சூடு எந்த நேரத்திலும் பாதுகாக்கப்படுவது ஒரு விசேஷமாகும். இந்தப் பொருளுக்கு 'கடாப்ரசாத்' என்று பெயர். இதன் சூடும் நெய்யும் சிறப்பான அம்சங்கள். தொடர்ந்து நடக்கிறோம். பயத்தைப் பக்தியுடன் கலந்து எழுப்பும் சூழ்நிலை. கால், கை, முகம் கழுவிக் கொள்ளக் குளிர்ந்த நீர்க் குழாய்.

பெரிய அகலமான கூடம். அதன் நடுவில் அலங்கரிக்கப்பட்ட பட்டு ஜரிகை விதானத்தின் கீழ் குரு கிரந்த சா ஹிப் வைக்கப்பட்டுள்ளது. அதற்கு இரு ஊழியர்கள் சாமரம் வீசியவாறு இருக்கிறார்கள். அதன் பக்கத்தில் ஒரு நீண்ட உடைவாள் பளபளக்கிறது. கம்பீரமான இனிய குரலில் கிரந்தி சீக்கிய வேதம் ஓதுகிறார்.

குருமேரீ பூஜா குருகோவிந்த !
குருமேரா பாரப்ரஹ்ம குருபகவந்த !!

(குருவே என் வழிபாட்டுக்குரியவர், குருவே கோவிந்தன், குருவே பரம்பொருள்—குருவே பகவான்)

'எனக்குப் பிறகு இந்தக் குருவாணிதான் கால்ஸா சமயத்தின் குரு' என்று கோவிந்தர் ஆணையிட்டுச் சென்றார். ஆகவே அந்த நூல் உரிய கௌரவத்துடன் பாதுகாக்கப்பட்டு வருகிறது. சீக்கியர்களின் கிரந்த ஸாஹிப்பை எப்போதும் பட்டுத் துணியில் பொதிந்து வைப்பார்கள். ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு எடுத்துச் செல்லும்போது தலைக்கு மேல் உயர்த்திக் கொண்டு போவார்கள். பெரிய அளவு நூலாக இருந்தால் அதைப் பட்டுப் பல்லக்கில் சுமந்து செல்லுவார்கள். கூடவே அதன் பின்னால் பலர் குருவாணியை ஓதியவாறு நடப்பார்கள்.

'கடாப்ரசாத'த்தை அந்த நூலின் முன்பு வைத்து வணங்குகிறோம். அதற்கு மலர் வழிபாடும் உண்டு. பிறகு அதை இடதுபுறம் உள்ள சீக்கியரிடம் கொண்டு செல்கிறோம்.



ஒருவர்: என்ன சார், நவீன முறையில் வாங்கின ரேடியோவா?
மற்றவர்: எப்படிக் கண்டு பிடித்தீர்?
முதல்வர்: இல்லே... விட்டு விட்டுப் பாடுகிறதே, அதனால்தான் கேட்டேன்.

வே ரா.

அதை அவர் பளபளக்கும் கத்தியினால் கீறிப் பிளந்து ஒரு பகுதியைத் தொன்னையிலிட்டு நம்மிடம் தருகிறார். கத்தி சீக்கிய சமயத்தில் பிராதான்யம் வாய்ந்த அருள் கருவி. ஒவ்வொரு நாளும் ந்துக்களின் ஆயிரம் ஜோடி முப்புரியையும் அறுந்த சிகையையும் காண்பதையே நோன்பாகக் கொண்டிருந்த ஔரங்கஜேபின் ஆட்சியில் இந்தக் கிருபான் அவசியமான பொருளாகத்தான் இருந்தது.

குருகோவிந்தர் சயனித்த மஞ்சம், அவர் உபயோகப்படுத்திய ஆயுதங்கள் ஆகியவற்றை ஒரு தனி அறையில் அலங்காரமாக வைத்திருக்கிறார்கள். ஆயுதங்களுக்குத் தினமும் அபிஷேகம், தூப, நைவேத்தியம், உண்டு. இந்த அறையில் பைஜாமா அணிந்தவர்கள் நுழையக் கூடாது.


வெளிப் பிராகாரத்தில் கவி மண்டபம் காணப்படுகிறது. குருகோவிந்தரே ஒரு பெரிய கவிஞர். தவிர பல கவிஞர்களை வரவழைத்து இந்த மண்டபத்தில் கௌரவப்படுத்தினார். ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் கவி சம்மேளனம் நடந்தது. பல மொழிக் கவிஞர்கள் இதில் பங்கு பெற்று ஆயிரக் கணக்கான மக்களை மகிழ்வித்தனர்.

மற்றெல்லா இடங்களிலும் ஓலமிட்டுச் சலசலத்துக் கொண்டு செல்லும் யமுனை நதி இங்கு அமைதியாக ஓடுகிறது. யமுனையின் இரைச்சலில் மக்கள் கவிஞரின் பேருரைகளைச் செவி மடுக்க முடியவில்லை என்ற காரணத்தினால் கோவிந்தரே யமுனையை அமைதியாக இருக்கும்படி பணித்ததாக ஒரு கதை உண்டு. அடுத்து பெரிய படித்துறை. அமிழ்ந்து ஸ்நானம் செய்ய வசதி உள்ளது. படித்துறையின் மேல்புறத்திலிருந்து வெந்நீர் ஊற்று ஒன்று சதா பெருகிய வண்ணம் இருக்கிறது. குளிர்ந்த நீரில் மூழ்கி எழுந்து இதனடியில் சில நிமிடங்கள் உட்கார்ந்து உடலைச் சூடாக்கிக் கொண்டு புறப்படலாம்.

பாவுன்டா ஸாஹிப் நகரத்திலிருந்து புறப்படும் முன்பு யமுனை நதி தீரத்தில் உள்ள ஆலயத்தின் திசையை மறுபடியும் நோக்குகிறோம். நீண்டுயர்ந்த கம்பத்தின் உச்சியிலிருந்து மஞ்சள் பின்னணியில் கறுப்பு எழுத்து மின்னுகிறது. 'ஓம்' என்ற குர்முகி அட்சரம். எந்த மொழியில் இருந்தாலும் இதன் பொருள் என்னவோ ஒன்றே அல்லவா?

துள்ளும் குழந்தைகள் நன்கு வளர்ந்திட

ருசித்துப் பருகட்டும் போர்ன்விடா!





ஓடி விளையாடும் குழந்தைகளுக்கு தினசரி உணவிலிருந்து கிடைக்கும் சக்தி போதுவதில்லை. எவ்வளவு சீக்கிரம் அவர்களுக்கு சக்தி கிடைக்கிறதோ அதே வேகத்தில் அது பள்ளிக்கூடத்திலும், விளையாடும் போதும் செலவழிந்து விடுகிறது. இழக்கும் சக்தியை மீட்டுத் தந்து குழந்தைகளைத் துள்ளும் ஆரோக்கியத்துடன் வளர்க்க, தினமும் ஒரு கப் போர்ன்விடா கொடுங்கள். தம் மக்கள் நலம் கருதும் தாய்மார்கள் அனைவரும் இதை ஆமோதிப்பார்களே!

பால், சர்க்கரை, மால்ட், கோகோ இவையாவும் திட்டமாகக் கலக்கப்பட்டதும், போஷாக்குச் சத்து நிறைந்ததுமான ஒரு இனிய பானம் போர்ன்விடா. ஆம், இது ஒரு காட்பரிஸ் தயாரிப்பு!

சக்திக்கும் வலிமைக்கும்—மற்றும் தீஞ்சுவைக்கும்

காட்பரிஸ் போர்ன்விடா.

Bensons/0391/TAM

கிளிஞ்சல் கோபுரம்



ஜெகசிற்பியன்

அத்தியாயம் இருபது

ஊர் சிரிக்கிறது!

இரவு எட்டரை மணி இருக்கும். டாக்சியில் வந்து இறங்கிய ரட்சகன் வெகு வேகமாக வந்தனுவின் வீட்டினுள் நுழைந்தான்.

வராந்தாவில் சாய்வு நாற்காலியைப் போட்டுச் சாய்ந்திருந்த கோகிலாம்பாள் 'ஹா, ஹூ!' என்று முனகிக் கொண்டிருந்தாள். அவள் அருகில் குனிந்து நின்றிருந்த கணவர் அவளது நெற்றிக்கு ரொம்பவும் கரிசனமாகத் தைலம் தேய்த்துக் கொண்டிருந்தார்.

இந்தக் காட்சியைக் கண்ட ரட்சகன் எவ்விதத் தயக்கமும் காட்டாமல் நேராக அவள் எதிரில் போய் நின்று, ''என்னம்மா, இப்படிப் பண்ணிட்டீங்களே?'' என்று தன்னை மீறிய படபடப்புடன் சற்று உரக்கவே கேட்டான்.

''வாங்க தம்பி! உட்காருங்க!'' என்று சாவதானமாகச் சொல்லிக் கொண்டே நிமிர்ந்து உட்கார்ந்தாள் கோகிலாம்பாள். அவளுடைய கணவர் அங்கிருந்து அமைதியாகத் தம் அறைக்குத் திரும்பிச் சென்றார். சற்றைக்கெல்லாம் 'டைப்' அடிக்கும் சத்தம் கேட்கலாயிற்று.

''உட்காருகிறது இருக்கட்டும்மா!'' என்று சலிப்புடன் சொன்ன ரட்சகன், ''என்ன இப்படி நடுவாந்தரத்திலே கையை உதறிட்டீங்க? ரிஹர்ஸலுக்கு வருவீங்கன்னு நம்பி என் ஆட்களையெல்லாம் வரச் சொல்லிட்டேன். அவங்களும் சாயந்திரம் ஐந்து மணிக்கெல்லாம் வந்து எட்டு மணி வரை காத்துக்கிட்டிருந்தாங்க. ஹீரோயின் இல்லாமல் எப்படி நாடக ஒத்திகை நடத்தறது? காத்துக் காத்துப் பார்த்துட்டு ஆளுக்கொருவராய் என்னைத் திட்ட ஆரம்பிச்சுட்டாங்க. அவங்களைச் சமாதானப்படுத்தி அனுப்பறதுக்குள்ளே போதும் போதும்னு ஆகிப் போச்சு. அதோடு கூட இன்றைக்கு மட்டும் காப்பி—டிபன், டாக்சிச் செலவு எல்லாம் சேர்த்து ஐம்பது ரூபாய்க்கு மேல் என் ஜேபியிலிருந்து எகிறிப் போச்சு. அட்டர் வேஸ்ட்!'' என்று படபடவெனப் பொரிந்து தள்ளி நிறுத்தினான்.

இவ்வளவையும் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த கோகிலாம்பாள், மெல்லச் சிரித்தபடியே, ''என்னை என்ன பண்ணச் சொல்றீங்க தம்பி? நான் என்னமோ இன்றைக்கு ரிஹர்சலுக்கு வரணும்னுதான் இருந்தேன். அவள்தான் வர முடியாதுன்னுட்டாள்'' என்றாள்.

''என்னது? வந்தனு வரமாட்டேன்னு சொல்லிட்டதா? ஏம்மா? எதுக்கு?'' என்று அவசரமாகக் கேட்டான் ரட்சகன்.

''நீங்களே அவளைக் கேட்டுப் பாருங்களேன்!'' என்று ஒருவித அலட்சியத்துடன் சொன்ன கோகிலாம்பாளுக்குத் திடீரென்று என்ன ஆயிற்றோ தெரியவில்லை; முகத்தை வலித்துச் சுளித்து 'ஹா, ஹூ!' என முனகியபடி சாய்வு நாற்காலியில் சாய்ந்தாள். உடனே பக்கத்து அறையில் 'டைப்' அடிக்கும் ஒலி நின்றது. அவளுடைய கணவர் கையில் தைலப் பாட்டிலுடன் அமைதியாக வராந்தாவை நோக்கி வந்தார்.

''தங்கச்சி! எங்கே இருக்கிறே தங்கச்சி?'' என்று கேட்டுக் கொண்டே வெகு சகஜமாக வீட்டினுள் சென்ற



ரட்சகன், வரவேற்பு அறையின் வாசலில் தொங்கிய திரையை விலக்கிக் கொண்டு உள்ளே நுழையக் காலெடுத்த மறுகணம் அப்படியே திடுக்குற்று நின்றான்.

காரணம், அவ்வறையில் கிடந்த 'சோபா—கம்—பெட்'டை அசல் 'பெட்'டாகவே மாற்றிப் போட்டு அதில் ஸ்ரீ ரங்கநாதனது சயன கோலத்தில் முத்துசிவன் ஒருக்களித்துச் சாய்ந்து இடது கை முழங்கையை ஊன்றித் தலையைத் தாங்கிப் பிடித்திருக்க, அவனுக்குப் பக்கத்தில் தரையிலே ஜமக்காளம் விரித்து ஒயிலும் ஒய்யாரமுமாக உட்கார்ந்திருந்த வந்தனா தன் எதிரே 'ரெகார்டு—பிளேயர்' பெட்டியைத் திறந்து வைத்துக் கொண்டு ஓர் இசைத்தட்டை இசைக்க விடுவதில் கவனமாயிருந்தாள்.

இசைத்தட்டில் பாட்டு பிறந்தது! கிளிஃப் ரிச்சர்ட் பாடிய 'எவர் க்ரீன் ட்ரீ' என்னும் அற்புதமான பாடல் அது!

''வாங்க அண்ணாச்சி! ஏன் அங்கேயே நின்னுட்டீங்க?'' என்று இனிய புன்னகையுடன் பின்னால் திரும்பிப் பார்த்துச் சொன்னாள் வந்தனா.

பிரமை பிடித்தவன் போல் திகைத்து நின்ற ரட்சகன் சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''என்ன தங்கச்சி, கவாலி கானா நடக்குதா?'' என்று அமர்க்களமாகச் சிரித்துக் கொண்டே வந்து ஒரு நாற்காலியில் அமர்த்தலாக உட்கார்ந்தான்.

அவன் வந்ததைக்கூடக் கவனிக்காமல் அரைக் கண் மூடிய நிலையிலே பாட்டை வெகு உன்னிப்பாகக் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தான் முத்துசிவன்.

அவனை ஓரக் கண்ணால் பார்த்துக் கோணல் சிரிப்புச் சிரித்துக் கொண்ட ரட்சகன், ''என்ன வந்தனா, இன்னைக்கு ரிஹர்சலே வீட்டிலேயே வைச்சுக்கிட்டே போலிருக்குதே?'' என்றான் குத்தலாக.

வந்தனா ஏதோ சொல்ல வாயெடுத்தாள். பிறகு, 'பாட்டு முடியட்டும், பேசலாம்' என்று எண்ணியோ என்னவோ, புன்முறுவலுடன் மௌனமானாள்.

அந்த அறையில் வேற்றுக் குரல் ஒன்று ஒலித்ததை இப்போதுதான் உணர்ந்து கொண்டவன் போல் மெல்லப் பார்வையைத் திருப்பினான் முத்துசிவன்.

''அடடே! ரட்சகனா?'' என்று கமறலான குரலில் கேட்டுக் கொண்டே தட்டுத் தடுமாற்றத்துடன் எழுந்து உட்கார்ந்தான். ''என்னப்பா, நடிகா! என்ன, ஆளே மாறிப் போய் இருக்கிறே? அடையாளமே தெரியலையே!''



ரட்சகன் எப்போதும் போலத்தான் உடை உடுத்தியிருந்தான். அவனுடைய தலை, முழு அலங்காரங்களும் வழக்கம் போலவே 'இருந்தன. தன்னையே ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு,

''ஆமாம் மிஸ்டர் சிவன்! நான் கொஞ்சம் மாறித்தான் இருக்கிறேன். எப்படி மாறினேன்னு எனக்கே தெரியலை'' என்றான் அவன் கேலியாகக் கண்களைச் சிமிட்டி நகைத்துக் கொண்டே.

ரெகார்டு பிளேயரில் பாட்டு முடிந்தது. அந்த இசைத்தட்டை எடுத்து உள்ளுக்குள் போட்டவாறு, ''என்ன அண்ணாச்சி சொன்னீங்க? ரிஹர்சலுக்கு வரலையென்னு கோபப் படறீங்களா? அதற்கு நான் பொறுப்பாளி இல்லை; இதோ, இந்த உங்க நண்பர்தான்!'' என்று முத்து சிவனைக் கடைக்கண்ணால் பார்த்





சந்திரிகா – க்ருத்திவாசன்

உதகமண்டலம், 'கல்கி' ஏஜண்ட், ஸ்ரீ கே. வி. மீனாக்ஷி சுந்தரம் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி க்ருத்திவாசன் அவர்களுக்கும், பம்பாய் ஸ்ரீ ஆர். ஜானகிராம அய்யர் அவர்கள் குமாரி சௌ. சந்திரிகாவுக்கும் சமீபத்தில் சென்னையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!



ரமணி – சுப்ரமணியன்

திருவண்ணாமலை ரமணாசிரமம், பிரஸிடெண்ட் ஸ்ரீ டி. என். வெங்கட்ராமன் அவர்களின் குமாரர் சிரஞ்சீவி சுப்ரமணியன் B. E. (A. V. B. Ltd. துர்காபூர்) அவர்களுக்கும் சௌ. ரமணிக்கும் சமீபத்தில் சிதம்பரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!

துக் கொண்டே மந்தகாசப் புன்னகை யுடன் சொன்னாள்.

"ஓ... விஷயம் அவ்வளவு தூரத்துக்குப் போயிடுச்சா? அப்ப சரிதான்!" என்று தலையாட்டிக் கொண்ட ரட்சகன், "ஆனாலும் வந்தனா! உன்னை நம்பி என் நாடகத்துக்கு எல்லா ஏற்பாடுகளும் பண்ணிவிட்டேன். ஒரே ஒரு ரிஹர்சலுக்கு வந்தாலும் போதும்; இந்த நாடகத்தைப் போட்டு மெட்ருஸையே ஒரு கலக்குக் கலக்கிப் பிடலாம்" என்றான் கெஞ்சும் குரலில்.

இரண்டு கைகளையும் சோபாவில் ஊன்றித் தோள்களின் இடுக்கில் கழுத்தைப் புதைத்துக் கொண்டு குறும்புப் புன்னகையுடன் அவனைப் பார்த்த முத்துசிவன், "வருத்தப்படாதே, ரட்சகா! வந்தனா உன் நாடகத்திலே நடிக்கணும், அவ்வளவுதானே? இனிமேல் என்னைக் கேள்; நான் கால்ஷீட் தரேன். அவள் வந்து விடுவாள்" என்றான். பேசும்போது அவனுடைய உதடுகள் அவனையும் மீறிக் கொண்டு ஒரு பக்கமாகக் கோணிக் கோணித் துடித்தன.

"ஆகட்டும் மிஸ்டர்!" என்று பவ்யமாகச் சொல்லிவிட்டு வந்தனாவைப் பார்த்துச் சிரித்தான் ரட்சகன்.

சட்டென்று சோபா—செட்டின் மறு பக்கம் சாய்ந்து கீழேயிருந்த ஏதோ ஒரு பானத்தை எடுத்து மளமளவெனப் பருகிவிட்டு நிமிர்ந்த முத்துசிவன், "அது சரி, ரட்சகா! நீ என்னமோ பெரிய ஹீரோன்னு சொல்லிக்கிறயே, உனக்கு நடிக்க மட்டும்தான் தெரியுமா? இல்லே, பாடவும் தெரியுமா?" என்று தலையை ஒரு தினுசாகச் சாய்த்துக் கண்களை இடுக்கிக் கொண்டு கேட்டான்.

"பாட்டா? எனக்குத் தெரியாதே!" என்று நமட்டுச் சிரிப்புடன் சொன்ன ரட்சகன், "உங்களுக்குத் தெரியுமா மிஸ்டர்? தெரிஞ்சாப் பாடுங்களேன், கேட்போம்!" என்றான்.

"என்னையா பாடச் சொல்றே? நான் பாடினால் நீ அழுது விடுவாயே?"

"எனக்கு அழணும் போலத்தான் இருக்குது மிஸ்டர்! சும்மா பாடுங்க!"

"சினிமாப் பாட்டுப் பாடட்டுமா?"

"பின்னே, இப்ப வேறே பாட்டு வராதே!"

"ஏன் வராது?"

"நிலைமை அப்படி..."

"இந்தக் காலத்துச் சினிமாப் பாட்டு எனக்குத் தெரியாது அப்பனே!"

"பரவாயில்லே; பழைய காலத்துப் பாட்டுத்தான் பாடுங்க."

சிவப்பேறிக் கிடந்த கண்களை இமைகளுக்குள் செருகிக் கொண்டு, சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்த முத்துசிவன் சட்டென்று நினைவு படுத்திக் கொண்டவன் போல் கையிலிருந்த சிகரெட்டை வேகமாக உறிஞ்சிப் புகையை ஊதிவிட்டுத் திமிறி நிமிர்ந்து "ஆ!... இந்தப் பாட்டு எதிலே வந்தது தெரியுமா? 'வனமோகினி'ன்னு ஒரு படம். அதிலே தவமணிதேவி பாடறாள். நான் பள்ளிக்கூடம் படிச்சப்ப பார்த்தது..." என்று உற்சாகத்துடன் சொல்லிக் கொண்டே தொண்டையைக் கனைத்து விட்டபடி பாட ஆரம்பித்து விட்டான்: "அலைமோதுதே, அலை மோதுதே! ஏதும் அறியாத என் மனம்...ஹலைமோதுதே!... ஹலைமோதுதே, ஹலைமோதுதே... ஹலைமோதுதே!..."

படபடவெனக் கைதட்டிய ரட்சகன், "பிரமாதம்! பிரமாதம்!" என்று கூவிக் கடகடவெனச் சிரித்தான். வந்தனாவோ சிரிப்பை அடக்க மாட்டாமல் குலுங்கிக் குலுங்கி நகைத்தாள்.

இதற்கு மேலும் அங்கு இருக்கப் பிடிக்காதவன் போல் ஒரு பெருமூச்சுடன் எழுந்த ரட்சகன், "அப்போ, நான் வரட்டுமா தங்கச்சி?" என்றான்.

"ஏம்பிட்டியா ரட்சகா? இரு, நானும் வரேன்!" என்று எழுந்தான் முத்துசிவன்.

"ஆமாம், அண்ணாச்சி! இவரைக் கொண்டு போய் இவர் வீட்டிலே சேர்த்து விடுங்க" என்று தயவாக வேண்டிக் கொண்டாள் வந்தனா.

"ப்பூ! அவன் என்ன என்னைச் சேர்க்கிறது? எனக்குப் போகத்தெரியாதோ?" என்று அலட்சியமாகச் சிரித்த முத்துசிவன், தட்டுத் தடுமாற்றத்துடன் போய்த் தன் கோட்டை எடுத்து மாட்டிக்கொண்டு வெளியே நடந்தான்.

வராந்தாவில் சாய்வு நாற்காலியிலே சாய்ந்திருந்த கோகிலாம்பாளுக்கு அவளுடைய கணவர் மிகவும் கரிசனமாகக் கால் பிடித்து விட்டுக் கொண்டிருந்தார்.

"அடுத்த ரிஹர்சலுக்காவது தங்கச்சியை அனுப்பி வையுங்கம்மா!" என்று சொல்லி விட்டு ரட்சகனும் வெளியே வந்தான்.

தன் ஸ்கூட்டரைக் கவனமாகத் தொட்டுப் பார்த்த முத்துசிவன், "என்னப்பா, ரட்சகா! ஏன் இந்த ஸ்கூட்டருக்கு மூணே சக்கரம் இருக்குது? இன்னொரு சக்கரம் எங்கே போச்சு?" என்று குழறிக் கேட்டான்.

"காக்கா தூக்கிக்கிட்டுப் போயிருக்கும், மிஸ்டர்! நீங்க வாங்க, நாம் நடந்தே போயிடலாம்!" என்றான் ரட்சகன், சிரித்துக் கொண்டே.

''சரி, வா!'' என்று தலையாட்டிக் கொண்ட முத்துசிவன், மூங்கில் 'கேட்' டுக்குச் செல்லும் வழியை விட்டு விட்டு முள் கம்பி வேலிப் பக்கமாக நடக்கலானான்.

''இப்படி வாங்க மிஸ்டர்! இதோ, வழி இருக்குதே!'' என்று அவன் கையைப் பிடித்து இழுத்தான் ரட்சகன்.

''போடா! நீ என்ன சொல்றது, நான் என்ன கேட்கறது! இந்த வழியாகத்தான் போவேன்!'' என்றவாறு ரட்சகனின் பிடியை உதறிவிட்டு விறைப்பாக மேலே நடந்தான் முத்துசிவன்.

நல்ல நிலவு காய்ந்து கொண்டிருந்ததால் அவன் முள் கம்பி வேலியில் புகுந்தே வெளியில் வரட்டும் என்று விட்டு விட்டு, தான் மட்டும் மூங்கில் படலைத் திறந்து தெருவில் போய் நின்று கொண்டான் ரட்சகன்.

புல்லும் பூண்டுமாய் மண்டிக் கிடந்த பகுதியில் வெகு அலட்சியமாக நடந்த முத்துசிவன், வேலியருகில் சென்று சற்றுத் தயங்கி நின்றான். பிறகு இடுப்பளவு உயரத்தில் இருந்த ஒரு முள் கம்பியைத் தன் இரு கைகளாலும் கீழே அழுத்திப் பிடித்தவாறு வலது காலைத் தூக்கி மறு பக்கம் விட்டு ஊன்றிக் கொண்டு குனிந்து உடம்பை ஒடுக்கி வளைந்து நுழைந்தபடி இடது காலை எடுக்க முயன்றவன், ஏனோ கடகடவெனச் சிரித்தான். சிரித்துக் கொண்டே, ''டேய், ரட்சகா! என்னடா இது விளையாட்டு! சே, விடுடா! விடுடான்னா!'' என்றான்.

அவன் இப்படி உளறிச் சிரித்ததைத் தொலைவில் நின்று கேட்டுக் கொண்டிருந்த ரட்சகனுக்கு ஒன்றும் புரியவில்லை. மெல்ல அவனை நோக்கி வந்தான்.

ஒரு காலை இப்பக்கமும், இன்னொரு காலை அப்பக்கமுமாக ஊன்றிக்கொண்டு முள் கம்பியை அழுத்திப் பிடித்தபடி வேலிக்கு நடுவே குனிந்து கொண்டிருந்த முத்துசிவன் மீண்டும், ''ரட்சகா!... சொன்னால் கேட்கமாட்டே? விடுடா என்னை!சே,விளையாடாதேடா'' என்று யாரோ தன்னைக் கிசுகிசு மூட்டுவது போல் கூச்சத்துடன் முதுகை வளைத்து நெளித்துச் சிரித்தான். ''டேய், வேண்டாண்டா! உன்னைக் கும்பிடுறேன், விட்டுடுடா! விடுடான்னா!''

வியப்பும் திகைப்புமாக வேலியருகில் வந்த ரட்சகன் அப்படியும் இப்படியுமாகச் சாய்ந்து எட்டிப் பார்த்தான். வேலிக்கு இப்பால் வர முடியாமல் முத்துசிவன் குனிந்து நின்று அவஸ்தைப்படுவதற்கான காரணம், இப்போதுதான் அவனுக்குப் புரிந்தது. மறுகணம் வெடித்துக் கொண்டு வந்த சிரிப்பை அடக்க மாட்டாமல் 'ஓகோ' என்று சிரித்தான் அவன்.

ஆமாம்; முத்துசிவன் முள் கம்பி வேலியில் புகுந்து வெளிவரக் குனிந்த போது மேலே இருந்த முள் கம்பியில் அவனுடைய கோட்டின் முதுகுப் பகுதி சிக்கிக் கொண்டு விட்டது. ஆனால் அவனோ,ரட்சகன்தான் தன் கோட்டைப் பிடித்து இழுத்துத் தன்னைக் கிசுகிசு மூட்டி விளையாடுகிறான் என்று எண்ணி விட்டான். அதனாலேயே அவன் அப்படியும் இப்படியுமாகக் கூச்சத்துடன் நெளிந்து உளறிக் கொண்டிருக்கிறான்!

''ரட்சகா! என் கோட்டை விடுடா! விளையாடினது போதும், விடுடான்னா!''

ரட்சகனால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை. வயிற்றை ஒரு கையால் அழுத்திப் பிடித்துக் கொண்டு போய், முள் கம்பியில் சிக்கிக் கொண்டிருந்த முத்துசிவனின் கோட்டைப் பக்குவமாய் எடுத்து விட்டான்.


''அப்பாடா!'' என்றவாறு வேலிக்கு இந்தப்பக்கம் வந்து சேர்ந்தான் முத்துசிவன்.

'இவனோடு இனி தெருவில் நடந்து செல்வதே ஆபத்து' என்று எண்ணிய ரட்சகன், ஒரு சைக்கிள் ரிக்ஷாவைக் கைதட்டி வரவழைத்து அதில் முத்துசிவனை ஏற்றி, அவனுடைய வீட்டு விலாசத்தையும் ரிக்ஷாக்காரனிடம் சொல்லி அனுப்பிவிட்டுத் தன் புதிய நாடக அரங்கேற்றத்துக்கான காரியங்களைக் கவனிக்க வேறெங்கோ அவசரமாகப் புறப்பட்டுச் சென்றான்.

தலைப் பிரசவத்துக்கென ஜானகியை வீட்டுக்கு அழைக்கப்போவதில்லை என்று முத்துசிவன் சொன்னதைக் கேட்டு அன்னபூரணியம்மாள் முதலில் பெரிதும் மனக் கிலேசமடைந்தாளாயினும் பிறகு அது பற்றி ஆற அமர யோசித்துப் பார்த்து, 'அவன் சொன்ன அத்தனை காரணங்களும் நியாயமானவையே' என்ற முடிவுக்கு வந்து விட்டாள்.

அதனால் தன் மனக் கவலையையும் அதிருப்தியையும் வெகு சீக்கிரமே துடைத்துக் கொண்டதோடு ஜானகிக்கும் அவளே, 'உன் அண்ணன் உன்னை வீட்டுக்கு அழைத்து வைத்துப் பார்க்கும் நிலைமையில் இல்லை. அவனுக்கு நிறையக் கடன் இருக்கிறது. பின்னொரு சமயம் செய்ய வேண்டியதையெல்லாம் குறை வைக்காமல் செய்து

ஃபாஸ்ஃபோமின்



சக்தியை அதிகரிக்கிறது.



பசியைத் தூண்டுகிறது.

வலிவைப் பெருக்குகிறது.



நோய்களை எதிர்க்கும் சக்தியை கூட்டுகிறது.

சுருங்கச் சொன்னால்—
குடும்பத்தில் அனைவரும் திட
ஆரோக்கியத்துடன் திகழ
உதவுகிறது ஃபாஸ்ஃபோமின்



ஃபாஸ்ஃபோமின்... 'பி' காம்ப்ளெக்ஸ் வைட்டமின்களும்,
பலவகை கிளிஸரோஃபாஸ்பேட்டுகளும் அடங்கிய,
பழரஸ மணம் கமழும் பச்சைநிற டானிக்.

SQUIBB® ® இ. ஆர். ஸ்க்விப் அண்டு ஸன்ஸ் இன்கார்ப்பொரேட்டடின் ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்குகளும். கரம்சந்த் ப்ரேம்சந்த் ப்ரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.

SARABHAI CHEMICALS

Shilpi SC 50 A /67 Tam

கிடுவான். இப்போதைக்குத் தொந்தரவுபடுத்த வேண்டாம். உடம்பை ஜாக்கிரதையாகக் கவனித்துப் பார்த்துக் கொள். கடிதம் எழுதுவதானால் இனி உன் அண்ணன் பெயருக்கே எழுது. அவனை யாரும் மனம் நோக வைக்கக் கூடாது' என்று கடிதம் எழுதினாள்.

அத்துடன் அவன் சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் இருக்க வேண்டுமென பதில் முன்னைவிட அதிகக் கவனம் செலுத்தி அவனுக்கு அநுசரணையாக இருந்து செயல்படவும் தொடங்கினாள்.

மாதங்கள் இரண்டு கடந்தன. தன் பிள்ளை ஆனந்தமாக நாட்களைக் கடத்தி வருவதைப் பார்த்துத் தானும் மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்த அன்னபூரணியம்மாவின் செவிகளில் அநுசிதமான ஏதேதோ தகவல்களெல்லாம் காற்றுவாக்கில் வந்து மோதவே சற்று பிரட்சியடைந்து, நிதானிக்கலானாள்.

ஆமாம்; அவள் கறிகாய் மார்க்கெட்டுக்கோ, மளிகைக் கடைக்கோ, கோவிலுக்கோ போகும்போது அவளுக்கு அறிமுகமானவர்களையும் குடும்ப நண்பர்களாயிருப்பவர்களையும், ஒரிரு தூரத்து உறவினர்களையும் சந்தித்தால் அவர்கள் முன்போல் அவளிடம் அவ்வளவு சுமுகமாகவும், அந்நியோன்யமாகவும், மரியாதை கொடுத்தும் பேசுவதில்லை. குத்தலாக ஏதாவது கேட்பார்கள், இளக்காரமாக எதையாவது சொல்வார்கள். 'ஐயோ, பாவம்' என்கிற மாதிரி அவளைப் பார்த்துச் சிரித்து விட்டுப் போவார்கள்.

''என்ன மாமி! எங்கே போறீங்க? மளிகைக் கடைக்கா?''

''ஆமாம்.''

''முன்னெல்லாம் உங்க பிள்ளையே ஸ்டோர் சாமான்கள் வாங்கி வந்து போட்டு விடுவார் இல்லையா?''

''இப்ப அவனுக்கு ஆபீஸிலே அதிக வேலை.''

''ஐயோ, பாவம்! ... சிக்கிரமா அவருக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைக்கப் பாருங்க மாமி!''

அடுத்த வீட்டு இன்ஜினீயர் மனைவி கோமதி என்பவள் கடைத் தெருவிலே அவளைப் பார்த்தபோது சொன்னவை.

''கோயிலுக்குப் போய் வருகிறீங்களாம்மா?''

''ஆமாங்க.''

''முத்துசிவன் எப்படி இருக்கிறான்?''

''உங்க ஆசீர்வாதத்திலே நல்லாயிருக்கிறான்.''

''இப்ப அவன் சரியா வீட்டைக் கவனிக்கிறானம்மா?''

''என்ன இப்படிக் கேட்கிறீங்க? அவன் கவனிக்காம வேறே....யார்...?''

''நான் அதைச் சொல்லலேம்மா! ம்... வந்து... அவனைத் தவிர வீட்டில் வேறு யாரும் கல்யாணத்துக்கு நிற்கிற பிள்ளை இருக்குதா ?''

''இல்லேங்க. நாலு பிள்ளைகளுக்கும் அவன் நல்லபடியா கல்யாணம் பண்ணி வைச்சுட்டான்.''

''பின்னே ஏன் அவனுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைக்காமல் நாளைக் கடத்தறீங்க?... எவ்வளவு சிக்கிரம் முடியுமோ அவ்வளவு சிக்கிரம் செய்யப் பாருங்கம்மா !''

காலஞ்சென்ற அவளது கணவரின் ஆப்த நண்பராயிருந்த போஸ்ட்மாஸ்டர் கோயிலுக்குப் போய் வருகிற வழியில் அவளைப் பார்த்துக் கூறியது இது.

இப்படி இன்னும் பலரும் இதே ரீதியில் அவளிடம் பேசினர். மற்றும் சிலர் குசலம் விசாரிக்க வருகிறவர்கள் போல் வீடு தேடி வந்து இம்மாதிரி எதையாவது சொல்லிப் போயினர்.

இந்தப் புதிய நிலைமைக்குக் காரணம் புரியாமல் சில நாட்கள் தவித்துக் கொண்டிருந்த அன்னபூரணியம்மாள், பிறகு மெல்ல மெல்ல அதை ஒருவாறு ஊகித்தறியலானாள். தன் அருமை மகனின் சமீப கால நடத்தைகளில் ஏதோ சில அநுசிதங்களை நேரிடையாகப் பார்த்தோ, பிறர் வாயிலாகக் கேள்விப்பட்டோ அதிருப்தியடைந்து வருந்திய அவர்கள் அவ்விவரங்களைத் தன்னிடம் பச்சையாகச் சொல்ல விரும்பாமல் மறைமுகமாக எச்சரிக்கிறார்கள் என்பதை அவள் புரிந்து கொண்டாள். அப்படிச் சொன்னவர்களில் பெரும்பாலோர் தன் பிள்ளையின் பேரில் ஏதேனும் காழ்ப்புக் கொண்டவர்கள் என்றோ, கெட்ட எண்ணம் வைத்தவர்கள் என்றோ அவளால் கனவிலும் கருத முடியாது. காரணம், அவர்களே சில மாதங்களுக்கு முன்வரையில் அவனைப் பற்றி இவளிடம் வானளாவப் புகழ்ந்தும், நெஞ்சு குளிர ஆசீர்வதித்தும், உணர்ச்சிவயப்பட்டு வியந்தும் பேசியவர்கள் !

எனவே, தன் பிள்ளையின் இப்போதைய நடத்தைகள் — இதுகாறும் அவன் பேணிக் காத்து வந்த ஒழுக்க நெறிகளுக்குப் புறம்பாகப் போய்விட்டிருக்கின்றன என்பதோடு — ஊரார் பார்த்து வருந்தவும், வெறுக்கவும், அநுதாபப்படவும், சிரிக்கவும் கூடிய அளவுக்கு அவை வெளிச்சமாகிவிட்டிருக்கின்றன என்பதை இனியும் அவள் தனக்குத் தானேகூட மழுப்பி மறைக்க முடியாமற் போயிற்று. (தொடரும்)

கால்கேட் மூலம், வாய்-நாற்றத்தைத் தடுத்து நாள்முழுதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்!





ஏனெனில்:
ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் க்ரீம் வாய்நாற்றத்தையும் பற்சிதைவை விளைவிக்கும் கிருமிகளையும் 85 சதவிகிதம் வரை அகற்றுகிறது.

கால்கேட் 10 க்கு 7 பேர்களில் வாய்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறதென்றும், உணவு உட்கொண்ட உடனேயே கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால் இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத அளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப்படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன! இந்த நிரூபணத்தைப் பெற்றிருப்பது கால்கேட் மட்டுமே!
அதன் விசேஷமிக்க பெப்பர்மின்ட் சுவையே தனி. கால்கேட் டென்டல்க்ரீம் கொண்டு குழந்தைகள் தவறாது பல் துலக்க விரும்புவதில் வியப்பென்ன!

தூய்மையான இன் மூச்சோடு வெண்மையான பற்களும் பெறவே... மற்றெந்தப் பற்பசையையும்விட உலகிலே அதிக மக்கள் கால்கேட் பற்பசையையே வாங்குகிறார்கள்.



நீங்கள் பற்பொடியை விரும்பினால், இப்பொழுதுள்ள [illegible] கால்கேட் [illegible] [illegible] பல மாதங்களுக்கு வரும்!

DCE 1 TM

திரு எஸ். டி. சீனிவாசன் சிறுகதை எழுத்தாளராகக் 'கல்கி' நேயர்களுக்கு நன்கு அறிமுகமானவர். சென்னை, பி. எஸ். உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி வந்த அவர் சமீபத்தில் காலமாகி விட்டார். அவரது நினைவு அஞ்சலியாக, அவர் கடைசியில் எழுதிய இரு கதைகளில் ஒன்று இவ்விதழில் இடம் பெறுகிறது.

விண்ணில் தெரியுதொரு தோற்றம்

எஸ். டி. சீனிவாசன்

காம்பௌண்டைத் தாண்டியதும் சித்ரா வண்டியின் 'கியரை' மாற்றினாள். பங்களாவுக்கு வெளியே இருந்த ரஸ்தாவில் திரும்பி, கார் திருப்பரங்குன்றத்தை நோக்கி ஓடியது.

''சொக்கா! டாங்கிலே பெட்ரோல் இருக்கா?'' — பின்னால் வந்த திருமங்கலம் பஸ்ஸுக்கு 'சைட்' கொடுத்துவிட்டுக் கேட்டாள் அவள்.

''ரொம்ப தூரம் போகிறதாக இருந்தால் இருக்காது. இருபது மைலுக்குள்ளே இருந்தால் போதும்.'' — பின் ஸீட்டில் உட்கார்ந்திருந்த சொக்கன் பதில் அளித்தான்.

''இரண்டு காலன் போட்டுக் கொள்ளலாம்'' என்று அருகில் இருந்த பெட்ரோல் பங்கில் வண்டியை நிறுத்தினாள்.

சொக்கன் பெட்ரோல் போடக் கீழே இறங்கினான்.

நீண்ட குழாயின் மூலம் பெட்ரோல் காரின் டாங்கிக்குள் விழ ஆரம்பித்தது. பெட்ரோல் விழும் அளவைக் காட்டும் முள் சுழல்வதையே சித்ராவின் கண்கள் பார்த்துக் கொண்டிருந்தன. ஆனால் அவள் மனமோ நிம்மதியை இழந்து தவித்துக் கொண்டிருந்தது. காலை வந்த கடிதம்தான் காரணம் அதற்கு. அதில் எழுதியிருந்தது:

''சித்ராவுக்கு, அநேக ஆசீர்வாதம். ஒரு வாரத்துக்குள் நீ இரண்டு கடிதங்கள் போட்டு விட்டாய். நான் பதில் போடவில்லை என்று எழுதியிருக்கிறாய். உனக்கு நான் என்ன எழுதுவது, எதை எழுதுவது? பத்து ஆண்டுகளுக்கு முன் நாம் இருந்தோமே — கவலையற்று, நம் படிப்பு, வீட்டு வேலை, விளையாட்டு இவைகளோடு மட்டும் — அப்படியே நம் வாழ்க்கை நீடித்து இருக்கக் கூடாதா என்று ஏங்கி ஏங்கி நான் இப்பொழுது மறுகுகிறேன். கல்யாணம், குழந்தை குட்டி, மண வாழ்க்கை எல்லாவற்றின் மேலேயுமே எனக்கு ஒருவித வெறுப்பு விழுந்து விட்டது. உன் அத்திம்பேரைக் குறை கூறுவதாக நினைத்துக்கொள்ளாதே. ஏழைமை தாண்டவமாடும் இடத்தில் எந்தவித இன்பம் இருக்க முடியும்? மாதம் மொத்த வருமானம் நூறு ரூபாய். என் மாமியார் படுத்த படுக்கையாக இருக்கிறார். வைத்தியம், மருந்துச் செலவு மாதம் இருபது ரூபாய். வாடகை இருபது. ஸ்ரீதரன் பள்ளிக்கூடம் போகிறான். அவனுக்குப் படிப்பு, சட்டை, துணி, புத்தகம், நோட்டுச் செலவு லக்ஷ்மிக்கு ஆகும் செலவு. குழந்தை பாபுவுக்கு வயிற்றில் கட்டியாம். அதற்கு வைத்தியச் செலவு. அப்பப்பா! குழந்தை குட்டி, குடும்பம் ஒன்றுமே வேண்டாம் போல் இருக்கிறது. பேசாமல் எங்காவது ஓர் உத்தியோகத்தை ஏற்றுக் கொண்டு தனிக் கட்டையாகவே இருந்திருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது. உன் அத்திம்பேர் படும் வேதனையைப் பார்க்கச் சகிக்கவில்லை. என்னமோ எழுதிக் கொண்டே போய்விட்டேன். என் கஷ்டங்களைச் சொல்லி உன் மனசைப் புண்படுத்தக் கூடாது. நீ சௌக்கியமாக இருக்கிறாயா? அம்மா அப்பா எல்லோரும் சௌக்கியமா? திருச்சிக்கு வந்தால் ஒரு முறை என் வீட்டுக்கு வந்துவிட்டுப் போ.

வனஜா.''

''அம்மா! இரண்டு காலன் போட்டாச்சு.''

சொக்கனின் குரல் சித்ராவின் கவனத்தைச் சூழ்நிலைக்கு இழுத்தது. பணத்தைக் கொடுத்து விட்டுக் காரைக் கிளப்பினாள்.

'வனஜா! அவளா இப்படி எழுதுகிறாள்? சிறு வயதில் அவள் எப்படி இருந்தாள்? அவளுக்கா வாழ்க்கையில் இவ்வளவு வெறுப்பு? கஷ்டங்களுக்கெல்லாம் காரணம் ஏழைமை என்கிறாள். ஆனால் நம் நிலை? கண் நிறைந்த கணவன், பங்களா வாசம், கார் சவாரி, வீட்டில் பூரண சுதந்திரம். இவ்வளவு இருந்தும் நமக்கு நிம்மதி இருக்கிறதா?' — ஒரு பெருமூச்சு விட்டாள் அவள். அவள் மனம் பின் நோக்கிச் சென்றது.

இரண்டு தலைமுறைகளாக அவளுடைய குடும்பத்தார் மதுரையிலேயே வாழ்ந்து



வந்தார்கள். சித்ராவின் தகப்பனார் அதிகப் படிப்பில்லாதவர். ஒரு சைக்கிள் கடையில் குமாஸ்தா. குறைந்த சம்பளம். அவருக்கு ஐந்து பெண்கள். வனஜா மூத்தவள். மீனாக்ஷி இரண்டாமவள், சித்ரா மூன்றாவது. அவளுக்குப் பிறகு இரண்டு பெண்கள்.

சிறு வயது முதலே சித்ரா படிப்பில் மிகச் சூடிகை. அவள் பரம ஏழைக் குடும்பத்தில் பிறந்தவளாயினும் படைப்புக் கடவுள் அவளிடம் அழகை அள்ளிக் கொட்டியிருந்தான். கலாவதி அவளிடம் தன் கருணையைப் பூரணமாகக் காட்டியிருந்தாள்.

அவளுக்குப் பதினாறு வயது நடந்துகொண்டிருந்தது. எஸ். எஸ். எல். ஸி. படித்துக்கொண்டிருந்தாள். பருவத்தின் பூரிப்பும், எழிலின் சோபையும், புத்திசாலித்தனமும் அவளிடம் இழைந்து காணப்பட்டன.

இதற்குள்ளாகவே தன் சக்திக்கு ஏற்றவாறு அவளுடைய தந்தை மீனாக்ஷிக்கும், வனஜாவுக்கும் திருமணத்தை முடித்துவிட்டிருந்தார். மீனாக்ஷி திருப்பரங்குன்றத்திலும், வனஜா திருச்சியிலும் தங்கள் புக்ககங்களுக்குச் சென்று விட்டனர்.

சித்ராவின் படிப்பு முடிந்ததும் அவள் தகப்பனார் அவளுக்கும் திருமணம் செய்து வைக்க முயன்றார். ஆனால் ஓர் இடமும் குதிரவில்லை. ஏற்கனவே மீனாட்சி வனஜா இவர்களுடைய கல்யாணத்தினால் கடன் பட்டிருந்த அவரால் சித்ராவைப் பார்க்க வருபவர் கேட்கும் அளவுக்குச் சீர்வகைகள் செய்ய முடியவில்லை. பணத்தைக் கொண்டு இடத்தை மதிப்பிடும் உலகில் சித்ராவின் அழகுக்கோ, படிப்புக்கோ, சங்கீத ஞானத்துக்கோ மதிப்புக் கொடுத்து அவளைத் தன் உடைமையாக்கிக் கொள்ள யாரும் முன்வரவில்லை.

அன்று சித்திரைத் திருநாள். மதுரையின் எல்லாத் தெருக்களிலும் ஒரே கூட்டம்.

தெற்காவணி மூல வீதி. ஜனக் கூட்டம் நெருக்கிக் கொண்டிருந்தது. வேடிக்கை பார்க்க வந்திருந்த சித்ரா சாலையில் ஓர் ஓரமாக நின்று கொண்டிருந்தாள். அவளுக்குச் சிறிது தூரத்தில் — அவளுக்கு முன்னால்—ஒரு நடுத்தர வயதுள்ள ஸ்திரீ நின்றுகொண்டிருந்தாள். நல்ல பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். கூட்டத்தோடு நகர்ந்து சென்று கொண்டிருந்த அந்த ஸ்திரீ திடுமென்று மயங்கிக் கீழே விழுந்து விட்டாள். சட்டென்று சித்ரா ஓடினாள். கூட்டம் அவளை மிதித்து விடுவதற்கு முன்னால் அவளைத் தூக்கி, ஓரமாக இருந்த ஒரு கடையின் முன்னால் போடப்பட்டிருந்த பெஞ்சின் மேல் கிடத்தினாள். முகத்தில் பரபரப்புடன் தண்ணீரைத் தெளித்தாள். கொஞ்சம் தண்ணீரை அந்த ஸ்திரீயின் வாயில் விட்டாள். கண்ணை விழித்துப் பார்த்த அந்த ஸ்திரீ மிரள மிரள விழித்தாள்.

இதற்குள் அவர்களைச் சுற்றி ஒரு சிறு கூட்டம் சேர்ந்து விட்டது.

''பசுமலை ராஜேந்திரா மில்ஸ் சொந்தக்காரரின் மனைவி...'' என்றார் கூட்டத்தில் ஒருவர்.

''இவர்களுடைய கார்கூட அதோ நிற்குது...'' — மற்றொருவர்.

இதற்குள் அவர்களுடைய கார் டிரைவரே கும்பலை விலக்கிக் கொண்டு அங்கு ஓடி வந்து விட்டான்.

அந்த அம்மாளுக்குச் சிறிது நினைவு வந்தது. டிரைவர் சிறிது தூரத்தில் விட்டுவைத்திருந்த காரை அருகில் கொண்டு வந்தான். சித்ரா மெதுவாக அந்த ஸ்திரீயைப் பிடித்து அதில் ஏற்றினாள். சித்ராவையும் தன்னுடன் ஏறிக்கொள்ளும்படி அவள் சமிக்ஞை செய்யவே, சித்ராவும் வண்டியினுள் ஏறி அவள் பக்கத்தில் உட்கார்ந்து அவளைப் பிடித்துக் கொண்டாள்.

மறுநாள் காலை சித்ராவின் வீட்டுக்கு எதிரே அதே கார் வந்து நின்றது. முதல் நாள் கூட்டத்தில் மயங்கி விழுந்த அந்த அம்மாளும் ஒரு பெரியவரும் கீழே இறங்கி வந்தனர். அவர்களைக் கண்டதும் ஆச்சரியம் அடைந்த சித்ராவின் தகப்பனார் அவர்கள் கூறியதைக் கேட்டு மேலும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தார். தம் மனைவியிடம் சென்று, ''அவர்கள் யார் தெரியுமோல்லியோ, ராஜேந்திரா மில்லின் சொந்தக்காரர்கள். அந்த அம்மாதான் நேற்று தெற்காவணி மூலவீதியில் மயங்கி விழுந்ததாம். அவர்களுக்கு ஒரே மகன். பி. எஸ்ஸி. பாஸ் பண்ணியாச்சாம். நம் சித்ராவை அவர்களுக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சாம். தங்கள் மகனுக்கு அவளைக் கொடுக்க நமக்கு இஷ்டமா என்று கேட்க வந்திருக்கிறார்கள்'' என்றார்.

''அவ்வளவு பெரிய இடத்துக்குத் தகுந்தாற்போல் நம்மால்....'' — மகிழ்ச்சியோடு அவநம்பிக்கையும் சித்ராவின் தாயாரின் குரலில் கலந்திருந்தது.


''நம்மைப் பற்றியும் நம் நிலையைப் பற்றியும் அவர்கள் நன்றாக விசாரித்துத் தெரிந்து கொண்டு விட்டார்களாம். நாம் ஒன்றுமே செய்ய வேண்டியதில்லையாம். எல்லாச் செலவையும் அவர்களே ஏற்றுக் கொள்வதாகவும் கல்யாணத்தைத் தங்கள் வீட்டிலேயே செய்வதாகவும் சொல்லுகிறார்கள். சீக்கிரம் சித்ராவை 'டிரஸ்' பண்ணிக்கொண்டு அவர்களை நமஸ்கரிக்கச் சொல்...'' — மறுபடியும் அவர் வெளியே சென்றார்.

சித்ராவுக்குக் குதூகலம் தாங்க முடியவில்லை. தனக்கா இவ்வளவு பெரிய அதிர்ஷ்டம்? இது முற்றிலும் நிறைவேறுமா? கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை.

முதல் நாள் அந்த அம்மாளைப் படுக்கையில் கிடத்தியவுடன் சுமார் இருபத்தைந்து வயது வாலிபன் ஒருவன் ஓடி வந்து அந்த அம்மாளின் அருகே உட்கார்ந்ததும், தன்னை அவனும், அவனைத் தானும் ஒரு கணம் நோக்கியதும் அவள் நினைவில் பளிச்சிட்டது. இப்பொழுது வந்திருக்கும் பெரியவரின் முக ஜாடையே அந்த வாலிபனின் முகத்திலும் இருந்தது. அந்த வாலிபன்தான் இவர்கள் மகனாக இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள்.

''வாம்மா, சித்ரா! இவர்களுக்கு நமஸ்காரம் பண்ணு.''

சித்ரா அவர்களை நமஸ்கரித்தாள். அவர்கள் கொடுத்த வெற்றிலை, பாக்கு,



உறுதிக்கும் உழைப்பிற்கும்
சங்கர் சிமெண்ட்
இப்பொழுது சுலபமாகக் கிடைக்கிறது.
SANKAR
I C
BRAND
இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்
சென்னை-2
தொழிற்சாலைகள்: சங்கர் நகர், சங்கரி

பறம்; ரவிக்கைத் துண்டு எல்லாம் பெற்றுக்கொண்டாள். அவர்கள் விருப்பப்படி இரண்டு பாட்டுக்கள் பாடினாள்.

முதல் சந்திப்பிலேயே அவர்களைச் சித்ராவின் குடும்பத்தாருக்கும் சித்ராவின் குடும்பத்தாரை அவர்களுக்கும் பிடித்துவிட்டது.

காரில் அவர்களை ஏற்றிவிட்டு வந்த சித்ராவின் தகப்பனார், ''நேற்றே அவர்களுடைய மகன் இவளைப் பார்த்து விட்டானாம். அவனுக்குப் பூரண சம்மதமாம். இன்னும் பத்தே நாட்களில் முகூர்த்தம் வைத்துக் கொள்வதாகச் சொல்லி விட்டுப் போயிருக்கிறார்கள்...''. என்றார்.

சித்ராவுக்குத் தனக்கிருந்த மகிழ்ச்சியில் என்ன செய்வதென்றே தோன்றவில்லை.

திருப்பரங்குன்றம் சந்நிதித் தெருவில் அந்தச் சிறு ஓட்டு வீட்டை நெருங்கியதும் அவள் காரை நிறுத்தினாள். தோல் பையை எடுத்துக் கொண்டு கீழே இறங்கி உள்ளே சென்றாள்.

கார் வந்து நின்ற சத்தம் கேட்டு வெளியே வந்தாள் மீனாட்சி.

''சித்ரா! வா!'' — வரவேற்றாள் அவள்.

சித்ராவும் மீனாட்சியும் உள்ளே சென்று உட்கார்ந்தனர்.

''வனஜா கடுதாசி ஏதாவது போட்டாளா?...'' — மீனாட்சி கேட்டாள்.

சித்ரா பையில் இருந்த கடிதத்தை அவளிடம் எடுத்துக் கொடுத்தாள். அதைப் பார்த்துவிட்டு மீனாட்சி ''எனக்கு ஒருவிதக் கஷ்டம் என்றால், இவளுக்கு வேறு விதம். இங்கேதான் உங்க அத்திம்பேருக்கு ஒருவித அதிகாரமும் கிடையாது. ரெண்டு நாத்தனாரும் மாமியாரும் சேர்ந்துகொண்டு என் கண்ணிலே விரலை விட்டு ஆட்டறா. என் நிலையைப் பார்க்கப் போனால் இந்த வீட்டு வேலைக்காரியே தேவலை. நான் படுகிற அவஸ்தை ஒருத்தருக்குமே தெரியாது. ஏன், உனக்கே கூட இதுவரையில் தெரியாதுன்னு நினைக்கிறேன்.... நல்ல காலம்! அவா யாரும் இப்போ இங்கே இல்லாததனால் இவ்வளவாவது நான் நிம்மதியாப் பேச முடியறது. அத்திம்பேர் நல்லவர். மறைவிலே எனக்காக ரொம்ப அநுதாபப்படறார். ஆனால் எதிரிலே அவா சொல்றபடிதான் நடக்க வேண்டியிருக்கு...'' என்றாள்.

சிறிது நேரத்துக்குப் பின் சித்ரா மீனாட்சியிடம் சொல்லிக் கொண்டு, நிர்மலாவின் வீட்டுக்குக் கிளம்பினாள்.

நிர்மலா, மீனாட்சி, சித்ரா மூன்று பேரும் பாலிய சிநேகிதிகள். நிர்மலாவின் தகப்பனார் நல்ல பணக்காரர். இரண்டு வருஷங்களுக்கு முன் நிர்மலாவுக்குக் கல்யாணம் ஆனபோது, நிர்மலா — சிவராமன் ஜோடியைக் கண்டு ஊரே அதிசயித்தது. சிவராமன் நல்ல உத்தியோகத்தில் சென்னையில் இருந்தான். கல்யாணமானவுடன் நிர்மலா கணவனுடன் குடித்தனம் செய்யப் போய்விட்டாள். இரண்டு வருடங்களாகச் சித்ராவைப் பார்க்கவேயில்லை; சமீபத்தில் அவள் திருப்



''ஹாரன் அடிக்கக் கூடாத இடத்தில் ஹாரன் அடித்து, காரை நிறுத்தக் கூடாத இடத்தில் காரை நிறுத்தி இருக்கிறீர்களே!''

''ஏதேது? நீ கேட்டுக்கொண்டே போவதைப் பார்த்தால் அடுத்தாற்போல் 'லைசென்ஸ் இல்லாமல் ஏன் கார் ஓட்டுகிறாய்?' என்றும் கேட்பாய் போலிருக்கே?''

பரங்குன்றத்துக்கு வந்திருப்பதாகச் சித்ரா கேள்விப்படவேதான் அங்கு போனாள்.

காரில் வந்து இறங்கும் சித்ராவைக் கண்டதும் நிர்மலா உள்ளே இருந்து ஓடி வந்து அவளைக் கட்டிக் கொண்டாள்.

''என்ன நிர்மல்! சௌக்கியந்தானே?'' என்று கேட்டுக் கொண்டே சித்ரா அவளுடன் உள்ளே சென்றாள்.

இருவரும் உள்ளே சென்று ஒரு பெஞ்சியின் மேல் உட்கார்ந்தனர்.

''சௌக்கியத்துக்கு என்ன குறைச்சல்?''

நிர்மலாவின் பேச்சில் ஏதோ தாங்கல் தொனிக்கவே, சித்ராவின் மனம் மறுபடியும் தன் நிலையை எடைபோடத் தொடங்கியது.

சித்ராவைப் பெண் பார்த்துவிட்டுச் சென்ற ஸ்ரீதரனின் வீட்டார் கல்யாணத்துக்குப் பிரமாதமான முறையில் ஏற்பாடு செய்தனர்.

அன்று மாப்பிள்ளை அழைப்பு. ஸ்ரீதரன் கோயிலிலிருந்து கழுத்தில் மாலையுடன் காரில் வந்து கொண்டிருந்தான். வீட்டில் அநேகமாக யாருமே இல்லை.

மாடியறையில் இருந்த சித்ரா வேகமாகக் கீழே இருந்த தன் தாயாரிடம் ஓடிவந்தாள். அவள் கண்கள் அழுதழுது வீங்கி இருந்தன. அவள் தாயார் அவளைக் கண்டு திடுக்கிட்டாள்.

''அம்மா! அம்மா! வஸந்தா சொல்வது நிஜம்தானா?... அவர்... அவர்....'' வார்த்தைகள் சித்ராவின் வாயிலிருந்து வெளிவர மறுத்தன. விம்மியது அவள் உள்ளம். அவள் கைகள் தாயாரின் கரங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தன.

''சித்ரா! எல்லாம் எங்களுக்குத் தெரியும். ஆனால் உன் வாழ்வில் ஒரு குறையும் வராது.''

''அம்மா! தெரிந்துமா இந்த ஏற்பாடு?'' அனல் கக்கின சித்ராவின் கண்கள்.

''நமக்கு வேறு வழியில்லை...'' — மெதுவாக அவள் சித்ராவைத் தன் அருகே இழுத்துக்கொண்டாள்.

''நீ புத்திசாலி. இந்தச் சமயத்தில் கண்ணீர் விடக் கூடாது. நீயும் மாப்பிள்ளையும் நீண்ட ஆயுசோடு இருப்பீர்கள்...'' — மகளைத் தேற்றினாள் தாயார்.

ஆனால் தன் கண்களில் இருந்து வழிந்த கண்ணீரை அவளால் நிறுத்த முடியவில்லை.

அந்த நிமிடமே சித்ரா தன் உள்ளத்தைக் கல்லாக்கிக் கொண்டுவிட்டாள்.

திருமணம் முடிந்தது. சாம்பிய உள்ளத்துடன் கணவன் வீட்டுக்கு வந்தாள் சித்ரா.

மாமியார் மிக நல்லவள்; மாமனார் அவளைவிட நல்லவர். கணவன் தன் அன்பு முழுவதையும் அவள் மீது கொட்டினான். பங்களா வாசம்; கார் சவாரி, நல்ல உணவு; உடை. ஆனால் மன நிறைவு? அது ஒன்று மட்டும் இல்லை.

''என்ன பெரிய யோசனை போலிருக்கு?'' கையில் ஒரு கப் ஓவல்டினுடன் வந்த நிர்மலா கேட்டாள்.

''ஒன்றுமில்லை...'' —சமாளித்துக் கொண்டாள் சித்ரா.

''சித்ரா! வெளியாரெல்லாம் நான் ரொம்பச் சந்தோஷமாக இருப்பதாக நினைக்கிறார்கள். ஆனால் வாஸ்தவத்தில் என் மனவேதனை ஒருத்தருக்கும் தெரியாது...''

''என்ன நிர்மலா! ஏதோ புதிர்போடறே?''

''நல்ல உத்தியோகத்திலே இருந்தார் இவர். அதைக்கூட விட்டுட்டு, என்னையும் இங்கே கொண்டு வந்து தள்ளிவிட்டார். மாசத்துக்கு ஒரு முறை, இரண்டு முறை இங்கே வரார்...''

''உத்தியோகத்தை விட்டுட்டு என்ன பண்ணறதாக உத்தேசம்?''

''இவருக்குத் தூரத்து உறவு ஒரு பெண். சிறு வயதிலேயே விதவையாகி விட்டாள். சினிமாவிலே 'குரல்' கொடுக்கிறாள். என் கல்யாணத்துக்கு முன்பிருந்தே இவருக்கும் அவளுக்கும் ரொம்பச் சிநேகமாம். நான் பட்டணத்திலே இருந்தபோது எப்போது பார்த்தாலும் மாம்பலத்திலே இருக்கிற அவள் வீட்டிலேதான் இவருக்கு வேலை. தன் செலவில் பேரில் இவரை அவள் சினிமாவில் நடிக்கச் சேர்க்கப் போகிறாளாம். அதனாலே வேலையையும் விட்டு விட்டார். நான் இதையெல்லாம் கண்டிக்கிறேன்னு என்னை இங்கே கொண்டு வந்து தள்ளிவிட்டார். அவளும் இவரும், நான் வந்த பிறகு ஒரே வீட்டிலேயே கணவன் — மனைவியாக வசிக்கிறதாகக் கேள்வி.... என் வாழ்வு ஒரு சோகக் கதை. போயேன். எங்க அப்பா அம்மாவுக்குத் தெரிஞ்சா ரொம்ப வருத்தப்படுவாளேன்னு நான் அவாளுக்கு ஒண்ணும் எழுதலே.'' ஒரு பெருமூச்சு விட்டாள் அவள்.

அமைதி காண வந்த இடத்தில் சித்ராவுக்குக் கலக்கம்தான் அதிமாயிற்று.

கார் பகமலையை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. தன் நிலையை வனஜா, மீனாட்சி, நிர்மலா இவர்களுடன் ஒப்பிட்டுப்பார்த்தாள்.

நிர்மலாவின் கணவன் நடத்தை கெட்டவன். மீனாட்சிக்கு நாத்தனார் மாமியாரால் துன்பம். வனஜாவுக்குக் கல்யாணமாகி ஆறு வருஷங்களுக்குள் மூன்று குழந்தைகள். ஏழைமை நிலை;

அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் அவஸ்தைப்பட்டனர். ஆனால் சித்ரா? அவர்கள் எல்லோரையும் விட அவளது நிலையே மேல் என்றது அவள் மனம். 'கார், பங்களா, உணவு, உடை இவை மட்டும் ஒரு பெண்ணுக்கு வாழ்வளித்து விடுமா?' என்று மறுத்தது அவள் உள்ளுணர்வு.

குழம்பியது அவள் உள்ளம்.

கார் அவளுடைய பங்களாவில் வந்து நின்றது. காரை விட்டிறங்கி மாடிப்படிகளில் ஏறித் தன் அறைக்குச் சென்றாள் அவள். வெளியே சென்று வந்த ஆயாசம், மனக் குழப்பத்தால் ஏற்பட்ட சோர்வு இவை காரணமாக அவள் கண்கள் இருண்டன. அப்படியே படுக்கையில் சாய்ந்தாள்.

மறுபடியும் அவள் கண் திறந்தபோது, அவளுடைய கட்டிலைச் சுற்றி அவளுடைய மாமியார், மாமனார், கணவன் எல்லாரும் நின்று கொண்டிருந்தனர். அவர்களுடைய குடும்ப வைத்தியர் — அவளைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டுத் தம் கைப் பெட்டியுடன் வெளியே சென்று கொண்டிருந்தார்.

''இது மூன்றும் மாசம்தான். ஆனாலும் உடம்பு ரொம்பப் பலவீனமாயிருக்கிறது. நான் ஒரு டானிக் எழுதிக் கொடுக்கிறேன். அதைக் கொடுங்கோ'' என்று டாக்டர் சொல்லிவிட்டு வெளியேறினார்.

ஸ்ரீதரனின் தாயாரும் தந்தையும் அவருடன் வெளியே சென்றனர்.

''அவளுக்குப் பிறக்கப் போகும் குழந்தையும் அவளைப் போல்...''—ஸ்ரீதரனின் தாயார் மனவேதனையோடு கேட்டாள்.

''சே! சே! நீங்க ஒண்ணு. இது என்ன ஸ்ரீதரனுக்குப் பிறவியிலேயே இருந்ததா? அல்லது பரம்பரையில் வந்ததா? அவன் காலேஜ் கூடப் படிச்சுப் பாஸ் பண்ணலையா? இடையே பெரியம்மை போட்டியதனால் ஏற்பட்டது. பிறக்கப் போகும் குழந்தைக்கு எவ்விதக் குறையும் இருக்காது. நீங்கள் துளிக்கூடச் சந்தேகப்படவேண்டாம்'' என்று சொல்லிவிட்டு டாக்டர் கீழே இறங்கினார்;

டாக்டரின் வார்த்தைகள் ஒவ்வொன்றையும் விடாமல் கேட்டுக் கொண்டே வந்த சித்ராவின் கண்கள் படபடவென்று அடித்துக் கொண்டன. தன் அருகில் நின்றுகொண்டிருந்த ஸ்ரீதரனின் வலது கையை மெதுவாகப் பிடித்துக் கொண்டாள். அவன் வாய் பேசும் சக்தியை இழந்துவிட்டிருந்த போதிலும் அவன் கண்கள் அவளுடன் ஆயிரமாயிரம் வார்த்தைகள் பேசின.

வாஸ்தவத்திலே தான் மீனாட்சி, வனஜா, நிர்மலா எல்லோரையும் விடப் பலவிதங்களிலும் பாக்கியசாலிதான் என்ற மகிழ்ச்சியை அடைந்தது அவள் உள்ளம்.

பெண்மையின் பூரணத்துவத்தோடு வாழ்வில் நிறைவையும் கண்டுவிட்ட திருப்தியில் அவள் முகம் புதுச் சோபை பெற்று விளங்கியது.



சீல் உடைக்கும் களவைத் தடுக்க தயாரிப்பாளர், பாக்கிங் துறையில் சிறந்த மெட்டல் பாக்ஸ் துணையை நாடுகின்றனர்



இந்தியாவில் பாக்கிங் செய்த பொருட்கள் சுமார் 30% களவாடப் படுகிறது. இதை தடுப்பதில் மெட்டல் பாக்ஸ் முன்னணியில் நிற்கிறது. அதற்காக கையாடல் செய்யமுடியாத புதுப் புது பாக்கிங்குகளும் தயாரித்து வருகிறது. ஆம், களவாடலைத் தடுக்கும் பாக்கிங்குகளும், டப்பாக்களும் மெட்டல் பாக்ஸ் உருவாக்குபவையே. அதற்குத்தேவையான வசதியும், தொழில் நுட்ப அறிவும், நிபுணத்துவமும் மெட்டல் பாக்ஸ் மட்டுமே பெற்றுள்ளது.

மெட்டல் பாக்ஸ் இந்தியாவின் மாபெரும் உலோக, காகித, பிளாஸ்டிக் பாக்கிங்குகள் தயாரிப்பாளர்கள். நாடு முழுவதிலும் விநியோக நிறுவனங்கள் உள்ள மெட்டல் பாக்ஸின் ஆராய்ச்சியும், அநுபவமும் பாக்கிங் தொழிலின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கின்றன. அதன் புதிய பாக்கிங் முறைகளும் புதிய உத்திகளும் தொழில் துறைக்கும் தேசத்திற்கும் லாபகரமானவை. அவை வெளிநாடுகளில் இந்தியப் பொருட்களின் விற்பனைக்குத் துணை புரிகின்றன. எனவே பெரிய சிறிய உற்பத்தியாளர்கள் புதுமைப் பாக்கிங்குகள் தயாரிக்க மெட்டல் பாக்ஸ் துணையை நாடுவதில் வியப்பில்லை.

மெட்டல் பாக்ஸ்

ராணி ஸ்ரீ ஜுக்டா தியானத்தில் மூடியிருந்த இமைகளைத் திறந்து பார்த்தாள். தன்னைத் தவிர தன் அருகில் யாரோ நிற்பது போன்ற உணர்வு அவளுக்கு ஏற்பட்டது. எனினும் திரும்பிப் பாராமல் பூஜையைக் கிரமப்படி முடித்து நமஸ்கரித்து விட்டே எழுந்தாள் ராணி.

இப்போதுதான் அவள் பார்வை அருகில் கரம் கூப்பித் தொழுது நின்றவன் பக்கம் திரும்பியது. அவன் இறைவனின் சந்நிதானத்தில் வணங்குகிறானா, அல்லது ராணிக்கே கூழைக் கும்பிடு போடுகிறானா என்பதைச் சட்டென்று அநுமானிக்க முடியவில்லை. இருவருக்கும் பொதுவாக அவன் பணிவுடன் வளைந்து நெளிந்து கும்பிட்டுக் கொண்டிருந்தான்.

ராணியைக் கும்பிட்டது காரியார்த்தமாக; இறைவனைத் தொழுதால் அச்செயலே ராணியின் மனம் குளிரச் செய்யும் என்பதால் இரட்டிப்பு ஆதாயம்!

ராணி ஸ்ரீ ஜுக்டா ஒரு ஜமீந்தாரிணி. கணவர் காலமான பிறகு ஆண்டவனைப் பூஜிப்பதிலேயே தனது பெரும்பாலான நேரத்தைச் செலவிட்டு வந்தாள். ஜமீன் காரியங்களைக் கவனிக்க நம்பகமான திவான் இருந்தபடியால் அதுபற்றி அவளுக்கு அதிகக் கவலை இருக்கவில்லை. அரண்மனையை ஒட்டினாற் போலிருந்த கோயிலில் முறைப்படி எல்லா நியமங்களையும் கடைப்பிடித்துப் பூஜை செய்வதே அவளுடைய பிரதான அன்றாட அலுவலாக இருந்து வந்தது. கோயிலை விட்டால் அடுத்தாற்போல் அவள் ஆவலுடன் செல்லும் இடம் யானைக் கொட்டில்.

லால் பஹாதூர் என்ற பெயர் கொண்ட யானை, அவளது அன்பைக் குறைவின்றிப் பெற்றிருந்ததால் கொழுத்து வளர்ந்திருந்தது. ஜமீனுக்குச் சொந்தமான காடுகளில் அது உழைத்து நன்றிக் கடன் தீர்க்கும். ஆனால் ஆகார விஷயத்தில் அதற்கு ஒரு குறையும் இல்லாமல் கவனித்துக் கொள்வாள் ராணி.

தினம் காலையில் பூஜை முடிந்ததும் லால் பஹாதூரிடம் சென்று அதன் நெற்றியை வருடிக் கொடுப்பாள். தன் கையாலேயே ஒரு பிடி இலை தழைகளையாவது கொடுத்து உண்ணச் செய்வாள். மகாராணியைப் பார்த்ததுமே அது துதிக்கையை உயர்த்திப் பிளிறி வரவேற்கும். அதற்கு ஆகாராதிகள் எல்லாம் சரியானபடி தரப்படுகின்றனவா என்று கவனித்து விட்டுத் திரும்புவாள் ராணி.

இப்போதும் ராணி ஸ்ரீ ஜுக்டா லால் பஹாதுரைக் காணக் கிளம்ப வேண்டியவள்தான். ஆனால் இது என்ன, மதுரநாத் சௌத்திரி எதற்காக இப்படிக் கூழைக் கும்பிடு போட்டுக் கொண்டு நிற்கிறான்?

''எனக்கு லால் பஹாதுரைக் காணக் கிளம்ப வேண்டும், நேரமாகிறது. சீக்கிரம் வந்த விஷயத்தைச் சொல்'' என்றாள் ஜமீந்தாரிணி.

எப்படி விஷயத்தை ஆரம்பிப்பது என்று புரியாமல் தவித்துக் கொண்டிருந்த சௌத்திரிக்கு ராணியின் இந்த வார்த்தைகள் உபகாரம் செய்தன.

''நானும் லால் பஹாதுரைப் பற்றிப் பேசத்தான் வந்தேன்'' என்று ஆரம்பித்து மேலும் நெளிந்து குழைந்தான் அவன்.

''லால்பஹாதுரைப் பற்றியா? என்ன சொல்ல வேண்டும் அதைப் பற்றி?''–ராணி கண்களில் ஆர்வம் பளிச்சிடக் கேட்டாள்.

தன்னுடைய வியாபாரமெல்லாம் நொடித்துப்போய் ஏகப்பட்ட நஷ்டத்தில் சிக்கிக் கொண்டிருப்பதை விவரித்தான் சௌத்திரி.

ராணி பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். அநுதாப வார்த்தைகளை மொழிந்தாள். பிறகு. ''லால் பஹாதுரைப் பற்றி ஏதோ கூற வந்தாயே?'' என்று நினைவுபடுத்தினாள்.



''அதைத்தான் கூற வருகிறேன், ராணி சாகிபா!'' என்ற சௌத்திரி மீண்டும் தன் கஷ்ட நஷ்டங்களைப் பற்றியே பேச ஆரம்பித்து விட்டான். அவனுக்கு மர வியாபாரம். எதிர்பாராத விதமாக அவன் கிடங்கு தீப்பற்றிக் கொண்டு ஒரே இரவில் சகல

மும் அழிந்து போனதுடன் அவனைக் கடனாளி யாகவும் ஆக்கி விட்டது. சௌத்திரியின் கண்களில் நீர் வடிந்தது; நாத்தழுதழுத்தது அவனுக்கு.

ராணிக்கு அவன் என்ன சொல்ல வரு கிறுன் என்பதே புரியவில்லை. கேள்விக் குறி யோடு நிமிர்ந்து பார்த்தாள்.

''அம்மணி! என்மேல் கருணை காட்டுங்கள்.

''முதல் போட்டு என்னுடன் கூட்டுச் சேர்ந்து வியாபாரம் பண்ண ஒருவர் முன் வந் திருக்கிருர். இழந்ததை யெல்லாம் திரும்பப் பெற முடியும் என்ற நம்பிக்கையும் நெஞ் சுரமும் எனக்கு இருக்கிறது....''

''அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?''

''இரண்டே மாதங்களுக்கு லால்பஹா துரைக் கொடுத்து உதவுங்கள். காடுகளி லிருந்து மரங்களைக் கொணர யானைகளை வாடகைக்கு அமர்த்தக் கூடிய நிலையில் நான் இல்லை. தயவு செய்யுங்கள்.''

''லால் பஹாதுரையா? உங்களுடன் அனுப்பி வைப்பதா? நடக்கவே நடக்காது. வேறு என்ன வேண்டுமானுலும் கேளுங்கள்; தேவையானுல் கொஞ்சம் பண உதவி செய்கி

ஒரு யானையின் மரணம்

வி.எஸ்.ஸுக்டங்கர்

றேன். வட்டி யில்லாமல் சில மாதங்கள் கழித்துத் திருப்பித் தாருங்கள்.''

ராணி சாகிபா மேற்கொண்டு பேசாமல் அங்கிருந்து கிளம்பி விட்டாள். யானைக் கொட்டிலுக்குப் போய் லால் பஹாதுரைத் தட்டிக் கொடுத்தாள். அதுவும் நம்பிக்கை யால் அவள் கரங்களை வருடியது. ராணி யின் உள்ளம் குளிர்ந்து. கண்கள் பனித்தன.

ஆனுல் சௌத்திரி அவளை விடுவதா யில்லை. பெண் மனத்தைத் தன்னுல் கரைக்க முடியாவிட்டாலும் மற்றெரு பெண்ணுல் நிச்சயம் அதைச் சாதிக்க முடியும் என்பது அவனுக்குத் தெரியும். தன் மனைவியை அனுப்பி வைத்தான் அவன்.

வந்ததும் வராததுமாகத் தன் காலில் விழுந்து பாதங்களைக் கண்ணீரால் நனைத்த சௌத்திராணியைப் பார்த்துப் பிரமித்துப் போனுள் ஸ்ரீஜுக்டா. கண்ணீர் வெள்ளம் தங்குதடையின்றிப் பெருகியபோது அவள் மனம் நெகிழ்ந்தாள். யாசிப்பவரை விட அதிகமாகக் கெஞ்சிக் கேட்டபோது லால் பஹாதுரை இரண்டு மாதங்களுக்கு அனுப்பி வைக்கச் சம்மதித்தே விட்டாள்!

மறுநாள் யானையை ஓட்டிப் போகச் சௌத்திரி வந்தபோது திவான் அவனிடம் ஒப்பந்தப் பத்திரத்தில் கையெழுத்து வாங்கி ஞர். ''இதெல்லாம் எதற்கு?'' என்றுள் ராணி ஸ்ரீஜுக்டா. ஆனுல் திவான் எதையும் முறைப்படி செய்து பழக்கப்பட்டவர்.

''லால் பஹாதுரைப் பத்திரமாகப் பாது காத்து வா! அதனிடம் பழகிய பாகன் விடுமுறையில் தன் கிராமத்துக்குச் சென் றிருக்கிறுன். இல்லாவிட்டால் அவனையும் உன்னுடன் அனுப்பி வைப்பேன்'' என்றுள் ராணி.

''யானைப் பாகனுக்கா பஞ்சம்?'' என்றுன் சௌத்திரி.

''பாகர்களுக்குப் பஞ்சமிராது. ஆனுல் அவர்களிடம் பாசமும் இருக்க வேண்டும்'' என்று சொல்லி அனுப்பினுள் ராணி ஸ்ரீஜுக்டா.

நாட்கள் சென்றன. இரண்டு மூன்று நாட்களுக்கு ஒரு தடவை ராணிக்கு லால் பஹாதுர் பற்றிய செய்திகள் வரும். சௌத் திரி அதன் உதவியோடு காட்டில் வேறு இரு யானைகளையும் கைப்பற்றிப் பழக்கிவிட்டான் என்றும், ஏராளமான மரத்தை வெட்டிச் சாய்த்து அடுக்கி யிருக்கிறுன் என்றும் தகவல் கிடைத்தது. விரைவில் அவன் கஷ்ட நஷ்டங்கள் தீர்ந்து விடும் என்றும் நம்பப் பட்டது.

மேலும் நான்கு நாட்கள் கழிந்தன. சௌத்திரி கல்கத்தா சென்றிருக்கிறுன்; அங்கே கொண்டு போய்ச் சேர்த்திருக்கிற மரங்களை மொத்த வியாபாரத்தில் பேரம் பேசி விற்பதற்காகப் போயிருக்கிறுன் என்று சொன்னுர்கள்.

இதற்கு இரண்டு தினங்களுக்குப் பிறகு தான் அந்தத் திடுக்கிட வைக்கும் செய்தி கிடைத்தது! லால்பஹாதுர் இறந்துவிட்டது! காட்டில் தன் கடமைகளைச் செய்துகொண் டிருக்கும்போதே திடீரென்று மரணம் அதனை அணைத்தது!

ராணியால் இதனை நம்பவே முடியவில்லை; நம்பித்தான் தீரவேண்டும் என்ற நிலை ஏற் பட்டபோது அவள் கதறித் தீர்த்தாள்; அழுது புலம்பினுள். அவளுக்கு ஆறுதல் சொல்ல யாரால் முடியும்?

ஜமீனை நிர்வகித்து வந்த திவான் ''தைரிய மாக இருங்கள் ராணி சாகிபா!'' என்று சொல்லிவிட்டு அன்றைக்கே சௌத்திரிமீது வழக்குத் தொடுக்க ஏற்பாடு செய்தார்.

அவன் கையெழுத்திட்டிருந்த ஒப்பந்தத் தின் பிரகாரம் யானை திருப்பித் தரப்படா விட்டாலோ அல்லது அதைச் சரியாகக் கவ னிக்காததன் காரணமாய் அது மரணம் அடைந்தாலோ சௌத்திரி ஜமீனுக்கு ரூபாய் ஐயாயிரம் தரவேண்டும்;

The following particulars regarding the ownership of the 'KALKI', the Tamil weekly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV

1. *Place of Publication :* Madras
2. *Periodicity of its Publication :* Weekly
3. *Name of Printer and Publisher :*
   R. Ananthanarayanan
   Nationality : Indian
   Address : 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-31
4. *Name of Editor :* T. Sadasivam
   Nationality : Indian
   Address : 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-31
5. *Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital.*

Sri T. Sadasivam, 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-31. Srimathi M. S. Subbulakshmi, 20, Dr. Guruswami Mudaliar Road Chetput, Madras-31. Sri R. Ananthanarayanan, 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-31. Sri K. Rajendran, 1, Fifth Street, New Colony, Lake Area, Madras-34. Sri V. Vaidyanathan, 1-A/2, Tank Road, Nungambakkam Madras-34. Sri K. R. Ashmanathan, 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-31. Sri V. Murali, 34/7, Gajapathy Naidu Street, Lakshmipuram, Shenoynagar, Madras-30.

2-3-69 R. Ananthanarayanan,
Publisher

கீழ்க் கோர்ட்டில் ராணி ஸ்ரீஜாக்டாவுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

சௌந்திரி வழக்கைக் கல்கத்தாவில் மேல் கோர்ட்டுக்கு எடுத்துச் சென்றான். திவான் அங்கேயும் போய் வழக்கறிஞர்களை நியமித்து வாதாடச் செய்தார்.

1927ல் நடந்த இவ்வழக்கில் நீதிபதி மல்லிக் கீழ்க் கோர்ட்டின் தீர்ப்பை ரத்து செய்தார். ரூபாய் ஐயாயிரம் தவிர வழக்குச் செலவுகளையும் சௌந்திரி ஜமீனுக்குத் தந்துவிட வேண்டும் என்று தீர்ப்பாயிற்று.

''மகாராணி! வெற்றி வெற்றி!'' என்று கூவிக் கொண்டே திவான் அரண்மனையினுள் நுழைந்தார். ''மகாராணி! லால்பஹாதுரின் மரணத்துக்குப் பழி வாங்கி விட்டோம்! சௌந்திரி மானபங்கப்படுத்தப்பட்டான்!'' சந்தோஷமாக இவ்வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டே மகாராணியை அங்குமிங்கும் தேடினார் திவான்.

ஆனால் அரண்மனையில் அவளை எங்கும் காணோம். திருதிருவென்று விழித்துக்கொண்டிருந்த சில வேலைக்காரிகளை விசாரித்தார். மகாராணி யானைக் கொட்டிலில் இருப்பதாகத் தெரிந்தது. அங்கே ஓடினார் திவான்.

''மகாராணி!'' என்று கூவி அழைத்து விவரத்தைத் தெரியப்படுத்தினார் திவான்.

''சௌந்திரி பெரிய ஆள். ஏமாற்றப் பார்த்தான். என்ன சொன்னான் தெரியுமா அவன் வக்கீல்? யானை இயற்கையாக மரணமடைந்து விட்டதாம்! 'சரியாகக் கவனிக்கப்படாததால் அது மரணமடைந்ததாகச் சொல்ல முடியாது! அதனால் சௌந்திரி பணம் கொடுக்க வேண்டியதில்லை' என்று வாதாடினான்.

''நான் விடுவேனா? நமக்குச் சாதகமாக நாலைந்து சாட்சிகளைக் கொண்டு வந்து நிறுத்தினேன். இவர்கள் எல்லோரும் காட்டில் மரம் அறுப்பவர்கள். லால்பகாதுர் இங்கிருந்து புறப்பட்ட நாளாக உணவருந்தவே இல்லை என்று இவர்கள் சாட்சி சொன்னார்கள். பட்டினி கிடந்த யானையை வேலை வாங்கி வதைத்திருக்கிறார்கள்! இது நிரூபணமானதும் நீதிபதி சற்றும் தயங்காமல் நமக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கி விட்டார்! இதோ பாருங்கள் பணம்!''

ரூபாய் நோட்டுக்களை ராணியின் பக்கம் பெருமிதத்துடன் நீட்டினார் திவான்.

ராணியின் கண்களிலிருந்து பொல பொலவென்று நீர் முத்துக்கள் உதிர்ந்தன.

''திவான்!'' நாத் தழுதழுக்கப் பேசினாள் அவள்: ''நீதிபதி வழங்கிய தீர்ப்பு தப்பு! லால்பஹாதுர் இயற்கை மரணம்தான் அடைந்தது!'' என்றாள்.

திவான் ஒன்றும் புரியாமல் விழித்தார். லால்பஹாதுரைப் பிரிந்த துயரத்தில் ஜமீந்தாரிணிக்கு மூளை பிசகிவிட்டதோ என்றே சந்தேகமாகி விட்டது அவருக்கு.

ஆனால், ராணியோ அமைதியாகத் தொடர்ந்தாள்.

''லால்பஹாதுர் ஏன் உணவருந்தாமல் பட்டினி கிடந்தது தெரியுமா? அன்றாடம் நான் ஊட்ட, என் கரத்திலிருந்து ஒரு பிடி சோறேனும் எடுத்துண்டு மகிழ்ந்த பிறகு தானே லால்பஹாதுர் தன் தேவைக்கு ஏற்பச் சாப்பிட ஆரம்பிக்கும்?

''அந்த முதல் கவளத்தை ஊட்ட நான் இல்லாததால் அது எதையுமே உண்ணவில்லை. பட்டினி கிடந்தது. இது இயற்கைதானே? திவான்? சொல்லுங்கள்!

''திவான்! பட்டினி கிடந்த யானையை வேலை வாங்கித் துன்புறுத்தியது அவர்கள் தவறாக இருக்கலாம். ஆனால் அது பட்டினி கிடக்கக் காரணம் நான்தான். ஆகவே அதைக் கொன்றதும் நானேதான்!''

புலம்பி அழுத ஜமீந்தாரிணிக்கு ஆறுதல் கூறத் திவானுக்கு நா எழவில்லை.

"உனக்குப் பகவத்கீதை தெரியுமா?" என்ற கேள்வியுடன் ஆரம்பித்தார் திரு கோத்தமங்கலம் சுப்பு. "கர்மண்யேவாதி காரஸ்தே...."

"ஹே, அர்ஜுனா!.... ஒரு காரியத்தைச் செய்யத்தான் உனக்குப் பொறுப்பே தவிர அதன் பலனைப் பற்றி நீ...."

"கரெக்ட்! சங்கு இப்படித்தான் தேசியக் கனலை விசிறி விசிறிக் கனிய வைத்தார்! ஆனால் அதன்கிட்டே அப்புறம் குளிர் காய நெருங்கவில்லை. தம் கடமை முடிஞ்சு போச்சுன்னு ஒதுங்கிட்டார்!"


சங்கு சுப்ரமண்யம் சுதந்திரச் சங்கு பத்திரிகை நடத்தினார்.

1932–33ல் காலணா விலையில் வாரத்துக்கு மூன்று முறை வெளியாகி லட்சக் கணக்கில் விற்ற தேசியப் பத்திரிகை! மக்கள் அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெறவும் நாட்டுப் பற்றை வளர்த்துக் கொள்ளவும் அவர் ஆவேசத்தோடு, சுதந்திர வெறியோடு எழுதிக் குவித்தார்.

காந்தி பக்தி என்றால் கதர் பக்தியும் இணைந்த காலம் இல்லையா? மக்களுக்குக் கதர் அபிமானம் தோன்ற வேண்டும் என்ப

சங்கே, நீ ஒலிக்காயோ?





ஸ்ரீ சங்கு சுப்பிரமணியம் 1926ல். கல்லூரி மாணவராக இருந்த சுப்பிரமணியம், "தமிழ் சுயராஜ்யா" தினசரியில் சேர்ந்த சமயம் எடுத்த படம். சேர்ந்த தினமே லஜ்பதி ராய் பிரிவு பற்றித் தலையங்கம் எழுதிப் புகழ் பெற்றார்.

●

1958ல் புதுவையில் பாரதி விழா பாரதிதாசனால் நடத்தப்பட்ட சமயம் சங்கு சுப்பிரமணியம், சகுந்தலா பாரதி, ரா.அ. பத்மநாபன் முதலியோர் கலந்து கொண்டனர். அப்போது, பாரதியாரின் "தராசு" கட்டுரைகளில் வரும் இந்தப் பழங்கால பெஞ்சில், "சங்கப் பலகை"யில் பாரதிதாசனும் மற்றோரும் உட்கார்ந்து எடுத்த படம்.

படத்தில்: சங்கு சுப்பிரமணியம், விஜயா பாரதி, சகுந்தலா பாரதி, பாரதிதாசன்.

படமெடுத்தவர்: ரா. அ. பத்மநாபன்

30



சுதந்திரச்சங்கு

அதிகார - அட்டூழியம்

தற்காக அவ்வப்போது சுதந்திரச் சங்கு இதழ்களில் பின்வருமாறு கட்டம் கட்டி வேண்டுகோள் விடுவார் சங்கு சுப்ரமண்யம்.

> ஒரு ரூபாய்க்கு ஏழுபடி அரிசி; அதாவது 56 ஆழாக்கு; ஏறக்குறைய அறுபது பேர் சாப்பிடலாம்.
>
> ஒரு ரூபாய்க்குக் கதர் வாங்கினால் அறுபது ஏழைகளுக்குச் சோறு போட்ட புண்ணிய முண்டு.
>
> **ஆகவே தீபாவளிக்கு என்ன துணி வாங்குவீர்கள்?**

இதைப் படித்த பிறகுகூடவா கதர் வாங்காமல் இருப்பார்கள்?

பாரதத்துக்குச் சுதந்திரம் கிடைத்தது. ஒதுங்கியிருந்த எத்தனையோ பேர் முன்னாலே வந்து தலைவர் பதவி ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் சுதந்திர தாக வேள்வியை செய்த சங்கு, தம் கடமை முடிந்தது என்று ஒதுங்கி, நாட்டுத் தொண்டின் பாதையிலிருந்து தெய்வத் தொண்டின் பாதைக்குத் திசை மாறினார்! சுப்பிரமணிய சிவா, வ. வே. சு. ஐயர், பாரதி, அரவிந்தர், சிதம்பரம்பிள்ளை கோஷ்டியின் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த இவர், முதிர்ச்சியடைந்த போது திருப்புகழ்மணி, பித்துக்குளி முருகதாஸ், நீடாமங்கலம் கிருஷ்ணமூர்த்தி பாகவதர் கோஷ்டி பள்ளிக்கூடத்தில் புகுந்து விட்டார். அந்த நாட்களில் பாரதி பாடல்களைக் கேட்போர் பிரமிக்கும் அளவுக்கு உணர்ச்சிக் கொந்தளிப்புடன் பாடிப் பாடிப் பழகிய அவர் பிற்காலத்தில் பக்திப் பாடல்களையும், கேட்போர் மனம் பரவசமடைந்து கிளுகிளுக்கும் வகையில் பாடும் பண்பைப் பெற்றார். பக்தி நிலையிலேயே, பஜனையில் ஈடுபட்டிருக்கும் போதே சிவராத்திரி தினத்தன்று அநாயாசமாக முக்தி நிலை அடைந்து விட்டார்!

சங்கு சுப்பிரமணியம் பற்றித் திரு கொத்தமங்கலம் சுப்பு தொடர்ந்து பேசினார்:

"தேசத் தொண்டுக்கு உள்ளம் உறுதியாக இருப்பது போலவே உடலும் உறுதியாக இருக்க வேண்டும் என்ற கொள்கை உடையவர் சங்கு. பாரதியாரையும் வ.வே.சு. ஐயரையும் கலந்த பாணியிலே, நெஞ்சு நிமிர்ந்து மேல் பார்வையாகத்தான் நடப்பார். கவிதை பாடாத நேரத்தில் கர்லாக் கட்டை சுழற்றும் பயிற்சியும் செய்வார். ஒரு சமயம் சங்கு 'ஹனுமான்' பத்திரிகையிலே சேவை செய்து கொண்டிருக்கும்போது திடீரென்று அந்தக் கால பிரபல காமா பயில்வானைக் காரியாலயத்துக்கு வரவழைத்துத் தேநீர் விருந்து கொடுத்தார். எதற்குத் தெரியுமா? அந்தப் பயில்வான் எப்படித் தம் உடலைப் பாதுகாத்து வருகிறார் என்று தெரிந்து கொள்ள.

"சாதாரணமா, உதடு படாமல் சுப்பிரமணியம் என்று தம்மை யாரும் குறிப்பிடுவது அவருக்குத் திருப்தியாக இருக்காது. 'சுப்ரஹ்மணியம்' என்ற அழுத்த 'ஹாஹா' காரத்தில்தான் கம்பீரமாக இருக்கிறது என்று சொல்லுவார். அவர் பக்தி மார்க்கத்தில் திரும்பும் கட்டத்தில்தான் ஜெமினி ஸ்டுடியோ கதை இலாகாவுக்கு வந்து சேர்ந்தார். சக்ரதாரி படப் பிடிப்பு ஆரம்பித்திருந்த சமயம் அது. சங்குவின் பேனாவில் மைக்குப் பதில் பக்தி ரசம் இருந்ததோ என்னவோ, அந்தப் படத்துக்கு அற்புதமாகச் சில வசனங்கள் எழுதினார். திரை உலகம் அவருக்கு ஓர் இடைக்கால நிலைதான். அப்புறம் பஜனை உலகத்துக்கு இடம் மாறி விட்டார்!"

"பத்மநாபன் சார்! வணக்கம். உங்களோடு பல பத்திரிகைகளிலே சேர்ந்து சேவை செய்தவராயிற்றே, சங்கு சுப்பிரமணியம். உங்களுக்கு அவரைப் பற்றி...."

"நீங்க 'சொல்லுவம் வைஷ்ணவன் யாரெனக் கேளீர்' என்கிற பாடலைக் கேட்டிருக்கிறீர்களா?"

"கேட்டிருப்பதாக நினைவில்லை."

"ரொம்ப நாளைக்கு முன்னாலே கிராமபோன் ரிக்கார்டிலே வந்த பாட்டு. மகாத்மா காந்திக்கு ரொம்பப் பிடித்தமான 'வைஷ்ணவ ஜனதோ' பாட்டின் தமிழ் வடிவம். நம்ப சங்கு சுப்ரஹ்மணியம்தான் அதைத் தமிழிலே அமைத்தார்.

"சங்கு சுப்ரஹ்மணியத்துக்குப் பத்திரிகை உலகில் நுழைந்த முதல் நாளே ஒரு பெரிய சோதனை. அப்போ 'சுயராஜ்யா' என்ற தமிழ்த் தினசரி நடந்து கொண்டிருந்தது. கல்லூரியிலிருந்து பத்திரிகைக் காரியாலயத்தில் அன்றுதான் சேர்ந்திருந்தார். சில மணி நேரத்துக்கெல்லாம் லாலா லஜபதி ராயைப் பற்றி ஒரு தலையங்கம் எழுத வேண்டும் என்று சொல்லி விட்டார்கள். அன்று — முதல் நாளில் — சங்கு எழுதிய தலையங்கம் எத்தனை நேர்த்தியாக இருந்தது என்பது பற்றி திரு வி. க. மனம் விட்டுப் பாராட்டிய பிறகுதான் பலர் தெரிந்து கொண்டார்கள். வேகமான நடை! அப்போதெல்லாம் சாதா சுப்ரஹ்மணியம் தான். அப்புறம்தான் சில காலம் சுதந்திரச் சங்கு பத்திரிகை நடத்தி சங்கு சுப்பிரஹ்மண்ய மானார். பிறகு தினமணிக்கு அவர் வந்து சேர்ந்தார்.

"தினமணி காரியாலயம் அப்போ டவுனில் இருந்தது. அன்றைய நிர்வாகிகள் தகராறில் ஒரு நாள் திடீர் என்று ஒரு குழுவினர் பத்திரிகாலயத்தில் புகுந்து உள்ளிருந்தவர்களை வெளியேற்றிக் கதவைப் பூட்டிக் கொண்டு போய்விட்டார்கள். அங்கேயே படுத்திருந்த சங்கு சுப்ரஹ்மணியத்தையும் சில கம்பாசிட்டர்களையும் அந்தக் குழு கவனிக்கவில்லை. அவர்கள் உள்ளே அகப்பட்டுக் கொண்டார்கள்.

"மற்றொரு சாரார், கோர்ட் உத்தரவை வாங்கிக் காரியாலயத்தைத் திறக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள். ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திலிருந்து வரும் தந்திகளை ஒரு கயிற்றால் கட்டி மூன்றாவது

மாடிக்குப் போட்டார்கள்: காரியாலயம் மூன்றாவது மாடியில்தான் இருந்தது. டெலிபிரிண்டர், டெலெக்ஸ் வசதிகள் இல்லாத காலம். தந்திகளை மொழிபெயர்த்து அன்றையப் பத்திரிகையைத் தயார் செய்து விட்டார் சங்கு. மாலையில் கதவைத் திறக்கக் கோர்ட் உத்தரவு வரவும், பத்திரிகை தயாராகி வெளிவரவும் சரியாக இருந்தது. ரொம்பத் தைரியம் நிறைந்த மனிதர்!''

''அவர் திரைப்படத்தில்கூட நடித்தாரல்லவா? அன்றைய திரைப்படங்களில் நன்றாகப் பாடுபவர்களுக்கு மதிப்பு உண்டே!''

''அவர் மற்றவர்கள் பாடலைப் பாடுவதோடு நிற்கவில்லை. அவருக்கு இயற்கையாகவே கவிதை புனையும் சக்தியும் இருந்தது. கம்பன் அவதரித்த தேரழுந்தூரில் பிறந்தவராயிற்றே! ஒரு சமயம் டில்லிக்குப் போயிட்டு வரபோது தாஜ்மகாலைப் பார்க்கப் போனார். சில மணி நேரங்கள் அந்த மண்டபத்தைப் பார்த்துக் கொண்டே இருந்து விட்டு, 'ஷாஜஹான் துயரம்' என்ற தலைப்பில் ஒரு கவிதை எழுதினார். 'இதுவோ விதியோ இறைவன் சதியோ' என்று தொடங்கும் அந்தக் கவிதையைச் சங்கு ரொம்ப உருக்கமாக, ஷாஜஹானாகவே மாறிப்பாடுவார். சம்பத்திலே பத்துப் பதினைந்து நாட்களுக்கு முன்னாலே அந்தப் பாட்டை அவர் மூலமே பாடிக் கேட்க வேண்டுமென்று அவரிடம் போனேன். 'ஹூம்! எனக்கு மறந்து போய்விட்டது. நீ நினைவு வைத்திருக்கிறாய்' என்றார். நான் சில அடிகளை நினைவுபடுத்திய பிறகு அவர் பாடினார். ஆனால் அதில் பழைய ஈடுபாடு இல்லை. பகவன் நாமாவளியில் அவர் ஈடுபாடு திரும்பி விட்டது.''

ஃ ஃ ஃ

''சங்குவைப் பற்றிச் சொல்லணுமா?'' என்று கேட்கும் ஸ்ரீ பி. எஸ். ராமையா, வெற்றிலையைத் துப்பிவிட்டு வேகமாக உள்ளே வருகிறார். ''நானும் அந்தக் காலத்திலே சுதந்திரச் சங்கு படித்தவன். ஆசிரியார் யார் என்று அறிமுகம் தெரியாதபோதே அந்த எழுத்து வேகத்தில் பக்தி கொண்டவன். அப்போதெல்லாம் ஆங்கிலேயர், வெள்ளைக்காரர் என்ற பதத்துக்கே ஒரு மரியாதை. பயபக்தியோடு சொல்ல வேண்டிய வார்த்தைகள். அந்தப் பயத்தைப் போக்கினவரே சங்கு சுப்பிரமணியம்தான். 'சர்ச்சில் என்ற வெள்ளைக்காரன்' என்று துணிந்து 'ன்' போட்டு எழுதுவார். அச்சில் அப்படிப் பார்த்த பிறகு ஜனங்களுக்குத் தன்னாலே அந்தப் பயம் குறைஞ்சு போச்சு!

''மணி மணியாகச் சிறுகதைகள் எழுதுவார். 'வேதாளம் சொன்ன கதை' என்று மணிக்கொடியில் அற்புதமாக எழுதியிருக்கிறார். பாரதியாரோட 'ஊழிக் கூத்தையும்', 'சின்னஞ் சிறு கிளியே' பாட்டையும் சங்கு பாடிக் கேட்க வேண்டும். கேட்கிறவர்களை அப்படியே உலுப்பித் தள்ளி விடுவார்.

''சேவா ஸ்டேஜ் நிறுவனம் 'பாஞ்சாலி சபதம்' நாடகம் தயாரிக்க முற்பட்டபோது நான் சங்குவை சகஸ்ரநாமத்திடம் அழைத்துப் போனேன். நடிகர்களுக்கு முன்னால் சங்கு பாஞ்சாலி சபதத்தைப் பாடிக் காண்பித்தார். அவ்வளவுதான்! நடிகர்களெல்லாம் தாங்கள் ஏற்கவிருந்த பாத்திரத் தன்மையைக் 'கப்' என்று பிடித்துக் கொண்டார்கள்.

''சங்கு காலமாறதுக்கு நாலு நாள் முன்னாலே ஒரு ராத்திரி. வீட்டுக்கு வர நான் 29-பி பஸ்ஸுக்காக ஒரு ஸ்டாண்டில் காத்துக் கொண்டிருந்தேன். பஸ் வந்தது. நான் 'ஹோல்ட் ஆன்' என்று கத்தியும் பஸ் நிற்கவில்லை. ஆனால் அதே நேரத்தில் பஸ் உள்ளேயிருந்து 'ஹோல்ட் ஆன்' என்ற குரல் ஒலித்தது. சில கஜம் தள்ளி பஸ் நின்றது. நான் போய் ஏறிக் கொண்டேன். உள்ளே சங்கு அமர்ந்திருந்தார். நான் வெளியே நிற்பதைக் கவனித்து விட்டு, அதற்காகவே அவரும் கத்தியிருக்கிறார்.

''எனக்கு டிக்கட் கொடுத்துக் கொண்டே கண்டக்டர், 'இவர் கத்தினதிலே நான் பயந்தே போய்விட்டேன்' என்று சங்குவைக் காண்பித்துச் சொன்னார்.

'' 'இவர் இப்படி இரைந்து கத்தியே வெள்ளைக்காரனை இந்தியாவை விட்டு ஓட்டியவராக்கும்' என்றேன் நான் பெருமையுடன்.

''அன்றைக்குச் சங்குவாலே பஸ்ஸைத் தான் 'ஹோல்ட் ஆன்' சொல்ல முடிந்தது. நாலு நாட்கள் கழித்து வந்த காலதேவனை 'ஹோல்ட் ஆன்' சொல்ல முடியவில்லை.''

ராமையாவின் கண்கள் கலங்குகின்றன.

—கோமதிஸ்வாமிநாதன்

''நான் சம்பாதித்தால், வருமான வரி கட்ட வேண்டும்! நான் சேமித்தால், சொத்து வரி கட்ட வேண்டும்! நான் செலவழித்தால் செலவு வரி கட்ட வேண்டும்! நான் இறந்தாலும், மரண வரி கட்ட வேண்டும்! பின் எதற்காக நான் உயிர் வாழ்வது?''


பார்லிமெண்டில் திரு ஆர். ஆர். மொரார்க்கா பேசியது.



ஆதாரம்: 'ஸ்வராஜ்ய' தகவல்: ''கல்யாண்கே''

இறக்குமதி !

மரச் சக்கைத் தொழிற்சாலை ஒன்றை நிறுவ நான் ஏற்பாடு செய்து கொண்டிருந்தபொழுது, அரசாங்க அதிகாரி ஒருவர் என்னிடம் சொன்னார்: "இந்தத் தொழிற்சாலைக்காக நீங்கள் ஸ்வீடன் நாட்டிலிருந்து மூங்கில்கள் இறக்குமதி



செய்வதில்லை என்று உறுதி மொழி தர வேண்டும்."

அந்த இடத்திலேயே அவர் கேட்ட உறுதி மொழியைக் கொடுத்தேன் — ஏனென்றால் ஸ்வீடன் நாட்டில் மருந்துக்குக் கூட மூங்கில் கிடையாது!

அனுபவப்பட்டவர்: ஜி. டி. பிர்லா
ஆதாரம்: ஸ்டேட்ஸ்மன்
தகவல்: 'அ'


எருமையின் வெற்றி



நான்காம் நூற்றாண்டில் ஜாவா நாட்டுக்கும், மலேயா நாட்டுக்கும் இடையே சுமத்திராத் தீவு யாருக்குச் சொந்தம் என்பது பற்றிச் சண்டை. இப்பிரச்னையைப் போரில்லாமல் தீர்க்க இரு நாட்டுத் தளபதிகளும் ஏற்பாடு செய்தனர். இரு நாடுகளும் தத்தம் பிரதிநிதிகளாக இரு எருமைகளைத் தேர்ந்தெடுத்து, அவை இரண்டையும் சண்டையிடச் செய்தன. வெற்றி பெறும் எருமையின் நாட்டுக்கே சுமத்திராத் தீவு சொந்தம் என்று ஏற்பாடு..... எருமைகள் மோதிக் கொண்டன. முடிவில் மலேயா நாட்டு எருமை வெற்றி பெற்றது. சுமத்திராத் தீவு மலேயா நாட்டுக்குச் சொந்தமாயிற்று. இன்றும் சுமத்திராத் தீவின் பெரும் பகுதி 'மினங்காபா' என்றே அழைக்கப்பட்டு வருகிறது. அதன் பொருள் எருமையின் வெற்றி என்பதாகும். - தகவல்: வி. டி. கௌதமன்

ஆதாரம்: பொது அறிவுப் புதையல்

என்ன வேகம் !



அமெரிக்காவில் விட்டேக்கர்ஸ் என்னும் சிற்றூர் வழியாகச் செல்லும் கார்கள் அறுபது எழுபது மைல் வேகத்தில் போய், சிறுவர்களையும் முதியவர்களையும் விபத்துக்குள்ளாக்கிக் கொண்டிருந்தன. இதைத் தடுக்க ஊர் மக்கள் ஓர் உபாயம் செய்தார்கள். ஊர் எல்லையில் ஒரு பெரிய பலகையில் கண்ணைக் கவரும் வண்ணம், "நீங்கள் முப்பது மைல் வேகத்தில் சென்றால், எங்கள் ஊரைத் தாண்டிச் செல்லச் சரியாக ஒரு நிமிஷம் பிடிக்கும்; வேண்டுமானால் சோதித்துப் பாருங்கள்!" என்று எழுதி வைத்திருந்தார்கள்.

அந்தப் பலகையைப் பார்த்ததும் எல்லாக் காரோட்டிகளும் தங்களை அறியாமலேயே காரை முப்பது மைல் வேகத்தில் செலுத்தி, ஊரை ஒரு நிமிஷத்தில் கடக்க முடியுமா என்று சோதித்துப் பார்த்தார்கள். விபத்துக்கள் குறைந்தன! - ஆதாரம்: பேஜன்ட் - தகவல்: 'மலிக்'

ஒருவர்: என்ன சார், இது! ஒரே சோகமா யிருக்கிறீர்களே!

மற்றவர்: உங்களைப் பார்த்தவுடன் அன்றொரு நாள் நீங்கள் சொன்ன ஜோக் ஞாபகம் வந்து விட்டது!

- வேக





கலைஞர் ஒருவரை நிருபர் பேட்டி கண்டார்.

"நீங்கள் கலைக்காகப் பாடுபடுவதாகக் கூறி இவ்வளவு சொத்து சேர்த்து விட்டீர்களே!" என்றார்.

"அதுவும் ஒரு கலைதானே!" என்று பதில் கிடைத்தது. - டி. எஸ். சௌந்தரராஜன்.



ராஜாவின் பார்வை

ஜி.கே.பொன்னம்மாள்

அந்தச் சிறு வீட்டுக்குப் பின்னால் முற்றத்தில் 'பெட்ரோமாக்ஸ்' வெளிச்சத்தில் 'இந்திராணி' முகத்தில் அரிதாரத்தைக் குழைத்துப் பூசிக் கொண்டிருந்தாள். கைப் பழக்கத்தினால் ஒப்பனையில் முனைந்திருந்தாலும் மனம் ஒரு நிலையில் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தது. இடை இடையே அவள் அழகிய கண்கள் வீட்டு முன்பக்கத்தை நோக்கித் தாவிக் கொண்டிருந்தன.

''என்ன தங்கச்சி! இன்று ஒப்பனைக்கு இத்தனை நாழி ஆவுது? சீக்கிரம் ஆகட்டும். சரியாகப் பத்து மணிக்கு 'அம்மன்' ஊர்வலம் கிளம்பியாகணுமாம்; தர்மகர்த்தா சொல்றாரு. நீ இப்படி ஓய்ந்து கிடப்பதைப் பார்த்தால் பத்து மணிக்குக்கூடக் கிளம்ப முடியாது போலிருக்கே. இதோ, பக்கத்துக் கடையிலேயிருந்து. டீயும் பன்னும் வாங்கி வந்திருக்கிறேன். சாப்பிடு. சூடு ஆறிவிடும்'' என்றார் 'புரவி' ஆட்டத்துக்கு நையாண்டி மேளம் வாசிக்கும் செல்லமுத்து.

இந்திராணி நாலாபக்கமும் பார்த்துவிட்டு, ''இவரு பாதி ஒப்பனையிலே எங்கே போனாரு அண்ணே! இதோ வர்றேன்னு என்று கிளம்பினாரே! எனக்கென்னமோ பயமாயிருக்கு. எப்பவும் இப்படி ஆட்டத்துக்கு முன்னே கண்மண் தெரியாமே குடிச்சிட்டு வந்திடறாரு. போனவாட்டி முனியாண்டி கோயில் திருவிழாவிலே என்னாச்சு? குடிமயக்கத்திலே குதிரையிலேயிருந்து கீழே விழுந்துட்டாரு. ஆட்டம் பாதியிலே நின்னு போச்சு. நல்ல வேளை! அந்தக் கோயில் தர்மகர்த்தா பேசாமே வுட்டாரு. இந்த இடத்திலே அதெல்லாம் நடக்காது. இந்தத் தர்மகர்த்தாவின் மீசையும், அதட்டலும் பார்க்கவே பயமாயிருக்கு. இவரு போன வேகத்தைப் பார்த்தால் வகையா தண்ணி போட்டுட்டுத்தான் வருவாரு போலிருக்கு. அந்த வான வேடிக்கைக்காரரு அந்தோணி எப்பவுமே இவரைக் கூட்டிக்கிட்டுப் போய்ச் சாராயம் வாங்கிக் குடுத்திடறாரு. இவருக்குத்தான் புத்தி கெட்டுக் கிடக்குதே!'' என்றாள். பேசிக்கொண்டே போன இந்திராணியை இடைமறித்து, ''அட, நீ சும்மா கவலைப் படாதே, தங்கச்சி! அண்ணன் இப்போ

வந்திடும்: யாராவது பக்கத்து ஊரிலேந்து 'புரவியாட்டம்' ஏற்பாடு பண்ண வந்திருப்பாங்க. அவுங்களோடேதான் அண்ணன் பேசிக்கிட்டிருப்பாரு'' என்று சமாதானம் சொன்னான் செல்லமுத்து.

வீட்டுக்கு வெளியே ஒரே கும்பலும் ஓசையுமாக இருந்தது. கோயில் திருவிழாவுக்காக வந்து குவிந்திருந்த ஜனங்கள், அங்குமிங்குமாக நின்று பேசிக் கொண்டும், உல்லாசமாகத் திருவிழாவின் மகிழ்ச்சியை அனுபவித்துக் கொண்டும் இருந்தார்கள். கடலே, மிட்டாய், தேநீர், பானகம், கலர் கலராகக் குளிர் பானம், முறுக்கு போன்றவை மண்ணெண்ணெய் விளக்கு வெளிச்சத்தில் வியாபாரமாகிக் கொண்டிருந்தன. அந்த ஊருக்கே சிகரமாக விளங்கும் அங்காளம்மன் கோயிலில்தான் திருவிழா நடந்து கொண்டிருந்தது. வெளி ஊரிலிருந்து நாதகர செட்டும், பிரபல புரவி ஆட்டக்காரர் நாச்சியப்பன்—இந்திராணி ஜோடியின் புரவியாட்டமும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

நாச்சியப்பனின் புரவியாட்டம் அந்த வட்டாரத்திலே மிகப் பிரபலமாக இருந்தது.



அவனுக்கு ஜோடியாக இந்திராணியும் சுழன்று சுழன்று ஆடுவாள். இவர்கள் ஆட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் வாத்தியக்காரர்கள் திணறுவார்களே தவிர ஒரு களைப்போ சோர்வோ ஆட்டக்காரர்களுக்கு ஏற்படாது. இந்திராணி நல்ல அழகி. மூக்கும் முழியுமாகப் பச்சைக் கிளி போல் இருப்பாள். ராணி உடையில் அவளைப் பார்த்தால் இளவட்டங்கள் சற்று மயங்கித் திணறத்தான் செய்வார்கள். அவள் புரவி மேல் ஆடிக்கொண்டே கையில் வைத்திருக்கும் கைக் குட்டையால் கிளி, பூனை, பூச்செண்டு போன்றவைகளைச் செய்து பார்ப்பவர்களைப் பிரமிக்கச் செய்வாள். கையிலிருக்கும் கைக்குட்டையை உதறிக் கொண்டே குதிரை ஒரு சுற்று வருவதற்குள் அவள் கையில் அழகிய கிளி இருக்கும். இன்னொரு சுற்றுக்குள் கைக்குட்டை பூச்செண்டாக மாறும்; இப்படி அதிசயிக்கத்தக்க விதம் எத்தனையோ வேடிக்கைகள் செய்வாள். நாச்சியப்பனும் கையில் ஓர் எலுமிச்சம் பழத்தை வைத்துக் கொண்டு அம்மானை ஆடியவாறே குதிரை மேல் சுற்றிச் சுற்றி வருவான். அப்படித் தொழிலில் ஜோடியானவர்கள் வாழ்க்கையிலும் கணவன் மனைவியாக இணைந்து விட்டிருந்தார்கள். நாச்சியப்பன் கோஷ்டி புரவி ஆட்டம் என்றால் கூட்டத்துக்குக் கேட்கவே வேண்டாம்.

அந்தத் தொழிலைக் கண்ணியமாகவும், கௌரவமாகவும் நடத்திக் கொண்டிருந்தாள் இந்திராணி. ''புரவி ஆட்டம் என்பது வெறும் வேடிக்கைக்காகவோ — வயிற்றுப் பிழைப்புக்காகவோ ஆடும் ஆட்டம் அல்ல. அது கடவுளுக்குச் செலுத்தும் காணிக்கை. அம்மன் ஊர்வலத்துக்குமுன் ஆடிக் கொண்டு போகும் அந்தச் சமயத்தில் எல்லாம் பணத்தையும், புகழையும் நினைத்துக் கொண்டிராமல், அந்த மகமாயியை நினைத்துக் கொண்டுதான் ஆட வேண்டும்'' என்பாள் இந்திராணி. பக்கமேளக்காரர்களுக்கும் தாராளமாகப் பணத்தைக் கொடுத்து அவர்களை அன்புடன் நடத்துவாள். எந்த ஊருக்குப் போனாலும் அவர்கள் சாப்பாட்டு விஷயத்தை முக்கியமாகக் கவனித்துக் கொள்ளுவாள்.

ஆட்டத்துக்குப் போதிய வெளிச்சமில்லாமல், அதாவது இரண்டு மூன்று காஸ் லைட்டுக்களை வைத்துக் கொண்டு ஆட ஒப்புக் கொள்ள மாட்டாள். குறைந்தது எட்டு விளக்குகளாவது இருக்க வேண்டும். அதேபோல் ஆடும் போது அணியும் தங்கள் உடைகளையும், குதிரையின் அணிகளையும் அடிக்கடி மாற்றிக் கொண்டே இருப்பாள். புரவியாட்டம் நடந்து கொண்டிருக்கும்போது செல்லமுத்துவின் மேளத்தில் ஒரு சோர்வு தெரிந்தால் ஒரு சுற்றுச் சுற்றி அவன் பக்கமாக வந்து, ''என்ன அண்ணே! சோர்ந்துட்டீங்க. ஒரு டீ சாப்பிடுங்க'' என்று ஊக்குவிப்பாள். காஸ் லைட்டைத் தூக்கும் பெண்களில் யாராவது சற்றுக் கண்ணயர்ந்தால் வேண்டுமென்றே அவள் பக்கம் போய்க் குதிரை மோவாயால் அவள்மேல் இடித்து, ''என்னம்மே, கண்ணு சாயுதா ? இந்தா, வெற்றிலைச் சுருள் போட்டுக்க'' என்று வெற்றிலையைக் கொடுத்து ஏதாவது வேடிக்கை பேசி அவர்களைச் சிரிக்க வைப்பாள். அப்படி இந்திராணி இருக்கும் இடத்தில் சிரிப்பும் வேடிக்கைப் பேச்சும் இருந்து கொண்டே இருக்கும்.

நாச்சியப்பனுக்குத் தொழிலில் கெட்டிக்காரத்தனமும் உருவ அழகும் இருந்தன. அதோடு இந்திராணிக்குப் பிடிக்காத குடிப் பழக்கமும் இருந்தது. துணிச்சலாக ஆட்டத்தின்போதும் அவன் குடிப்பதை அவள் அறவே வெறுத்தாள். இதற்காக அவனுடன் சண்டைகூடப் போடுவாள்.

அவர்களுக்குப் போட்டியாகக் கிளம்பியிருந்த விநாயகமோ சரியான ஜோடியில்லாமல் தவித்துக் கொண்டிருந்தான். ஒவ்வொரு முறை இந்திராணியைப் பார்க்கும் போதும் அவன் பெருமூச்செறிவான், இந்திராணியைப்போல் தனக்கு ஒரு ஜோடி கிடைக்காதா என்று?

"ஸ்...ஸ்...ஸ்..." என்ற ஓசையுடன் காஸ் லைட்டு எரிந்து கொண்டிருந்தது. இந்திராணி ஒப்பனையை முடித்துக் கொண்டாள். மணி சரியாகப் பத்து. இதுவரையிலும் வெளியே போன நாச்சியப்பன் திரும்பவில்லை. இந்திராணிக்கு மனம் 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது. தட தடவென்று கோயில் நிர்வாகிகளும் தர்மகர்த்தாவும் உள்ளே வந்தார்கள். "என்ன தயாராயிட்டீங்களா? கிளம்பலாமில்லே? வாங்க, சீக்கிரம்!" என்று துரிதப்படுத்தினார்கள்.

இந்திராணி வெளிப்படையாகக் குழப்பத்தைக் காட்டிக் கொள்ளாமல், "சரிங்க. இதோ பத்து நிமிஷத்திலே வந்துடறோமுங்க. நீங்க நாடகத்தை ஆரம்பிக்கச் சொல்லுங்க" என்றாள். மீசையை முறுக்கியபடி தர்மகர்த்தா வெளியேறினார்.

"அண்ணே, செல்லமுத்தண்ணே! இப்ப என்ன செய்யலாம்? இவரு கண்டிப்பா குடிச்சிட்டு எங்கேயாவது விழுந்து கிடப்பாரு. எனக்கு அப்பவே தெரியும், இப்படித்தான் ஆகுமென்று. இதை வெளியே சொல்லவும் முடியாது; ஆட்டத்தை ஆரம்பிக்கணுமே?" என்றாள் இந்திராணி கவலையுடன்.

செல்லமுத்துவுக்கும் ஒன்றும் தோன்றவில்லை. சற்று யோசித்துவிட்டுக் குழப்பத்துடன் நெற்றியைத் தடவிக் கொண்டான். வெளியே நாதகர இசை கிளம்பிவிட்டது. மேளக்கார ரங்கனும் வைக்கோலைப் போட்டுத் தீ மூட்டி, அதிலே மேளத்தைச் சூடு பண்ணி முழக்க ஆரம்பித்து விட்டான். 'ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்' என்று பூவாணம் வானத்தை நோக்கிச் சீறியது. "ஹோ...ஓ...." என்று பல்லக்குத் தூக்கும் ஆட்கள் பல்லக்கைத் தூக்கி விட்டார்கள். கிராமாதவ முடிந்து ஊர்வலம் கிளம்ப வேண்டியதுதான். செல்லமுத்து பதற்றத்துடன், "இனி யோசிக்க நேரமில்லே தங்கச்சி. நம்ப விநாயகம்கூட ஆட்டம் பார்க்க வந்திருக்குது. இப்போ ஒரே நொடியிலே அவனைத் தயார் பண்ணிடறேன். நாச்சியப்ப அண்ணன் உடையிலே அதே அலங்காரத்திலே குதிரை மேலே ஏறினால் அத்தனை சீக்கிரம் இவனை யாரும் அடையாளம் கண்டு கொள்ள மாட்டாங்க. எல்லாரும் நாச்சியப்பன் என்றுதான் நினைச்சுக்குவாங்க. ஆட்டத்தை ஆரம்பிச்சுடலாம். பிறகு அண்ணன் வந்ததும் மீதி ஆட்டத்தில் வேணும்னு கலந்துக்கட்டும். இதைத் தவிர வேறு எந்த வழியும் எனக்குத் தோணலே. முன் பணம் வேறு வாங்கி யிருக்கிறோம். நீ ஒண்ணும் யோசிக்காதே. நான் இப்பவே விநாயகத்தைக் கூட்டியாறேன்" என்றான்.

"அந்த விநாயகம் இசுர்ன்னு வேஷம் போட ஒத்துக்குவாரா?" என்ற சந்தேகத்தை வெளியிட்டாள் இந்திராணி.

"அந்தப் பயல் உன்னோட ஆடக் காத்துக் கிட்டிருக்கான்" என்று பேசிக் கொண்டே வெளியே நடந்தான் செல்லமுத்து.

இந்திராணிக்கு இந்த ஏற்பாடு பிடிக்கவில்லை. இருந்தாலும் உடனே ஆட்டத்தை ஆரம்பிக்காவிட்டால் அது தொழிலைப் பாதிக்கும். பிறகு வேறு எந்த ஊரிலும் ஆட முடியாது. 'குடிகார நாச்சியப்பனா? அவன் புரவியாட்டம் வேணுமப்பா' என்று சொல்லும் வகையில் வந்துவிடும் என்றெல்லாம் நினைந்து விநாயகத்துடன் ஆட இசைந்தாள். இருந்தாலும் உள்ளத்தில் ஒரு குற்ற உணர்ச்சி எழுந்து கொண்டேயிருந்தது.


வாயெல்லாம் பல்லாக விநாயகம் வந்து ஐந்தே நிமிஷங்களில் அரிதாரத்தைப் பூசிக் கொண்டு ஒப்பனையை முடித்துக் கொண்டான். இடை இடையே கடைக்கண்ணால் இந்திராணியை நோட்டமிட்டான். அவன் எத்தனையோ நாட்களாக இந்திராணியுடன் ஆடுவதற்குக் கனவு கண்டுகொண்டிருந்தான். இப்பொழுது அந்தக் கனவு பலித்துவிட்ட சந்தோஷம் அவன் முகத்தில் தெரிந்தது. உள்ளத்தில் கவலையுடனும் உதட்டில் புன்னகையுடனும் குதிரை மேல் ஏறிக் கூட்டத்துக்கு நடுவே வந்தாள் இந்திராணி. பின்னால் கம்பீரமாக முகத்தில் மகிழ்ச்சி பொங்க விநாயகமும் குதிரையின் மேல் வந்தான்.

"தங்கச்சி! மனசிலே ஒண்ணும் நினைச்சிக்காதே. நாச்சியப்ப அண்ணனைத் தேடிக்கிட்டு வர நம்ப முனியனை அனுப்பியிருக்கிறேன். நீ ஒண்ணும் கண்டுக்காதே. எப்பவும் போல ஆடு" என்று நையாண்டி மேளத்தை முழக்கினான் செல்லமுத்து; கூட்டத்தினரிடையே நிசப்தம் நிலவியது.

இரவு மணி பன்னிரண்டை நெருங்கிக் கொண்டிருந்தது. ஆட்டம் நடந்து கொண்டிருந்தது. அன்று விநாயகம் தனக்குத் தெரிந்த வித்தையெல்லாம் செய்து காட்டிக் கும்பலிலிருந்து இரண்டு முறை கரகோஷம் கூடப் பெற்றுவிட்டான். திடீரென்று கூட்டத்திடையே சலசலப்பு ஏற்பட்டது. "யாரடா, அவன்? குதிரையிலிருந்து கீழே இறங்கு. இல்லாட்டி உன்னை வெட்டிப் போட்டுடுவேன்" என்று சவால் விட்டுக் கொண்டே விநாயகத்தின் மீது தாவினான் நாச்சியப்பன். எதிர்பாராமல் தாக்குதல் ஏற்பட்டதனால் விநாயகம் நிலை தவறிக் குதிரையிலிருந்து கீழே விழுந்தான்.

"எவன்டா அவன், என் குதிரை மேல் ஏறி ஆடுகிறவன்?" என்று விநாயகத்தின் முகத்திலும், மூக்கிலுமாக மாறி மாறிக் குத்து விட்டுக் கொண்டிருந்தான் நாச்சியப்பன். அவன் குடிமயக்கத்திலிருக்கிறான் என்பதைக் கண்களும், தள்ளாடிய நடையும் காட்டிக் கொண்டிருந்தன. கோயில் காரியஸ்தர்களும் தர்மகர்த்தாவும் இடையே புகுந்து நாச்சியப்பனை இழுத்துக் கொண்டு போனார்கள். மூக்கிலிருந்து ரத்தம் வழிய ஜரிகைத் தலைப்பாகை தரையில் புரள விழுந்து கிடக்கும் விநாயகத்தைச் சிலர் நெருங்கித் தூக்கி எழுப்பினார்கள். இந்திராணிக்கு இந்தக் கலாட்டாவைப் பார்த்து மயக்கம் வரும்போலிருந்தது. விநாயகத்தின் பக்கம் பரிவு கொண்ட





டிவிஎஸ்
விநியோகிக்கும் உறுப்புகள்
நம்பகமானவை
ஆராய்ச்சி செய்யப்பெற்ற உறுப்புகளை உபயோகித்து செலவைக் குறையுங்கள்
Commercial Wheels
Automobile Electrical Equipment
Hydraulic Brake System
Compressors and Service
Engine Mountings and Bushing Kits
Clutch Housings, Brake Drums and King pins
Hydraulic Brake Parts
Standard
Battery
MICO
Fuel Injection Parts
KAP
MOLON
Timing Chains
Tie Rod Ends
Horns
Springs and Leaves
BANCO-ROYAL
Gaskets and Radiators
allite Bulbs
Fenner
Fan Belts
Ball Bearings
FERODO
Brake Linings and Clutch Facings
Lubrication Fittings
BORG & BECK
Clutch Spares
FRITZ
Filter Element
ABC
Roller Bearings
TEX
Wiper Arms and Blades
டிவிஎஸ் விநியோகிக்கும் உறுப்புகளை உற்பத்தி செய்வோரில் பெரும்பாலோர் தங்கள் தங்கள் துறைகளில் தலைசிறந்தவர். அவை நீண்ட நாள் உழைக்கும் என்பதில் ஐயமில்லை.
உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்
டி வி சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதுரை-திருச்சி-திருநெல்வேலி-புதுக்கோட்டை-சேலம்-கோயமுத்தூர்-திருவனந்தபுரம்
சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்,
மதராஸ்-பெங்களூர்; செகந்திராபாத் விசாகபட்டினம்
மதராஸ் ஆட்டோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்
மதராஸ்-பெங்களூர்-விஜயவாடா
TVS

லோர், "அந்தப் பயலைச் சும்மா விடக் கூடாது. புடியுங்க" என்று நாச்சியப்பனை நோக்கி விரைந்தார்கள்.

இதற்கிடையே கால் லேட்டு சுமந்து கொண்டிருந்த ஒருத்தி, "ஐயோ, அவரை ஒண்ணும் செய்யாதீங்க" என்று கத்திக் கொண்டே நாச்சியப்பனைப் பின்தொடர்ந்தாள். நாதசுவர வித்வான்கூட இந்தக் கலவரத்தைப் பார்த்து வாசிப்பைச் சற்று நிறுத்தினார்.

நிலைமையைச் சமாளிக்கத் தர்மகர்த்தா, "ஒன்றுமில்லே. ஊர்வலம் தொடரட்டும். கால் விளக்கெல்லாம் அம்மன் பல்லக்கருகே நகர்ந்து நில்லுங்க" என்று சொன்னார். புரவியாட்டம் இல்லாமலே ஊர்வலம் தொடர்ந்தது. புரவியாட்டக்காரர்கள் பிரிந்து ஆளுக்கு ஒருவராக நின்று வசைமாரி பொழிந்து கொண்டிருந்தார்கள்.

மூக்கிலிருந்து வழிந்த ரத்தத்தைத் துடைத்துக் கொண்டே, "இரு, உன்னைக் கவனிச்சுக்கறேன். என்னை இப்படி உதைச்சதுக்கு ஒன் காலை உடைச்சு மூலையிலே படுக்க வச்சிடறேன் பாரு. இனி மேலே நீ குதிரையாட்டம் ஆடுறதை நான் பார்த்துப்பிடறேன். பொய்க்கால் உனக்குத்தான் தேவைப்படப் போறது" என்று கூச்சலிட்டான் விநாயகம்.

நாச்சியப்பன் கோபமெல்லாம் இந்திராணி மேல் திரும்பியது. "வெட்கம் கெட்ட ஜன்மம். ஒரு நிமிஷம் நான் வரத் தாமதமாச்சன்னு இப்படியா அந்தப் பயலோட ஆடுவே? உன்னை வெட்டிப் போட்டால்தான் என் கோபம் தணியும்" என்று இந்திராணியின் முதுகில் நாலு அறை வைத்தான். இந்திராணி பெண் புலியானாள்.

குதிரையைக் கழற்றி வைத்துவிட்டு, "இந்தா, ஐயா! ஆட்டக்காரரே! பார்த்துப் பேசுங்க. என்னமோ என்னைக் குற்றம் சொல்றியே. உனக்கு வெட்கமாயில்லே? ஆட்டத்துக்கு முன் பணத்தை வாங்கிக்கிட்டுப் பொறுப்பில்லாமெ குடிச்சிட்டுக் கிடந்தது நீயா? நானா? உன்னாலே என் மானமே போச்சு. இனிமே எந்த முகத்தோடே ஜனங்களைப் பார்க்கிறது?" என்று கூவினாள்.

இடையே புகுந்த செல்லமுத்து, "என்ன அண்ணே இது? வெட்கக்கேடு. இப்படியா தெருவிலே சண்டை போடுவாங்க? ஜனங்க வேடிக்கை பார்க்கறாங்க பாரு. தங்கச்சி, நீயும் வாயை மூடு. வீட்டுக்குப் போய் மீதியைப் பேசிக்கலாம். கிளம்புங்க" என்று அவர்களை வீட்டுக்குப் புறப்படச் செய்தான்.

இரண்டு பேர் கைத் தாங்கலாகப் பிடித்துக்கொள்ளத் தடுமாறியவாறு நடந்தான் நாச்சியப்பன். அவர்களை ஒரு சிறு கும்பலும் பின் தொடர்ந்தது. வீட்டு முற்றத்தில் கிடந்த கயிற்றுக் கட்டிலில் நாச்சியப்பனைப் படுக்க வைத்து விட்டுக் கூடி நின்றவர்களை நோக்கி, "தயவு செய்து எல்லோரும் போங்க. கூட்டம் போடாதீங்க" என்று சொல்லி விட்டுக் கண்ணீருடன் நின்றிருந்த அந்த கால் லேட்டு தூக்கும் பெண்ணைப் பார்த்துச் செல்லமுத்து, "ஏ, பொம்புளே! நீ ஏன் இங்கே நின்னு கண்ணைக் கசக்கிக் கிட்டிருக்கே? வேலையைப் பார்த்துக் கிட்டுப் போ. என்னமோ புருஷன் பெண்டாட்டி சண்டை போட்டுக் கிட்டா அதை வேடிக்கை பார்த்துக்கிட்டு நிக்கிறியே!" என்று விரட்டினான்.

முகத்திலிருந்த அரிதாரத்தைக்கூடக் கலைக்காமல் அப்படியே அசந்து உட்கார்ந்து விட்டாள் இந்திராணி. அவளுக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. இப்படி நடுத் தெருவிலே கணவனிடமிருந்து அடி வாங்கியதை நினைக்க அவளுக்கு அவமானமாக இருந்தது. கட்டிலருகே கண்ணீருடன் நிற்கும் லேட்டு தூக்கும் பெண்ணைப் பார்த்ததும் கோபமாக வந்தது. "போ, அம்மே! உன் வேலையைப் பார்த்துக்கிட்டு. நீ எதுக்கு இப்போ ஒப்பாரி வைக்கிறே?" என்று எரிந்து விழுந்தாள்.

"கோபிச்சுக்காதே, அக்கா! கட்டின மனைவியையும், இரண்டு குழந்தைகளையும் தவிக்க விட்டுட்டு உல்லாசமா வாழும் கணவனைக் கண்டால் அந்த மனைவி அழாமெ வேறே என்ன செய்ய முடியும்?" என்றாள் அழுகைக்கிடையே. இந்திராணிக்கு யாரோ தலையில் அறைந்ததுபோல் இருந்தது. அதோடு அந்தப் பெண் அக்கா என்றும் உறவு கொண்டாடினால்? 'இவள் எனக்குச் சக்களத்தியா?' விஷயம் சரியாகப் புரியாமல் தவித்தாள் இந்திராணி.

"நீ முழிக்காதே, அக்கா! நானே சொல்லிடறேன். இவரு எங்க மாமன் மகன். முறைப் பெண்ணுனு எனக்குத் தாலி கட்டினாரு. இரண்டு குழந்தைகளும் பிறந்திடிச்சு. இவரு புரவியாட்டம் என்று வெளியூருக்குப் போய் வருவாரு. இப்போ இரண்டு வருசமா ஆளையே காணோம். நான் பிழைக்க வழியில்லாமெ இப்படி விளக்குத் தூக்கிக் கண்ணு முழிச்சுக் குழந்தைகளைக் காப்பாத்தறேன். இந்த ஆம்புள்ளே இப்படி உன்னையும் சேர்த்துக்கிட்டுக் கவலை இல்லாமெ ஆட்டம் போடுது" என்றாள் கண்ணீருடன்.

கட்டிலில் படுத்திருந்த நாச்சியப்பன் பேச்சுக் குரலைக் கேட்டு மெதுவாக விழித்துப் பார்த்தான். அவன் கண்கள் கோபத்தில் சிவந்தன. "ஏ, ஜவந்திக் கழுதை. நீ எங்கே இங்கே வந்தே? மரியாதையாப் போயிடு. இது பிறர் வீடு. இங்கே நின்னு கத்தினால் உன்னைச் சும்மா விடமாட்டாங்க" என்று அவளை நோக்கிக் கத்தினான்.

ஜவந்தி அவன் பக்கம் வந்து, "இந்தா, அய்யா! முதல்லே நீ பெத்த ரெண்டு குழந்தைகளுக்கு வழியைச் சொல்லு. அதுங்க கூழு கஞ்சி இல்லாமே தவிக்குதுங்க. நீ இங்கே ஆட்டம் போடறே. இத்தனை நாட்களும் கட்டினவள் குழந்தைகள் என்று நினைப்பில்லாமத்தானே இருந்தே?" என்று அவனைப் பிடித்து உலுக்கினாள்.

"சீ, சனியனே! இங்கே கத்தாதே. இந்திராணி! இவளைப் பிடிச்சு வெளியே தள்ளு" என்றான் நாச்சியப்பன். ஜவந்திக்குக் கோபம் தாங்க முடியவில்லை. "சீ, நீயும் ஒரு மனுஷனா? கட்டினவளுக்குச் சோறு போட யோக்கியதை இல்லாத ஆம்புள்ளே. இரு உம் புள்ளைங்களையும் கூட்டியாறேன். எங்களை ஒன் கையாலேயே கொன்னு குழி தோண்டிப் பொதைச்சிடு" என்று அழுதாள்.

இந்திராணிக்கு ஓரளவு விஷயம் புரிந்து விட்டது. நாச்சியப்பன் இப்படி ஜவந்தியை

அலட்சியப்படுத்துவதைக் கண்டு அவளால் பொறுக்க முடியவில்லை. நாச்சியப்பனை எரித்து விடுவது போல் பார்த்துவிட்டு, ''உங்களுக்கு வெட்கமாயில்லே, இப்படிக் கட்டின பெண்டாட்டியை அடிச்சு விரட்ட? நீ எங்கேயும் போக வேண்டாம் தங்கச்சி. இது உன் வீடு. உன் கொழந்தைங்களையும் அழைச்சுக்கிட்டு வா. நான்தான் சொல்றேன்'' என்று கம்பீரமாக உத்தரவிட்டாள்.

இந்திராணியின் வற்புறுத்தலுக்கு இணங்கித் தன் இரண்டு குழந்தைகளையும் அழைத்து வந்தாள் ஜவந்தி. எலும்பும் தோலுமாக நிற்கும் இரண்டு குழந்தைகளையும் பார்க்க இந்திராணிக்குப் பரிதாபமாக இருந்தது. பசித்த வயிறும், எண்ணெய்ப் பசை இல்லாத தலை மயிரும் தூக்கம் நிழலிடும் கண்களுமாக அந்த வீட்டையும், திண்ணையில் வைத்திருக்கும் பளபளக்கும் புரவிகளையும் மலங்க மலங்கப் பார்த்துக் கொண்டிருந்தன குழந்தைகள். ஜவந்தி சோர்ந்துபோய் உட்கார்ந்திருந்தாள். செல்லமுத்துவிடம் சொல்லித் தேநீரும் ரொட்டியும் பக்கத்துக் கடையிலிருந்து வரவழைத்துக் கொடுத்தாள் இந்திராணி. இதை ஒன்றும் தெரிந்து கொள்ளாமல் நாச்சியப்பன் போதையில் உறங்கிக் கொண்டிருந்தான். சிம்னி விளக்கு மட்டும் 'மினுக் மினுக்' என்று எரிந்து கொண்டிருந்தது. வயிறு நிறைந்து விட்ட திருப்தியில் குழந்தைகள் உறங்கிவிட்டார்கள். அழுது அழுது ஜவந்தியும் தூணில் சாய்ந்தவாறு தூங்கி விட்டாள்.

'இனிமேல் என்ன செய்வது? ஒற்றுமையாக இருந்த தம்பதிகளுக்குள் பிளவு ஏற்படக் காரணமாக இருந்த ஜவந்தி வேறு வந்து விட்டாளே. இது தொழிலையே பாதிக்குமே. ஜோடி பிரிந்து விட்டால் தொழிலுக்கு மதிப்புக் குறைந்து விடுமே. இதனால் நாமும் பாதிக்கப் படுவோமே?' என்றெல்லாம் நினைத்து யோசனையில் மூழ்கி ஒரு கட்டுப் பீடியையும் காலி செய்து கொண்டு உட்கார்ந்திருந்தான் செல்லமுத்து.

பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. ஒரு கோழி எங்கோ கூவியது. யோசனையில் ஆழ்ந்திருந்த இந்திராணி தூக்கம் கண்ணைச் சுழற்றவே தரையில் சாய்ந்து விட்டாள். களைப்பும் மன உளைச்சலுமாக எத்தனை நேரம் தூங்கினாளோ — அவளுக்கே தெரியாது. வெய்யில் உடம்பில் உறைத்ததும் கண்ணை விழித்தாள். போதிய உறக்கமில்லாமல் கண்கள் எரிச்சலெடுத்தன, மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தாள். கட்டிலில் எழுந்து உட்கார்ந்திருந்தான் நாச்சியப்பன். இரண்டு குழந்தைகளும் அவன் மேல் சாய்ந்து நின்று விளையாடிக் கொண்டிருந்தன. அவன் கையிலிருந்த அலுமினியத் தட்டில் இட்டிலி இருந்தது. அவனும் நின்று குழந்தைகளுக்கும் இடை இடையே ஊட்டிக் கொண்டிருந்தான். அடுப்பு புகைந்து கொண்டிருந்தது. கையில் ஒரு கிளாஸில் காப்பியுடன் முகமெல்லாம் புன்னகையாக வீற்றிருந்தாள் ஜவந்தி. இந்தக் காட்சியைப் பார்த்ததும் ஏனோ இந்திராணிக்குச் சற்றுப் பொறுமையாக இருந்தது. எப்படியிருந்தாலும் ஜவந்தி அவன் தாலி கட்டிய மனைவி, குடிபோதை தெளிந்ததும் அவனுக்கு மனைவி மக்களை இனம் தெரிந்து விட்டதனால் பாசம் ஏற்பட்டு விட்டது. பாவம், ஜவந்தி இத்தனை நாட்கள் எத்தனை கஷ்டப்பட்டிருப்பாள்? —இப்படியெல்லாம் ஓடியது அவள் சிந்தனை.

செல்லமுத்து வேகமாக வீட்டுக்குள்ளே வந்தான். அவன் முகத்தில் பயம் நிறைந்திருந்தது. ''அண்ணே! நீங்க ரெண்டு மூணு நாட்கள் வெளியே தலையைக் காட்டாதீங்க. அந்தப் பயல் விநாயகம் உங்களைக் கொன்னு போடுவேன் என்று கறுவிக்கிட்டிருக்கிறான். நேற்று நீங்க அவனைப் புரவி மேலே வச்சு அடிச்சீங்க பாருங்க! அந்தக் கோபம் அவனுக்கு. அடிபட்டு அவன் முகமெல்லாம் வீங்கியிருக்குது. பண்ணையார் வீட்டுச் சின்னத்தம்பி; தப்பட்டை மேளம் சோமு; வாண வேடிக்கைக்கார முத்தன் எல்லோரும் கூடி அவன் வீட்டிலே உங்களைப் பழி வாங்கத் திட்டம் போட்டுக்கிட்டிருக்காங்க. எனக்கென்னமோ பயமாயிருக்கு'' என்றான்.

இந்திராணியும் இதையெல்லாம் கேட்டுக் கொண்டுதான் இருந்தாள். இப்படி ஓர் எதிரி இருக்கும்போது தொழில் பண்ணுவது கஷ்டம் தான் என்று அவளுக்குப் பட்டது. நாச்சியப்பனுக்கும் சற்றுப் பயமாகவே இருந்தது. செய்வதறியாமல் கண்ணை மூடிப் படுத்திருந்த இந்திராணியை ''அக்கா, அக்கா!'' என்று தட்டி எழுப்பினாள் ஜவந்தி. ''என்னக்கா இப்படித் தூக்கம்? ஏதாவது சாப்பிடேன். இட்டிலியும் சர்க்கரைக் காப்பியும் இருக்கு'' என்றாள்.

இந்திராணிக்கு எதுவுமே பிடிக்கவில்லை. வீட்டுக்குள் அநாதையாக நுழைந்தவள் எப்படியோ ஒரே நாளில் எஜமானியாகிவிட்டாள். நாச்சியப்பனும் தன்னிடம் வந்து சமாதானம் செய்யவில்லை. நேற்று நடு வழியில் இப்படி அடித்துவிட்டு ஒரு நல்ல பேச்சுக்கூடப் பேசாமல் குழந்தைகளுடன் குலாவிக் கொண்டிருந்த கணவனைப் பார்த்து அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. ஆக, வீட்டில் தான் ஒரு தேவையில்லாதவளாக அநாதையாக ஆகி விட்டதுபோல் அவளுக்குத் தோன்றியது.

''என்ன இருந்தாலும் இந்திராணி அக்கா இப்படிச் செய்திருக்கக் கூடாது. அந்த விநாயகத்தோட போய்ச் சேர்ந்துட்டாளே'' என்று முகவாயில் கையைவைத்தாள் ஜவந்தி.

''விட்டுத் தள்ளு. என்ன இருந்தாலும் அவள் கூத்தாடிதானே? அவள் குணம் எங்கே போகும்?'' என்றான் நாச்சியப்பன், தன் குழந்தையை எடுத்துக் கொஞ்சியபடி.

செல்லமுத்துகூட ''இந்தத் தங்கச்சி இப்படிச் செய்திருக்க வேண்டாம்'' என்று சொல்லிக் கொண்டிருந்தான். ஆனால் தன் கணவன் உயிரை விரோதிகளிடமிருந்து காப்பாற்றத் தன்னைப்போல் ஒரு பெண் வாழச் செய்த தியாகம்தான் அது என்பது இந்திராணியைத் தவிர யாருக்கும் தெரியவில்லை.

'தனக்குப் பிழைக்க ஒரு கலை இருக்கிறது. பாவம், ஜவந்தி குழந்தைகளுடன் ஒரு துணை இல்லாமல் எப்படிப் பிழைக்க முடியும்? தவிரவும் என்ன இருந்தாலும் இரு பெண்கள் ஒருத்தனுக்கு மனைவியாக ஒரே வீட்டில் இருந்தால் சண்டை பூசல் என்று எழத்தான்


செய்யும். தான் விட்டுக் கொடுப்பதுதான் நல்லது' என்றுதான் விநாயகத்திடம் சென்றான். 'நாச்சியப்பனை ஒன்றும் செய்யக் கூடாது' என்ற நிபந்தனையின் பேரில் அவனுடன் ஆட இசைந்தான்.

மறுநாள் மாட்டு வண்டியில் தன் புரவியுடனும், விநாயகத்துடனும் ஆட்டத்துக்காக வெளி ஊரை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள் இந்திராணி. ஊரும் உலகமும் என்ன சொன்னாலும் அவளுக்குக் கவலை இல்லை. அவள் செய்தது பெரும் தியாகம் என்பது அவள் உள்ளத்துக்குத் தெரியும். அந்தத் தியாகத்தின் நிழலில் அவள் வாழ்க்கையை இழுத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தாள். இனிமேல், அவளுக்குத் துணை புரவியும் ஆட்டமும்தானே?

வட்டமேஜை

இந்தியர்கள் அதிர்ஷ்டசாலிகள்

அமெரிக்காவில் ஸான்பிரான்ஸிஸ்கோ பகுதியில் சுவாமி ரங்கநாதாநந்தா பல சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். வேலைகள் மிகுதியாக இருந்ததால் இவற்றில் பெரும்பாலானவற்றுக்கு நான் போக முடியவில்லை. பெர்க்லியிலுள்ள வேதாந்த சங்கத்தினர் ஏற்பாடு செய்திருந்த கேள்வி–பதில் நிகழ்ச்சிக்கு நிச்சயம் போக வேண்டும் என்று சங்கல்பம் செய்து கொண்டேன்.



சுவாமி ரங்கநாதாநந்தா

ஆகா! அந்த அநுபவம் தான் எத்தனை ஆனந்த மயமானது? அதை வர்ணிப்பதென்பது எவ்வளவு முயன்றாலும் முடியாத காரியமாகும். ''அமெரிக்க மக்கள் அவரை எப்படி வரவேற்றார்கள்'' என்பதிலிருந்து ''மரணத்துக்குப் பிறகு ஆன்மா என்னவாகிறது?'' என்பது வரையில் பலப் பல கேள்விக் கணைகள் ஸ்ரீ ரங்கநாதாநந்தாவை நோக்கித் தொடுக்கப்பட்டன. அனைத்துக்கும் சுவாமிஜி அற்புதமான சொல் லாகவத்துடன் பதில் அளித்துக் குழுமியிருந்தவர்களைப் பிரமிப்பில் ஆழ்த்தினார்.

மறு நாள் ஞாயிற்றுக்கிழமை. ஸான்பிரான்ஸிஸ்கோ, ''முதல் யூனிடேரியன் சர்ச்'' எனப்படும் தேவாலயத்தில் காலை பதினொரு மணிக்குச் சொற்பொழிவு நிகழ்த்துமாறு அழைக்கப்பட்டார் சுவாமிஜி. ''இன்றைய நவீன உலகில் புத்தர்'' என்பது தலைப்பு. சுமார் இரண்டாயிரம் மக்கள் சொற்பொழிவைக் கேட்கக் குழுமியிருந்தார்கள். ஊசி போட்டால் கேட்கும். அளவுக்கு நிசப்தம். அன்பு ததும்பும் மென்மையான ஓர் உருவம் பழங்காலத்திய நாற்காலி ஒன்றில் அமர்ந்திருக்கிறது.

நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்த பாதிரி சுவாமிஜியின் பெயரைத் தவறாக உச்சரிக்கிறார். புத்தர் என்ற சொல்லையும் அவர் சரியாக உச்சரிக்கவில்லை. சுவாமிஜியைப் பேசுமாறு கேட்டுக் கொள்கிறார்.

சுவாமிஜியின் மெலிந்த உருவம் மெல்ல எழுந்திருக்கிறது. அவர் ஒலிபெருக்கி முன் போய் நிற்கிறார். அடக்கமான குரலில் பேச்சைத் தொடங்குகிறார். புத்தரே எதிரே வந்து அமைதி நிலவும் தொனியில் நம்மிடம் பேசுகிறாரோ என்று நமக்குச் சில நிமிஷங்கள் தோன்றுகிறது.

போகப் போக — அவர் சொற்பொழிவு நீண்டு வளர வளர — ஒரு தத்துவஞானியை ஒரு விஞ்ஞானியை, ஒரு நண்பனை, ஒரு பேராசிரியரை, ஓர் அதிகாரியை, ஏழை மாணவனை — எல்லாரையும் அவரிடம் பார்க்கிறோம். இன்னும் பல கோணங்களிலும் அவரைக் காண்கிறோம். தமது சொற்பொழிவை அவர் தர்க்கரீதியில் அசைக்க முடியாத வாதங்களுடன் நிகழ்த்துகிற காரணத்தால் அவரது முதல் வாக்கியத்தைப் பார்த்தது போலவே (கேட்பது அல்ல!) அதே தெளிவுடன் இறுதி வாக்கியத்தையும் பார்க்கிறோம். அவரது சொற்பொழிவு முடிந்து விட்டாலும் அவரது வார்த்தைகள் நம்மைச்சுற்றி இருந்துகொண்டே இருக்கின்றன. சோப்பு போட்டுத் தேய்த்து உடலைச் சுத்தப்படுத்திக் கொள்வது போல், அவர் வார்த்தைகளால் நமது ஆன்மா சுத்தப்படுத்தப்பட்டதை நிதர்சனமாக உணர்கிறோம்.

இப்படிப்பட்ட ஒரு சுவாமிஜியை அடைந்திருக்கும் இந்தியர்கள் பேரதிர்ஷ்டம் செய்தவர்கள் என்று இங்குள்ள அமெரிக்கர்கள் நினைக்கிறார்கள்; வாய்விட்டுச் சொல்கிறார்கள்.

பெர்க்லி, அமெரிக்க ஐக்கிய நாடுகள் 2-2-69

ஆர். வி. எஸ். மணி
தலைவர்
பெர்க்லி தமிழ்ச் சங்கம்

இதயத்தில் இடம்

'நாடாளு மன்றத்தில் அண்ணா' என்ற கட்டுரை என் போன்ற பல்லாயிரக்கணக்கானவர்களின் இதயத்தில் இடம் பெற்றுக் கண்ணீர் பெருக்கெடுக்க வைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. திரு மாரிசாமி எம்.பி. அவர்களுக்கும், தங்களுக்கும் நன்றி.

தொடர்ந்து அண்ணா பற்றிய செய்திகள் வெளிவரும் என்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

உ. சிறுவயல்
13-2-69

ஆ. நாகப்பன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon